உ

கடவுள் துணை.

பெரியபுராணம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில்

ஒருவராகிய

# திருநாளைப்போவார்

என்னும்

## நந்தநார்சரித்திரக்கீர்த்தனையும்

சிதம்பரக்கும்மியும்.

இஃது

ஆனைதாண்டபுரம்-பாரதி

கோபாலகிருஷ்ணையரால்

இயற்றப்பட்டு.

சரவணபுரம்.

சண்முக முதலியாரால்

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளை யவர்களது

விவேகவிளக்க


அச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

டாக்டர் [illegible]

[illegible]ரியர்

[illegible]க்கமகம்





திருச்சிற்றம்பலம்.

# கனைநதியின் வரலாறு.


திருவெண்ணீறு தரித்தபரமசிவனார் திருக்கொலு வீற்றிருக்கு
ம் வெள்ளிமலையானது இமயமலையின் பக்கத்திலிருக்கின்றது அது
பெரியோர்கள் பரிசுத்த மனம்போலவும், படிகம்போலும் பலவுலகிற்
புண்ணியங்களெல்லாம் திரண்டிருந் தொருவடிவாகப் பிரகாசிக்கி
ன்றதுபோலுமிருக்கின்றது - அதில் இருக்கு - யச்சு - சாமம் - அத
ர்வணம் - என்னும் நான்குவேதங்களின்னோசையும், வித்தியாதரர்கள்
வீணையோசையும் யானைகளுடைய முழக்கமும்வானதுந்துமிமுழக்க
மும் இடைவிடாதிருக்கின்றன அன்றியும் தேவர்கள் சிரமாலைகளும்
கற்பகமாலைகளும் பற்பலமுனிவர்க ளஞ்சலிசெய்து சார்த்துமலாமா
லைகளும் அம்மலைப்பக்கங்களெங்கு நெருங்கி யிருக்கின்றன அதுஅ
மரர் - சித்தர் - அசுரர் - தைத்தியர் - கருடர் - கிம்பரர் - கிருதர் - கி
ம்புருடர் - காந்தருவர் - இயக்கர் - விஞ்சையர் - பூதர் - பைசாசர் -
அந்தரர் - முனிவர் - உரகர் - ஆகாயவாதிகள் - போக பூமியர் என்
னும் இப்பதினெண் கணங்களுந் துக்கப்படத் தக்கது அக்கயிலாயம
லையின்மேல் கோடாகோடி சூரியப்பிரகாசம்போலும் விளங்குகின்ற
நவமணிகள் பதிக்கப்பட்ட திருக்கோயிலுக்கு முதற்கோபுரவாயிற்கா
வற்றலைவர் நந்திதேவர் அவர் பரமசிவன் திருப்பணி விடைகளுக்கு
ந்திருக்கொலுவிற்கும் அதிகாரத் தலைவர் அவர் உடைவாளுமதிருப்
பிரம்பும்பெற்றுக் கைலையைக்காக்கப்பட்டவர் தேவர்முதலான யாவ
ருக்குமேலானவர் பரமசிவனிடத்து அதிகபத்தியும் அன்பு முடைய
வர் இவரால் இரவும்பகலும் இடைவிடாமல் காக்கப் பட்ட வெள்ளி
மலையென்னும் கைலாயத்தின் அடிவாரத்தில் எச்சமயங்களிலும்ச்ச
யசமயம் சைவசமயமென்றும் எக்கடவுளிலும் பரமசிவனே மெய்க்க
டவுளென்றும் அறிந்தவர் உபமன்னியமகாமுனிவர் இவர் கிருஷ்ண
னுடைய தலையின்மேல் தம்முடைய திருவடிகளைச் சூட்டினவர் இர
ப்பற்றிருக்கின்றவர் சிவனுடைய கிருபையால் திருப்பாற்கடலைக்குடி
த்தவர் சிவனிடத்திடைவிடா அன்புள்ளவர்.

இந்த உபமன்னிய மகாமுனிவர் தம்மிடத்தில் அடியார்களும்
பெரியோர்களும் முனிவர்களும் புடைசூழ்ந் திருக்கின்ற சமயத்தில்
அவ்விடத்தில் ஆயிரஞ்சூரியகிரணங்கள் ஒன்றாகத் திரண்டார் போ
லும் ஒருபிரகாசந் திரண்டுதோன்ற அங்கிருந்தவர்களெல்லோரும்உ
பமன்னியமகாமுனிவரைநோக்கி இம்மன்ன ஆச்சரியம் இப்படிப்ப
ட்ட பிரகாசந்தோன்றவேண்டியகாரண மென்னவென்று கேட்க உப
மன்னியர் சிவஞானியாகிக்குச் சொல்லுகிறார், தென்றிசையில் ஆக
ஊரில் அவதரித்த திருநாளைப்போவார் என்னும் திருநா
மம்பெற்றவர் சிவனது திருவருளால் வருகிறாரென்று இருமாமுனி

சிரமேற்குவித்து அத்திசையை நோக்கி வந்தனஞ்செய்து ஆனந்தக் கண்ணீர் அங்கமெங்குஞ்சிந்த உபமன்னியர்போகும்போது மற்றவர்கள்தங்களுக் குண்டாகிய சந்தேகந் தீரும்படி கேட்கத் தொடங்கினார்கள்.

எங்களாண்டவராகிய முனிவரே சிவனுடைய திருவடிகளை யல்லாமல் மற்றொருதெய்வத்தினடிகளையும் வணங்க மாட்டீரோ இப்பொழுது வணங்கவேண்டியகாரணமென்னவென்று முனிவர்கள் கேட்க உபமன்னியர் சொல்லுகிறார் கேளுங்கள் பெரியோர்களே முனிவர்களே மற்றுமுள்ளவர்களே பரமசிவன் தரிக்கப்பட்ட திருமாலையும் திருவெண்ணீற்றினையும் அணிகின்றவர் எள்ளிட மில்லாது நிறையும், கொள்ளிடநதிசூழ்ந்த சோழவளநாட்டிலிருக்கும் மேற்காநாட்டில் ஆதனூரில் தீண்டப்படாதவர் குலத்தில்சேற்றில் செந்தாமரையுற்பத்தியானாற்போலும் நந்தனாரொருவர் பிறந்தார் அவர் விவேகசூட்சியும் வெட்டிமைத்தனமாகிய காணியாட்சியும் சிவபணிவிடைகளில் மாட்சியும் சிவனடியாரைக்காணுங் கண்காட்சியும் உடையவர் இவர்குலாசாரத்தன்மையும் நன்மையுஞ்செய்து மனம்பெய்து தாஞ் சிவபூசை செய்து சிவாலயங்களுக்கு அறையும் பேரிகை மத்தளங்களுக்குத் தோலும் வாரும்யாழுக்கு நரம்பும் சுவாமிக்கு கோரோசனையும் முறையாகவும் இறையாகவும் கொடுத்துவருவார் சிவாலயத்தில் அந்திசந்தியிற்போய்த் தூரத்திருந்து மனங்கசிந்துருகிச் சிவனைப்பாடி யாடிவருகிறநாளில் திருப்புன்கூரில் பரமசிவத்தைத்தரிசிக்க ஆதனூரிலிருந்துவந்து திருக்கோயிலின் திருவாயிலினின்று சிவலிங்கதெரிசனைகாண ஆவலாகவும் காவலாகவும் வணங்கிப்பார்க்கையில் பரமசிவனார் சந்நிதிக்குமுன் இருக்கும் நந்திகேசுரனை விலகும்படிசெய்து காட்சி கொடுத்தருளினார்,

நந்தனார் சுவாமிதெரிசனைசெய்து வரும்வழியிலொருபள்ளத்தைக்கண்டு அதைப் பெருங்குளமாகவெட்டித் தம்முடைய ஆதனூரென்னுஞ் சேரிக்குப்போனார் இவ்வாறுபலதலங்களை வலஞ்செய்துநலஞ்செய்து ஆத்திமலரணிந்தசிவனையேத்திச் சிதம்பரத்திற்குச் செல்ல, மனம்வந்து தம்முடையசாதிகோவிலுக்குப்போக யோக்கியமில்லையென்று விசனமடைந்து நாளைக்குப்போவோமென்று சொல்லியிருந்தார் சிவபணிவிடையாலும் தன்னை யடிமைகொண்டிருந்த தேதியருத்திரவு தடையினாலும் போகக்கூடாமையால் அநேகநாள சென்றன, நாளைப்போவோமென்றபடியால அவருக்குத் திருநாளைப்போவாரென்று பெயர்வந்தது அதன்பிறகு திருநாளைப்போவார்-சிதம்பரம்வந்ததும் சுவாமிஅவருக்குக் காட்சிதந்ததும் இதனடியில்வரும் கொண்டிச்சிந்தினால் தெரிந்துக்கொள்ளலாம்,



உ

சிவமயம்.

# திருநாளைப்போவார் என்னும்

## நந்தனார்சரித்திரக்கீர்த்தனை.

### கற்பகவிநாயகர்- துதி.

காப்பு- வெண்பா.

கந்தன்றனையளித்த காதலனார்பேருபெற்ற
நந்தன்சரித்திரத்தை நானியம்பச் - சுந்தரஞ்சேர்
தில்லைமணிகோபுரத்திற் றேடிவளர்கற்பகத்தாள்
அல்லும்பகற்றுணையே யாம்.

### முக்குறுணிவிநாயகர்- துதி,

விருத்தம்.

நந்தணிகரத்தான்றில்லை நாயகனருளால்வந்த
நந்தன்முக்குறுணியான்றன் னளினபொற்றாள்வணங்கி
நந்தன்பேரருட்பாலுண்ட நற்புகழ்ச்சொலிப்பின்போர
நந்தமுற்றுலகினாளும் நலமுடன்வாழ்குவேனே,

### சபாபதி தோத்திரம்.

கலிவிருத்தம்.

தக்ககீர்த்திகொள் நந்தன்சரித்திரபா
மிக்கதையை யெடுத்தேவிளம்பிட

திருநாளைப்போவாரொன்னும்.

செக்கர்மேனியன் தில்லைச்சபைதனிற்
றக்கத்தோமெனுந் தாள்கள்சிரங்கொள்வாம்

சிவகாமிதோத்திரம்,

விருத்தம்,

பரம்பனைத்தந்தையாகப் படைத்துப்பின்பெவருங்காணப்
பாம்பினைப்பணியாக்கொண்ட பரையருட்பாதமேத்திப்
பாம்பினிற்புலியும்பாம்பும் பார்த்திடநந்தனுர்க்கன்
பாம்படிமுத்திதந்த வருங்கதைபகருவேனே

---

சுப்பிரமணியர்-தெய்வயானை-சரஸ்வதி- இலக்குமி
விஷ்ணு- இவர்கள் துதி.

விருத்தம்,

சச்சிதாநந்தசதாசிவனைச்சார்ந்த நித்தியாநந்தநந்தன்
உச்சிதக்கதையைக் கீர்த்தனையாக வுலகெலாந்துதித்திடச்சொல்ல
அச்சிலைவேற்கையறுமுகன்தெய்வ யானைசெங்கலைமகள்கமலை
பச்சைமான்மற்றும்பாவியதேவர் பாதபங்கயம்பணிகுவனே

சுக-நாயன்மார் தில்லைமூவாயிரவ ரிவர்கள் துதி

விருத்தம்.

வாதவூரடியாரோடு மற்றறுபத்துமூவர்
பாதமேவணங்கித்தில்லைப் பதிதனிநாளுமேவும்
போதமூவாயிரத்தோர் பொன்னடிக்கமலமுன்னி
ஓதுநந்தன்சரித்திர முரைத்திடத்துணிந்ததாமே

அவையடக்கம்.

விருத்தம்,

சிற்பிகளகாண்போர்சிந்தையுமுவக்கச் செப்புநல்லின்புறத்தீட்டும்-விற்பனங்கண்டவறிவிலானெழுதும் விதமெனமுத்தமி ழென்னுஞ்சொற்புகழ்கல்வித்துறையெலாந்தெரிந்த தூயநற்புலவர்முன் கருதிப்-பொற்புறவிசைக்குங்கீர்த்தனமிதனைப்புவியிசைமதிப்பர்களம்மா.

---

விநாயகர் துதி

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி,

கணநாதாசரணம் காத்தருளு
கணநாதாசரணம்

அநுபல்லவி,

பணைமார்சேடன்றாங்கியபார்மீதினிலே நெருங்
குணமார்நந்தன்சரித்திரங்கூறக்கிருபைகண் பாரும்(கண)

சரணங்கள்.

சொல்லும்ப்ரணவமூலா தூயவேதாந்த நாதா
துலங்குமுனிவர்மனத் துகளறுத்தருட் யோதா
நல்லமோதகமுதல் நாடிநுகர் விநோதா
நாயேன்சொல்லுந்தமிழை நாடிரட்சிக்குந்தாதா (கண)

அம்பரமானமன்று ளாடும்பர னளிக்க
அனைநொடியினில்வல மாகியனங் களிக்க
உம்பர்பிரானுகந்து வுயர்மாங்கனி யளிக்க
உளந்தளராமலுண்ட முதல்வதுய ரொழிக்க(கண)

தேசோங்காவரத்நச் சிகரமேலைக்கோ புரத்
தேவிற்றிருக்குமெங்கள் தேவாகுண்ட லாதர
பூசித்தவற்குவரம் புரிந்தருளு மாதர
பூமிசைநாடகஞ்செய்யுந்தவோ மாகர(கண)

புராணிகர்சொல்-விருத்தம்.

வளம்பெறுதருமமோங்கியவாத
னூரினில்வாழ்ந்திடும்புலையர்
உளமகிழ்ந்தெங்கள்குடிப்பெயர்விளங்க
வுதித்தநற்றீபமேமணியே
களங்கிலாக்கதிரோ யெனப்புகழ்ந்தோதக்
கதித்தசீர்நந்தனார்சரித்திரம்
விளம்பிடமுதலிற்றேடயம்படித்து
மேன்மையுமிகப்படித்தனனே.

தோடயம்,

இராகம்-நாட்டை-ஆதிதாளம்,

திருவளர்தருமாத னூரார் - சேறிரிலைக்குடிலவதாரர்
தருமநெறிநந்தனார்ப் பேரர் - சரித்திரமதனைச்சொல்லவே-ஆ-ஆ

அருள்வளர்கஜமுக சாமி - அம்பிகைதந்தருளுஞ்சாமி
அங்குசங்கரதல சாமி - அம்புயத்தாண் தந்துணையே- செய

வண்டணிமாமகார்த் தாரன் - மண்டலவாழ்த்தியதீரன்
மங்கும்வெளியபறகு ஞாரன் - மன்னுங்கதைசொல்லவே - ஆ - ஆ

புண்டரீகபுரத் தீசன் - புராரியுளமகிழுநேசன்
தண்டலர்மாமண வாசன் - தாமரைத்தாள்க டுணையே * செய

## மங்களம்,

### விருத்தம்,

சங்கரன்றனக்கும் சண்முகன்றனக்கும் சதுர்முகப்பிரமனுர்தனக்கும்-பங்கயமாற்கும் வாமனையாட்கும் பார்கட்பாவலர்தமக்கும்- தங்கிடவட்டவசுக்களானவற்கும் சதுர்மறையோதுமந்தணற்கும்- பொங்கியமூவாயிரர்நந்தனுற்கு ம்பொதுப்படமங்களம்புகல்வாம்,

### தரு-இ-ம்-அசாவேரி-அட்தாளம்,

பல்லவி,

ஆதிமத்யாந்தனுக்குமங்களம் எங்கள
ஆநந்தாநந்தனுர்க்கு மங்களம்

அநுபல்லவி,

பாதிமதிநதியும்பாம்பும்புலி யுரியும்
சோதிக்குழையணியுந்துலங்கவருட் புரியும் (ஆதி)

சரணங்கள்,

சிலையைவடிவழகிற் சிறந்தவொருபெண் ணுக்கி
சிலைவளைத்தபரசி-ராமன்கெர்வத்தைப் போக்கி
மலையைச்சுமந்துபெரு மடுவிலொருகாற் றூக்கி
மாநடநங்கள்செய்த மாயமானினை யெய்த (ஆதி)

குருபராநாதருக்குங் குறமகட்பாக ருக்கும்
அருணகிரிநாதனுக்கும்அருள்செய்விசாக ருக்கும்
ஒருமுருகாவென உளங்களித்தவ ருக்கும்
உம்பர்கோனுக்கந்த வுயராசினைத் தந்த (ஆதி)

சக்கரைமுக்கனியவல் தனைநுகர் நாதற்கும்
சகலதேவர்தமக்குஞ் சகலவசுக்க ளுக்கும்
பக்குவமாகவிதை பாடுஞ்சங்கீத ருக்கும்
பார்மகட்கும்பங்கயப்பாவையர்கட்கும் விஜைய (ஆதி)

### பெரியபுராணச்செய்யுள் விருத்தம்,

திருமறையோர்புராணமவைபதின்மூன் றுசிவவே
தியரானைவழிப்பட்டபுராணமீரிரண்டு
குரைகழன்மாமாத்திரரொன்றறுவர்முடிமன்னர்
குறுநிலமன்னவரைவாவணிகர்குலத்தைவ

திருமைநெறிவேளாளர் பதின்மூவரிடையர்
இருவர்சாலியர்குயவர் தயிலவினையாளர்
பரதவர்சான்றோர்வண்ணார் சிலைமறவர்நீசர்
பாணரிவரோ டொருவராம்பகருங்காலே.

உபமன்னியபகவான்-ரிஷிகளுக்குச்சொல்லிய-வசனம்.

இவ்வுலகில் பெரிதாகிய வேதசாஸ்திரங் களுக்குள்ளே மிகவுஞ் சாரமாகிய பரமசிவபத்தியை யுண்டுபண்ணுகின்ற பத்திவிசாலத்தைஉபமன்னியபகவானானவர் அநேகரிஷிகள் கேட்கச்சொல்லுகிறார்பெரியபுராணமென்று சொல்லப்பட்ட நூல் சேக்கிழார் சுவாமிகளாலே செய்யப்பட்டது ஸ்காந்தபுராணத்திலும் இன்னமனேக புராணங் களிலுஞ் சொல்லப்பட்ட பத்திமார்க்கங்களாகிய கடலிலே நீராக்கையாலள்ளிக் குடித்தது போலச்சிலகீர்த்தனங்களினாலும், விருத்தங்களினாலும், சிவபத்தர்கள்சரித்திரங்களைக்கொண்டாடுவதுபோல உளறினேனென்று சிதம்பரம் கோபாலகிருஷ்ணையன் பெரியோர் அடிவணங்கி ஆனந்தம்பெருகிச்சொல்லிய திருநாளைப்போவார் சரித்திரத்தையாவரும்வினவிக்கேட்கும்படி சிரம்வணங்கிவினவினேன், பாரதம்-பாகவதம்-பகவற்கீதை சிவரகசியம் ஸ்காந்தமுதலாகியபத்திஞானவயிராக்கியசாஸ்திரங்களிலே மிகவுஞ்சாரமாகிய பரமசிவபத்திபண்ணாமல் இதரவேத பாரங்கதனாயிருக்கின்ற பிராமணனைப்பார்க்கிலும்பரமசிவபாதாரவிந்தபத்திபண்ணுகிறவன் பறையனாயிருந்தாலும் பதினான்குலோகத்தையும் பரிசுத்தம்பண்ணுவானென்று உபமன்னியபகவான்சொல்ல அதற்கு ரிஷிகள்சொல்லுகிறார்கள் பத்திஞானவயிராக்கியங்களைத்தெரியப்படுத்தாநின்றவேதபுராணங்களைப்பார்க்க அறியாராம், அன்றியில்அவிவேகிகளாயிருக்கிறசண்டாளர்களுக்கு எப்படிபத்திவருமென்றுரிஷிகள்கேட்கஉபமன்னியபகவான்சொல்லுகிறார்,

உபமன்னியபகவான் - ரிஷிகளுக்குச்சொல்லுகிறார்.

தொண்டிச்சிந்து-இ-ம்-புன்னாகவராளி.

மழுனமருங்கணையும்-புலைப்-பாடியதுகூரைவீட்டினில்- சுரையோபடர்ந்திருக்கும்-அதை- சுற்றிலும்நாய்கள் குலைத்திருக்கும் - பறந்தோடிவட்டமிடும்-இளம்-பச்சைப்பிசிதமே லிச்சைகொண்டு- கோழிகூவுங்கூக்குரலும்-பாழுங்- கொல்லையருகினில் வெள்ளெலும்பும் - நரம்புங்குவித்திருக்கும் - பல-வெட்டியிதகிடுங் குட்டைகளில்- கண்டோகுடியிருக்கும்-சிறு-நத்தைகமடம் வலுத்திருக்கும்-தோராறுங்கேணிகளில்-வெகு - தொல்லைப்படும்வாடை சொல்லரியாது - பறம்போ அடித்திரு

க்கும் - வயற்-பக்கங்களில் மெத்த நொக்கெலும்பும் - கிழித்தோல் நரம்புகளும்-அவர்-கீனமில்லை சிறுமீனுலரும் - தெருவில் விளையாடிக் கொண்டு-அவர் - தெந்தினம்பாடுவோர் சுந்தரமாய் இலுப்பைமணியரையில்-கட்டி - இண்டந்தலைகளில் பூண்டிருக்கும் - சங்குதோடு காதணியும்-அருக்-காவடமே யவர்துவிடமாய்-மணியோதரித்திருப்பார்-தெரு-வாசற்புறந்தனிலேசிக்கொண்டு - கொண்டாட்டமாயிருப்பார் - கையைக்கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன் - மதுவுண்டு கெக்கலிப்பார்- பறை-வாத்தியமும்-வெகு நேத்தியுடன்-இருக்கும்புலைப்பாடி- அதில்-ஈசன் திருவடிநேசமுடன் தரிக்கும் ஒருபுலையர் - அவர்- சாதிமுறைமை தவறுதவராம்-நந்தனாரவர் பெயராம்-வெகு- நல்லவராமிந்தத் தொல்லுலகில்-அவரே சிவனடியார் - அவர்க்-காருமெதிரில்லை தாரணியில்- கோடி கோடி ஜென்மங்களோ-முன்னங் குற்றமறச்செய்த நற்றவமே- அவதாரமானதுவோ-ஈசன்-அன்புபுரியும் பேரின்பசுகம் - கொள்ளைகொள்ளவோபிறந்தார்-திருக்கோயில் - வலஞ்சுழன்றுவலுடன் செய்யும்பணிவிடைகள் - ஈசன் - சிந்தைமகிழ்ந்து குளிர்ந்திடவே-மத்தளபேரிகைக்கும்-இசை-வார்கொடுத்துப் புறந்தோல்கொடுத்து- மறவாமலே தினமும்-நல்ல-வாசம்பெருகுங் கோரோசனையும் - தேவாலயங்கள்தோறும்-தந்து-சித்தமுருகிய பத்திவெள்ளம்-பொங்கோடிக் கங்குகரை-என்று-பேதமறிய வொண்ணுதுகண்டீர் - சாதியில்நீசனவர்-பேணிச்-சாருந்தொழின்முறை யாருமபுகல்-திருப்புன்கூர்ச் சென்றரனைக்-கண்டு - சேவித்திசைபாடிப் பாவித்தபின்-தில்லைச்சிதம்பரத்தைக்-கண்டு- சேவிக்கவேண்டுமென் றுவலுடன்-நாளைப்போவே னென்றாராம்-தன்னை- நாடும்பறையர்களோடிவந்து அண்ணே நீ போகாதே - நமக்- காணடைபொல்லாதவன்-வேண்டிக் கொள்ளான் - பாப்பார சாதியுண்டே-என்ன-பாடுபடுமுழுக் காடுமங்கே - நமக்குந்திருநாளோ-அந்த - ஞாயமுண்டோவென்னமாயமிது-வென்றே தடைசெய்தார்- சிவன்-வேடிக்கைத்தானென்று நாடிக்கொண்டே - அறியாதுபோலிருந்த- செம்பொன்-னம்பலத்தாடியைக்கும்பிடவே - ஆதனூர்தனிலிருந்து- விடும் - அம்புபோலப்பறந் தையமின்றித் - தில்லையருகில்வந்தார் - மனந்தேறிக்கொண்டார்-குறையாறிக்கொண்டார் - கெண்டா மணியோசை - காதில் - கேட்குதென்றுரதைப் பார்க்கவென்றே - கொண்டாட்டமாகிவந்தார்- கையைக்-குவித்துக்கொண்டேதனக் கம்பிட்டதோ - வென்றே மனமகிழ்ந்தார்-தெரு - வீதியிலேவந்துகாதலுடன் - கண்டார்களையாறி- இரு-கண்களிலானந்தம் பொங்கிடவே - நின்றார்மதிற்புறத்தே-வெகு - நேத்தியென்றுரிதைப் பார்த்ததில்லை - பணிந்தார் பரவசமாய்-நல்ல-பாக்கியசாலிகளாகுமென்றார்- இதுதானோ தில்லைப்பதி - என்று - எக்கலித்தாராடிக் கெக்கலித்தார்-ஐயாவுன் சந்நிதியோ-நான்-ஆசைகொண்டுவந்தே னேச

முட்டன்-தெருவில்பொடித்தூளை-அள்ளித்-தேகமுழுதிலுந் தாகமுட்டன், தரித்தார்திருநீறாய்-நாலு-சாஸ்திரவேதங்கள் பார்த்துணரும்-பெரியோரிருக்குமிடம்-இந்தப்- பேயனிருப்பது ஞாயமல்ல- நானோபறைச்சாதி-இல்லை-நாதன் தரிசனமாதரவாய்ப் - பண்ணுப்படுபாவி- இந்தப்-பாரிலிருப்பது சீரல்லவே என்றேகுளத்தோரம்-புக்கி-ஏங்கினின்றார்- துயர்தாங்கினின்றார் ஓயாப்பெருங்கவலை-கொண்டு- உள்ளங்குழைந்திட வெள்ளமெனக் கண்ணீர்கரைபுரள-இரு-கைதொழுகாரவர்மெய்தொழுதார்-கீழேபுரண்டழுதார் - ஒன்றுங் கேள்விமுறையில்லையோ நாதா, வென்றேதலைகுனிந்தார்- எந்தன்-வேதனையைக்கண்டு ஆதரிக்குந்-தெய்வமிங்கில்லையாதோ-பாவி-சித்தந்தெளிய விரத்திகந்து, வாவென்றழைப்பாரோ விண்ணில்- வானவர்கள்போற்று மூனமிலாக்- கனகசபைநடனம்-கண்ணிற்-காட்டக்களித்திட நாயடியேன் - வருந்தித்துதிப்பேனோ- எந்தன்" வானுளுருகுதுவிணையே-அடடா யிதென்னவென்று- உயர்-அந்நகர் வீதியைச்சுற்றிவந்தார்-இரவும்பகலோயா-ரதை-ஈசன் கண்டுவிசுவாசமுடன்-பாலகிருஷ்ணன்பணியும்- திருப்-பாதமுள்ள தில்லைநாயகனே, கனவிலுருவாகி-வந்து- காட்சிகொடுத்துக் கடாட்சித்தபின், எரியினிடைமூழ்கி-வெகு-இன்பம்பெருகியஅன்பருடன், வேதமுனிவடிவாய்த்தில்லை-வேதியர்வேதியர் கைதொழுதார்-அங்கம்புளகிதமாயச்- செம்பொனம்பலத்தாடிய சம்பிரமத்தைக்-கண்டாரறிந்திலரால்.

கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.

பல்லவி.

நீசனாய்ப்பிறந்தாலும் போதும்
ஆசையுடனம்பலவனடியிலிருந் தாலும் (நீசனாய்)

சரணங்கள்.

கோதிலாத்தவங்கள் புரிந்தாலும்-தங்கள்
குலவண்மைதவறாதநெறியி லிருந்தாலும்
வேதமுடியாவுமுணர்ந் தாலும்-மாயை
விலகாதுஒருநாளுந்துலையாது துன்பம்(நீசனா)
களவுகொலைசெய்து வந்தாலும்-பழிக்
காரருடன்என்னேரங்கூடியிருந் தாலும்
வளமறவேவாழ்வுகெட் டாலும்-நல்ல
மனிதனவனிடமாகமறலியணு காது (நீசனா)
ஏத்தகருமங்கள்செய் தாலும்-எங்கு
மிடையாதகொடையாளியெனவிருந் தாலும்
கோத்திரக்கீர்த்திமிகுந் தாலும்-எங்கள்
கோபாலகிருஷ்ணன்தொழும்பாதம்நினை யாதோன (நீசனா)

வசனம்.

இப்படியே பத்தி செய்தால்போதும் மற்றசாதி வருணாச்சிரமங்களினாலே ஒன்றும் பிரயோசனமில்லையென்றும் ஒரு இதிகாசத்தைச் சொல்லுகிறார் பூர்வத்திலேதில்லைவெட்டியானென்றும், சாம்பனென்றும், ஆதனூர்நந்தசாம்பனென்கிற திருநாளைப் போவாரனென்றும் பெயர் பெற்ற இம்மூன்றுபேர்களுந் திருச்சிற்றம்பலத்தை அடைந்தார்கள். இம்மூன்றுபேர்களில் நந்தசாம்பனென்பவர் மாத்திரம் தில்லைமூவாயிரம்பேர்களும்பார்க்கச் சபாப்பிரவேசமானாரென்றுசொல்ல ரிஷிகளெல்லாரும் ஆனந்தமடைந்து உபமன்னிய மகாரிஷியைப் பிரதக்ஷணஞ்செய்து பாடிவணங்கி அஞ்சலிசெய்து ஓய்சுவாமி எல்லோரும் பார்த்திருக்கையில் முத்தியடைந்த திருநாளைப்போவாரென்னும் பெயர்படைத்துப் பேறுபெற்ற சிவபத்தருடைய சரித்திரத்தைச் சொல்லுங்களென்று ரிஷிகள் பிரார்த்தித்துக் கேட்கும்போது உபமன்னியமகாரிஷியானவர் மிகவுஞ் சந்தோஷமடைந்து ஈஸ்வரனுடைய குணங்களை வர்ணிப்பதைப் பார்க்கிலும் ஈஸ்வரபத்தர்களுடைய குணங்களைச்சொல்லுகிறது மெத்தவும் புருஷார்த்தமென்று சொல்லத்தொடங்கினார். சிதம்பரத்திற்கு நாளைப் போவேனென்று சிலநாள் நந்தன் சொல்லிவந்தபடியால் நந்தனுக்கு நாளைப்போவாரென்று நாமதேயமுண்டாச்சுது ஆகிலும் ஈஸ்வரனுடைய குணங்களைச் சொல்லினாலும் சொல்லலாம் பத்தர்களுடைய குணங்களைச்சொல்ல யாவர்க்குந் தெரியாது தெரிந்தமட்டுஞ் சொல்லுவோமென்றுமயிர்சிலிர்த்து ஆனந்தக்கண்ணீர்வடித்து மனங்களித்துப்பரமசிவனை நினைத்துவாயால்துதித்து ஆத்துமா ஆத்துமிகளாயிருக்கின்றதாபத்திரயங்களினாலே வருத்தத்தையடைந்திருக்கின்ற செந்துளுக்கு அமிர்தவருட்சிதம்போலே நந்தனாருடைய புண்ணியத்தால் அமிர்தத்தை வருட்சிக்கத்தொடங்கினார்.

கீர்த்தனம்-௩-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தன்சரித்திரமானந்தம் ஆனாலுமத்தி
யந்தம்பக்திரசகெந்தஞ் சொல்லச்சொல்ல (நந்தன்)

நந்தன்சரித்திரம்வெகு அந்தஞ்சிவனாருக்குச்
சொந்தத்துலையும்பவ பந்தம்கேட்டபேர்க்கு (நந்தன்)

ஏது-இவனைப்போலே-சாது-பூமியிலிருக்
காது-அரிது-இரு-காது-படைத்தபேர்க்கு (நந்தன்)

வாடிமனதிளகிப்பாடி அரகராவென்
றாடி-கனகசபை-நாடிச்சேருவேனென்ற (நந்தன்)

அண்டர்கொண்டாடுஞ்சோழமண்டலந்தனைச்சூழக்
கொண்ட-மேற்காநாட்டில்-விண்ட ஆதனூரிலவாழ் (நந்தன்)

கீர்த்தனம்-இ-ம்-கமாசு-ஆதிதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவான்சரித்திரம்
தேனிலும்பாலிலுமினியதுகணமடர் (திருநா)

சித்தமுருகியசிவயோகிகளுக்
கர்த்தமிதுவென்றனுதினம்பணியும் (திருநா)

மேதினிபுகழுமாதனூர்-விளங்கவந்த-மாதவஞ்சாதனைபெருகிய
பேதமிலாதவன்வேதகுருபராதனைப்பணியும் (திருநா)

மனதில்குற்றமில்லாதவன்நிந்தைவஞ்சனைமாய்கைசொல்லாதவன்
கனவிலும்நினைவிலும்-சிவபதம்குருபதம் (திருநா)

கருத்துனாகளித்திடப்-பெருத்திடவரசனும்
சாதிமுறைமைதவறாதவன்-பவ-சாகரத்திடைமுழுகாதவன் (திரு)

பூதமயாதிக-ளாகியவுலகம்
பொய்யிதுமெய்யிதுவல்லவென்றறிந்திடும் (திருநா)

பெரியபுராணச்செய்யுள்

விருத்தம்.

நகர்ந்துலகுசீர்போற்றும்பழையவளம்பதியாகும்
திகழ்ந்தபுனற்கொள்ளிடம்பொன்செழுமணிகடிணக்கரத்தாஞ்
முகந்துதரவிருமருங்குமுளரிமலர்க்கையேர்க்கும்
அகன்பணைநீர்நன்னாட்டுமேற்காநாட்டாதனூர்.

வசனம்.

கொள்ளிடத்துக்குச் சமீபமாகிய உலகமெல்லாம் புகழும்படிக் கீர்த்தி பெற்றிருக்கின்ற அமராபதி அளகாபுரி பட்டணத்தைத்தோற்கச் செய்யும் மாடமாளிகை கூடகோபுரத் தெருவீதி அணி[illegible] வெள்ளா

ட்டிகள் வேலைசெய்யும் செல்வத்தோடும் வேதவேதாந்த தத்துவஞானமறிந்து சாட்சாத்காரம்பெற்ற வேதியரோடுமற்றுமூன்றுவருணச்சிரமங்களாலே சூழப்பட்டு பூலோகத்திலதிகமென்று சொல்லப்பட்ட ஆதனூரென்னும் கிராமத்துக்கு வெளியில் நஞ்சைநிலங்களாலே சூழப்பட்டிருக்கின்ற கடைசாதியர் குடியிருக்குஞ் சேரியைக் கொண்டாடிச் சொல்லுவார் ஏனென்றால் ஸ்காந்த புராணத்தில் அஞ்சுபோககண்டத்திலே சிவபத்தன் குடியிருக்குஞ் சேரியைக் கைலாசமென்று வருணித்துச்சொன்னபடியால் உபமன்னியபகவான் மிகவுங்கொண்டாடிச்சொல்லுகிறார்.

சிந்து.

பழனமருங்கணையும்-புலைப்-பாடியது கூரைவீடுதனில்- சுரையோ படர்ந்திருக்கும் அதைச்-சுற்றிலும்-நாய்கள்குலைத்திருக்கும்பரந்தோடி வட்டமிடும்-இளம்-பச்சைப்பிசிறைதமே விச்சைகொண்டு- கோழிகூவுங் கூக்குரலும், பாழுங்-கொல்லைபருகினில் வெள்ளெலும்பும், நரம்புங் குவித்திருக்கும், பல-செட்டிமிதந்திடுங் குட்டைகளில்-நண்டோகுடியிருக்கும்-சிறு-நத்தைகமடம் வலுத்திருக்கும்-தோலூறுங்கேணிகளில், வெகு-தொல்லைப்படும்வாடை சொல்லறியாப்-பாம்போ அடித்திருக்கும்வயற்-பக்கங்களில்மெத்தநொக்கெலும்பும்-கிழித்தோல்நரம்புகளும்- அவர்க்-கீனமில்லை சிறுமீனுலரும்-தெருவில் விளையாடிக்கொண்டு-அவர்-தெந்தினம்பாடுவார் சுந்தரமாய்-இலுப்பைமணியரையில்-கட்டி-இண்டந்தலைகளில் பூண்டிருக்கும்-சங்குதோடுகாதணியும் - அருந்-தாவடமேயவர்தூவிடமாய், மணியோதரித்திருப்பார்- தெரு-வாசற்புறந்தனிலே சிக்கொண்டு-கொண்டாட்டமாயிருப்பார், கையைக் கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன்-மதுவுண்டு கெக்கலிப்பார்-பறை-வாத்தியமும் வெகு நேத்தியுடன் - இருக்கும்புலைப்பாடி- அதில்-ஈசன்திருவடி நேசமுடன்-தரிக்கும் ஒருபுலையர்-அவர்-சாதிமுறைமை தவறாதவராம்- நந்தனாவர்-பெயராம்.

வசனம்.

இவ்விதமாய்க் கடையரிருப்பின் வரப்பினில் வாழ்வார்இப்பரிவுடன் சிவன்கழற்கேவிளைத்த வுணர்வோடுமந்தராபத்திலூற்புலமையாண்டதொழிலனு மயத்திலொப்பிய நந்தனொருவருண்டாயிருக்கும் புலைப்பாடியில் பரமசிவபாதாரவிந்தத்தில் மிகுந்த அந்தரங்கம்பொருந்தினவராகிய நந்தனர் மிகபத்தி புரிந்திருந்தார்வீச்சுடன் சேற்றில் விழுந்தாலும் பிள்ளைப்பூச்சிமேல் சேறொட்டாது அத்தன்மை போல் எத்தனை காரியமிருக்கினும் முத்தியளிக்கும் கர்த்தனாகிய அத்தனை தனது சுத்தமாகிய சித்தத்தில்நிரமுமவைத்து உத்தமயுக்தி பெற்றிருந்தார், மற்ற

துமறந்தார். உற்றதுமுணர்ந்தார். இப்படியெல்லாமிருந்தும்நல்லகுண மில்லாமற்போனால் உலகம் பொல்லாங்குசொல்லுமல்லவா.

சிந்து.

இவர்வெகு-நல்லவராமிந்தத்தொல்லுலகில்-அவரேசிவனடியார்.

வசனம்.

என்றுஆச்சரியங்கொண்டு சொன்னபடியினாலே இவரைப்போலபத் திமார்க்கத்தில் மிகுந்தவராயிருந்தவர் ஆரிருக்கிறார் ஆரிருப்பார் என்று இணைசொல்லப்போகாதஇணைகடந்த பரமசிவபத்திமானென்று சொல்ல ப்படும்.

சிந்து.

அவர்க்-காருமெதிரில்லைதாறணியில்-கோடிகோடி செனமங்களோ முன்னங்-குற்றமறச்செய்தநற்றவமே, அவதாரமானதுவோ-ஈசன்அன் புபுரியும்பேரின்பசுகம், கொள்ளைகொள்ளவோபிறந்தார் திருக்-கோயில் வலஞ்சுழன்றுவலுடன், செய்யும்பணிவிடைகள்.

பெரியபுராணச்செய்யுள்.

விருத்தம்.

ஊரில்விடுபறைத்துடவையுணவுரிமையாக்கொண்டு
சார்பில்வருந்தொழில்செய்வார்தலைநின்றார்தொண்டினாற்
கூரிலையமுக்குடுமிப்படையண்ணல்கோயிறொறும்
பேரிகையேமுதலாயமுகக்கருவிபுறவினுக்கும்
போர்வைத்தோல்விசிவாறென்றினையனவும்புகலுமிசை
நேர்வைத்தவீணைக்கும்யாழுக்குநிலைவகையாற்
சேர்வுற்றதந்திரியுந்தேவர்பிரானர்ச்சனைகட்
கார்வத்தினுடன்கோரோசனையுமிவையளித்துள்ளார்.

வசனம்.

இந்தப்பிரகாரம்நந்தனார் சிவஸ்தலங்கள்தோறும்போய்சுவாமியை த்தோத்திரஞ்செய்கிறதெப்படியென்றால்.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

செந்தாமரைமலர்சூழோடைகளுமேடையும்
செறிந்தமலர்க ளாட்டம்-சிறந்தவேளூர்
எந்தபிரானுக்கபி-ஷேகக்கோரோசனைமற்
றீந்தொழிந்தார்மன வாட்டம்
சிவசரவணமூர்த்தி ஞானசம்பந்தரானத்
திருவவதார மாக-வந்தசீர்காழி

புவனரட்சகன்றிரு-சிலைநாயகியையேத்திப்
　　பூரித்தார்வெகு　　　　　　　　　　　　　　வாகு
இருபொற்புறமுமதி-ளோங்கியமாயூரத்
　　துவந்தவிஸ்வநா　　　　　　　　　தீசனை-மிகத்தொழுது
ஒருமுகக்கருவிக்குத்-தோல்நரம்பிலைவதந்தா
　　ருலகிற்புகழவுந்தன்　　　　　　　　　　பெயரை
உமையொருபாகத்திலுயர்பரமன்றரும
　　னொருபசுவுங்கன்　　　　　　　　　　ருக-மாயவேட்கு
சமைந்துப்பின்மனுநீதிச்-சோழன்றனக்குக்காட்சி
　　தந்தவாரூர்சென்றான்　　　　　　　　　　பாக

---

வசனம்.

பின்னும்நந்தனார் தாம்செய்யுந் தருமமேதென்றால் இவர் புலையரானபடியால் சிவஸ்தலங்களுக்குப்போய் வீதியைச்சுற்றி சந்நிதியில் வந்து தடிவிழுந்ததுபோல உடல்பணியப்பணிந்து புழுதியில்புரண்டுமெய்சிலிர்ப்பக் கண்ணீர் ருதிர்ப்ப வாய்குளறி உரைதடுமாறி ஒருதரமழுது ஒருதரந் தொழுது எக்கலித்து கெக்கலித்து ஒருதரஞ் சிரித்து ஒருதரம்வெறுத்து சகமறந்து அகமிழந்து அனல்கண்ட மெழுகதுபோலுள்ளமுருகி ஆனந்தவெள்ளம்பெருகி கண்ணீர்கருகிச் சிவனேசிவனே யென்றுவாய்வலிக்கப்பேசி கைவலிக்கக்கொட்டி கால்வலிக்கக்கூத்தாடி சிறபவரொரு முகூர்த்தஞ் சித்திரத்தி லெழுதும் பதுமைபோல் கண்ணிமையாமல் வாயசையாமல் கையசையாமல் காலெழாமல் வாசியசையாமல் ஓசைதெரியாமல் அலையடித்தோய்ந்தகடல்போலநிறைந்து தன்னைமறந்திருப்பார் தன்நினைவுவந்து பரவசந் தெளிந்து ஈசனைப் பணிந்துகொண்டுவந்த பணிவிடைசெலுத்தக் கோவிலார்கேட்கக் கும்பிட்டுச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இம்-ஆனந்தபைரவி- ரூபகதாளம்.

பல்லவி.

வாரிருக்குதுதோலிருக்குதுவாங்கிக்கொள்ளுவீரோ-மத்தளங்கள்
பேரிகைக்கும்வீணைக்கும்நல்லவிருக்கிக்கட்டும்விசை　　　　(வாரிருக்)
பேரிருக்குதுபோதுஞ்சிவன்-பெருமையைக்கொண்டாடிதினமுஞ்
சீருறைகின்றதில்லைப்பதியில்-சேருதற்குபாயந்தேட　　　　(வாரிருக்)
சிறியவனான்சாதியொன்று-மறியாதவனேனை
சிவபெருமானுக்கடியேன்செய்யும் பணிவிடையிது　　　　(வாரிருக்)

சிந்து.

செய்யும்பணிவிடைகள் - ஈசன் - சிந்தைமகிழ்ந்து குளிர்ந்திடவே
மத்தளபேரிகைக்கும் - இசை - வார்கொடுத் துப்புறந் தோலகொடுத்து

மறவாமலேதினமும்-நல்ல-வாசம்பெருகுங் கோரோசனையும்-தேவாலயங்கள்தோறும்-தந்து-சித்தமுருகியபத்திவெள்ளம், பொங்கோடிக்கங்குகரை, என்று-பேதமறியவொண்ணாதுகண்டீர், சாதியில்நீசனவர்.

வசனம்.

இப்படி பக்திசெய்யாகின்ற நந்தனாருடைய வரலாறேதென்றால்.

கீர்த்தனம்-துக்கடா-ஆதிதாளம்.

ஆதனூரிலொருவேதியர்க்குள்ளே அடிமைக்காரப்பறையன்
சூதுவாதுமொன்றுந்தெரியாதவன் பரிசுத்தமானபத்தன்
கோதிலாததங்கள்சாதியர்க்குச் சிவகுணங்களைமிகச்சொல்லி
காதலோடுதிருப்புன்கூரீசனைக் கண்டுவருவோமென்றார்.

நந்தனார் சிவதரிசனஞ்செய்யவேண்டியதற்காக தங்கள்
சாதியாரைக்கூப்பிடுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்,

பல்லவி.

சிவலோகநாதனைக்கண்டு-சேவித்திடுவோம்வாரீர்

அநுபல்லவி.

பவமயங்களைப்போக்கி அவர்
பரமபதத்தைக்கொடுப்பாரந்த (சிவலோக)

சரணங்கள்.

அற்பசுகத்தைநினைந்தோம் அரன்திருவடிமறந்தோங்
கற்பிதமானபிரபஞ்சமிது கானல்சலம்போலேயெண்ணி (சிவலோக)
ஆசைக்கடலில்விழுந்தோ மினி யறிவுக்கறிவையிழந்தோம்
பாசமகலவழிதேடாமல் பரதவிக்குமபாவியானோம் (சிவலோக)
மானிடச்சென்மங்கொடுத்தார் தன்னை வருந்தக்கரங்களளித்தார்
தேனும்பாலுமபோலேசென்றுதேரடியில்நின்றுக்கொண்டு (சிவலோக)

பெரியபுராணச்செய்யுள்-விருத்தம்.

திருப்புன்கூர்ச்சிவலோகன் சேவடிகளைமிகநினைந்து
விருப்பினொடுந்தமபணிகள் வேண்டுவனசெய்வதற்கே
அருத்தியினொலொருப்பட்டங் காதனூர்தனினின்றும
வருத்தமுறுங்காதலினால் வந்தவ்வூர்மருங்கணைந்தார்.

வசனம்.

நந்தனாரிப்படிச் சிவலோகநாதனைச் சேவிப்போமென்று நெடுநாளாய்ச்சொல்லிநிச்சயஞ்செய்த நந்தனாருக்கும் பறையர்களுக்குமுண்டான வாக்குவாதம்.

அவர்கள், தவஞ்செய்யுஞ் சடங்கிது வல்லவோ பறையர்கள் செய்தால் பாவமேயென்றார்

நந்தன், தேருந்திருநாளுமிருக்குது போவோம்வாரும் வாருமென்று வருந்தியுமழைத்தார்

அவர்கள், பொறும்பொறுமிது புண்ணியமல்ல ஏறிபோவோமென்றிவரையுமழைத்தார் சேரியைநீங்கிச் சிலதுபேர்வந்தார்

பதினொருபேர்கள்பண்புடன்வந்தார் நந்தன்மாரிபோல் ஞானமார்க்கம் பொழிந்து தவமுனிபோலே தானங்கேகினூர்

அவர்கள், சிவலோகநாதனைச் சேவிப்போமென்றார்நந்தன்வெறுங்கையோடே போகலாகாதென்று

வாருடன்தோலும் வரிசையாய்க்கொண்டார் அவர்கள் சேரியிலுள்ள சீரிதுவென்றார்

நந்தன், வந்தபுலையருக்குப் பத்திபெருகவே நெத்தியில் நீறிட்டார் அவர்கள் சதநியந்தானென்று மெத்தவுங்கும்பிட்டார்

கீர்த்தநம்-இம்-வராளி-சாப்புதாளம்.

இவர்-சிங்காரமானபள்ளுபாடினூர்
அவர்-அங்கங்குளிர்ந்துகொண்டாடினூர்
இவர்-கோரோசனப்பையையெடுத்தார்
அவர்-தாராளமாய்வாரிக்கொடுத்தார்
இவர்-சிவமந்திரஞ்சொல்லிச்செபித்தார்
அவர்-தவமிதேயென்றுச்சரித்தார்
இவர்-ஆசைப்பெருங்கடல்தாண்டினூர்
அவர்-ஓசைப்பட்டமலேவேண்டினூர்
இவர்-அளவில்லாவானந்தமடைந்தார்
அவர்-அளவில்லாக்காட்சிபெற்றிருந்தார்
இவர்-திருப்புன்கூரீசனைப்பாடினூர்
அவர்-விருப்பமோடிவரைக்கொண்டாடினூர்.

வசனம்.

இப்படிஎல்லோருங் கூடிச்சிவனை அடிக்கடிவணங்கி அராகராவென்றுரைத்திடுஞ் சத்தம் பரமனேயறிவார்இப்படிநந்தனூர்பதினொருபேர்பறையரோடு திருப்புன்கூர்வந்து சேர்ந்தார்.

கலம்வந்துவீதிவலம்வந்துகணகள்
சலம்வந்துசோரும் பலமவந்துதெங்கள்

சூலஞ்சுத்தமாச்சுமலம்வெந்துபோச்சு
நலங்கொண்டோமென்றுநிலங்கொண்டுநின்றார்.

வசனம்.

அந்தஸ்தலத்திலே நந்தி மிகவும் பெரிதானபடியினாலே லிங்கதரிசனஞ்செயய நந்திமறைத்திருப்பதால் நந்தனார் துயரமடைந்து சொல்லுகிறார்.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

கண்ணிகள்.

ஹரகரதிரிபுராந்தசிவாகரவெங்கள்
அம்பிகையொரு பாகா எங்கும்
நிரந்தரமாயெள்ளுளெண்ணெய்போலவிருந்து
நினைப்பவர்க்கருள் போகா
வெள்விடைமேல்வரும்விமலநமசிவாய
விளங்குமவேத முடிவே நால்வர்க்குத்
தெள்ளுறச்சிவஞானபோதமளிக்கவந்த
சிறந்தமெய்த்தவ வடிவே
மானுமழுவும்மரகதவாகுவலயமும்
மல்குஞ்சூல பாணி எளி
யேனுங்காணத்தரிசனைதரவுமையுட
னெழுந்தருள்விரிங்கு தோணி
மன்னுஞ்சந்நிதிமுன்னம்மருவுமிடபதேவர்
மறைத்திருக்கவினைக் காணேனே முன்னம்
என்னவினைசெய்தேனோகண்பெற்றபாவந்தானோ
இதயத்தில்மகிழ்ச்சிபூ ணேனே

சவாயி.

சிவலோகநாதன் திருச்சந்நிதானம்
மலையாகியநந்தி மறைத்திடுதிங்கே
பலகாலஞ்செய்த பாழ்வினைகுவிந்து
மலையாகியிப்படி மறைத்ததோவென்றார்.

வசனம்.

என்றுசொல்லிய நந்தனார் பின்னுஞ்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வழிமறைத் திருக்குதே-மலைபோலேயொரு
மாடுபடுத் திருக்குதே

பாவிப்பறையனிந்த வூரில்வந்துமிவன் பாவந்தீரோனோ-உந்தன்
பாதத்தில்சேரோனோ-ஏறேனோ-சிவலோகநாதா (மாடு)

தேரடியில்நின்றுதெரிசித்தாலும்போதும் - கோயில்வரமாட்டேனே-ஐ
யே - ஓரடிவிலகினால்போதுமங்கேநின்று உற்றுப்பார்க்கச சற்றேவில
காமல். (மாடு)

வசனம்.

இப்படி நந்தனார் தரிசனங்காண ஓயாமல அலட்டும்போது சுவாமி நந்தனார்மீதிரங்கி நந்தியைவிலகசசொன்னார்.

பெரியபுராணச்செய்யுள்.

சீரேறுமிசைபாடித் திருத்தொண்டர்திருவாயி
னேரேகும்பிடவேண்டு மெனநினைந்தார்க்கதுநேர்வார்
காரேறுமெய்ப்புன்கூர்க் கண்ணுதலார்திருமுன்பு
போரேற்றைவிலங்கவருட் புரிந்தருளிப்புலப்படுத்தார்.

கீர்த்தனம்-இ-ம்-துக்கடா-ரூபகதாளம்.

ஒருநாளும்வாராதபத்தன் திருநாளைப்போவாரெனுஞ்சித்தன்
உலகெங்கும்பிரசித்தங்கண்டு ஒதுங்காமலிருந்ததுகுற்றம்

கீர்த்தனம்-இ-ம்-அங்குசதோணி-ரூபகதாளம்.

பல்லவி.

சற்றேவிலகியிரும்பிள் ளாய்-சந்நிதானமறைக்குதாம்நீ (சற்)

அநுபல்லவி.

நற்றவம்புரியும்-நம்மிட-திருநாளைப்போவார்வந்திருக்கிறார் (சற்)

சரணங்கள்.

சாதிமுறைமைபேசுறான்-தன்னையிகழ்ந்துமேசுறான்
கோதிலாதகுணமுடையோன்-கோபங்கொண்டால்தாளமாட்டோம் ()

வேதகுலத்தைப்போற்றுறான-விரும்பிவிரும்பியேற்றுறான்
பூதலத்திலிவனைப்போலே-புண்ணியபுருஷனொருவனில்லை (சற்)

பத்தியில்களைகண்டவன்-பார்த்துப்பார்த்துவுண்டவன்
சித்தங்குறையில்நமதுசெல்வம்-முற்றுங்குறையுந்தயவுசெய்து (சற்)

வசனம்.

இப்படி சாமிசொல்ல நந்திவிலகினார்.

துக்கடா.

நந்திதூரவிலகிநின்றார்-தன்சாமிமனதைக்கண்டார்
இவன்-நல்லபத்தனென்றார்-அடங்காதவெட்கங்கொண்டார்

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

மற்றதெல்லாம்பொறுப்பேன்
மூத்திராலுங்சொறிப்பேன் (மற்ற)
பத்தனுக்குக்குற்றஞ்செய்தா
லதைப்பொறுக்கமாட்டேன் (மற்ற)
திடுக்கென்றவரைத்துடிக்கப்பேசி
அடிக்கப்பொறுக்கமாட்டேன் (மற்ற)
பசிக்குதென்றுவருகையிலொருவன்
பொசிக்கப்பொறுக்கமாட்டேன் (மற்ற)

வசனம்.

இப்படியே சுவாமிசொல்லும்போது நந்தி மனதுகலங்கி தூரவில் கிநின்றார் நந்தன் சிந்தைகுளிர்ந்து அளவில்லாத ஆனந்தமடைந்து குதித்தார் கெக்கலித்தார் கொண்டாடினார் துதித்தார்திருவடியுள்ளே பதித்தார் எங்கும்சிவமாகப்பாவித்தார்.

கண்ணிக்கா.

குதித்தார்எக்கலித்தார்-உள்ளங்களித்தார்
பள்ளுபடித்தார்-கண்ணீர்வடித்தார்-பற்களைக்கடித்தார்
ஒருகரந்துடித்தார்-இருகரமடித்தார்
இப்படிதரிசனஞ்செய்தார்-நந்தனார்-தரிசனஞ்செய்தாரே.

தக்கடா-ஆதிதாளம்.

சட்டமாகச்சந்நிதானங்கண்டுதுடை தட்டினார்-கைகொட்டினார்
அஷ்டமூர்த்தியெவருக்குமென்று சத்தாடினார்-பணபாடினார்
கஷ்டமானசமுசாரசாகரந் தாண்டினார்-மெய்யவேண்டினார்
இஷ்டதெய்வசிவலோகநாதனை எண்ணினார்-குள்ளநண்ணினார்
மட்டிலாதசந்தோஷங்கொண்டுதான் பட்டபாடுகளைப்-பேசினார்
சென்மங்கெட்டதென்று தன்னை-யேசினார்
இஷ்டமானதன்சனங்களோடுமேவர் கட்டிமுந்தமிட்டுலாவினார்
இங்கக்குட்டிபோலவே தாவினார்

கீர்த்தனம்-இ-ம்-கலியாணி-அட தாளம்.

பல்லவி.

தெரிசனஞ்செய்தாரே-நந்தனார்-தெரிசனஞ்செய்தாரே

அநுபல்லவி.

தெரிசனஞ்செய்தார்தேன்மழைசொரிந்து
வரிசையுடன்அவர் வழிகொண்டுசென்று (தெரிசன)

சரணங்கள்.

குதித்துக்குதித்துக்கையைக்கும்பிட்டுப்போட்டுத்
துதித்துத்துதித்துத்தன்துன்பங்கள்தீர (தெரிசன)
போற்றிபோற்றியென்றுபொன்னடிவணங்கிப்
பார்த்துப்பார்த்துப்பரமானந்தங்கொண்டு (தெரிசன)
அச்சமறந்தவரறிவிலுணர்ந்து
இச்சைமறந்தவரேகாந்தமாய் (தெரிசன)

வசனம்.

தெரிசனஞ்செய்தபின்பு கொண்டுவந்த பணிவிடைசெலுத்தி அவ்வீதியில் மட்டையூறுங்குட்டையைக் குளமாய் வெட்டவேணுமென்றுவிசாரமுற்றார்சுவாமி இதையறிந்து நாளைப்போவாராலேகுளம்வெட்டத்தாளப்போகாதென்று தன்பிள்ளையை ஆளாகப்போகச்சொன்னார்.

தொக்கடா.

மாளாப்பிறவிபோக்கும் பிள்ளையார்வந்தார்

நாளைப்போவார்-நீயாரப்பா வென்றார்
பிள்ளையார்-நானுன்னாளப்பாவந்தே னென்றார்
நாளைப்போவார்-குட்டையைக்குளமாய்வெட்டுவே னென்றார்
பிள்ளையார்-வெட்டினால்புண்ணிய மென்றார்
நாளைப்போவார்-அதெட்டுமெட்டு மென்றார்
பிள்ளையார்-குளம்வெட்டும்வெட்டு மென்றார்
நாளைப்போவார்-அற்பமாய்ப்பதக்குநெல்லைக் கொடுத்தார்
பிள்ளையார்-அப்பனேயிதுபோதும்போதுமென் றுரைத்தார்
நாளைப்போவார்-களித்துநிருவிகற்பமா யிருந்தார்
பிள்ளையார்-குளத்தைவெட்டுதற் கிசைந்தார்

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

தடாகமொன்றுண்டாக்கினார் கணநாயகர்
தடாகமொன்றுண்டாக்கினார்

அநுபல்லவி.

சடாமகுடதரன்-சாம்பவி யுடன்வர
சகலமுனிவர்மனத்-தாமரையு மலர
கடாட்சமாகக்குகன்-கணபதியுடன் மன்ன
காதலாலெவருக்குன்னப்-போதயனுசித மென்ன-தடாக

சரணங்கள்.

கந்தமூலாவியதாமரைபூத்து கதிக்க- மிருத்திஞ்சேற்
கெண்டைவராலுளுவைக்கணமங்குகுதிக்க

சுந்தரமிகுத்தபறவைகள்முழுதினுஞ் சூழச்
சோமசூரியர்கள்சுகமுடன்வந்து தாழ
விந்தையுடனேபலவேள்வியந்தணர் செய்ய
விளங்குஞ்சங்கினமுய்யக்களங்கமில்லாமற் றுய்ய - தடாக
ஓதிவேவானதியானதுதான்மிக நாண-ஆம்பல்மலர்ந்து
ஓதிமமுங்குருகின்குலமுமளதிர் காண
சோதிமருவுந்தேவ-தருநிழலுங்கொடுக்கச்
சுரபிக்கடம்பைமான்கள்-சூழ்ந்துவந்தங்கே அடுக்க
மாதர்மலர்க்குழலார்மகிழ்ந்து அங்கே நீராட
வல்வினைகளும்விட்டோட - வல்லவர்களுங்கொண்டாட்-தடா
வாசனைதங்கியமல்லிகைமுல்லையின் சாலை-சந்தனச்சாலை
வாழைபலாக்கமுகுங்கனமாமலர்ச் சோலை
ஆசையாகமயிலழகுறவே நடிக்க
அருமறைப்பூசுரர்க-ளனுதினமும் படிக்க
தேசுலாவுந்திவ்யத்-தீர்த்தமாகுமென் றந்தத்
திசைதேவர்களும்முந்த-இசைநந்தனர்தஞ் சொந்தத்- தடாக

நாளைப்போவார்-நிஷ்டைகளைந்துபார்த்தார்
குளம்வெட்டியிருக்கவுமகிழ்ந்தார்
பிள்ளையாரிருக்கக்கண்களிற்காணார்

வசனம.

இதெல்லாஞ் சிவன்செயலென்று சந்தோஷங்கொண்டு முன்போலவே கோயில்வலம்வந்து தன்னுடன்வந்த பதினொருபேர்களுடன் ஆதனூர்வந்துசேர்ந்தார்.

பெரியபுராணச்செய்யுள்-விருத்தம்.

இத்தன்மைசார்மகிழ் பதிபலவுஞ்சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத்தொண்டுசெய்துவிரவுவார்மிக்கெழுந்த
சித்தமொடுந்திருத்தில்லைத் திருமன்றுள்சென்றிறைஞ்ச
உய்த்தபெருங்காதலுணர் வொழியாதுமந்துதிப்ப.

சிந்து,

பேணிச்-சாருந்தொழின்முறையாரும்புகல், திருப்புன்கூர்ச் சென்றரனைக் - கண்டு- சேவித்திசைபாடிப்பாவித்தபின், தில்லைச் சிதம்பரத்தைக்-கண்டு-சேவிக்கவேண்டுமென்றுவலுடன்-நாளைப்போவேனென்றாராம்.

வசனம்.

நந்தனார் திருப்புன்கூர்ச்சிவ லோகநாதனைத் தரிசனஞ்செய்துஆதனூர் வந்த நாள்முதல ஊணுறக்கமுதலானதும் விட்டாரதில்லையம்பல

ம் திருச்சிற்றம்பலமென்று சொல்லத்தலைப்பட்டார் சேரியிலுள்ள பெரியோர்களைக் கூப்பிட்டார் வணங்கிக் கும்பிட்டுச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போவேநான்-நாளைச்-சிதம்பரம்போவேனான்.

அநுபல்லவி.

சிதம்பரம்போவேன்தேறித்தெளிவேன்
பதங்களைப்பாடிப்பார்புகழ்தில்லைச் (சிதம்பரம்)

சரணங்கள்.

ஒருகரஞ்சொன்னாலுலகங்களுய்யு
மிருவினைப்பயனில்லைஎங்நாளும் தில்லைச் (சிதம்பரம்)
பாதிராத்திரியில்பண்மறையோதி
வேதியர்போற்றிவியங்கியதில்லைச் (சிதம்பரம்)
திறமொன்றறியாத்தீங்குகள்செய்யும்
பறைபனாய்ப்பிறந்தபாவங்கள்துலையச் (சிதம்பரம்)

வசனம்,

நாளைப்போவார்தனக்குத் தெரிசனங்கிடைக்க வேண்டியதற்காகக்கற்பகப் பிள்ளையாரை வேண்டுதல்.

விருத்தம்.

காலனுடல்பூமிபடச்சாய்த்திடுவான்செங்கமலக்காலைத் தூக்கிக்
கோலமுடனடனமிடுந்திருமன்றுளநாயகனேகுற்றந்தீரப்
பாலிக்கும்படியெனக்குன்னருள்புரிவாயென்றுநற்பழங்கள்வைத்து
மேலைக்கோபுரவாசல்கற்பகத்தைச்சிந்தையுள்ளேவேண்டுவாரே.

வசனம்.

நந்தனார்சேரியிலுள்ள புலையர்களை அழைத்துக்கொண்டு சிதம்பரம்போய்த் தரிசனம்பண்ணவேணுமென்றுஆசையுற்று பத்திமார்க்கங்களைச்சொல்லலுற்றார்.

கீர்த்தனம்-இ-ம்-மாஞ்சை-ரூபகதாளம்.

நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாற்றநரம்புமின்னஞ்சுமப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாறுமுடலைக்கண்டுகளிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த

நாளைவீணுக்கழிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-அந்த
நமனார்க்கஞ்சியோடியொளிப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-சிவ
ஞானத்தைப்பாராமலிருப் பேனோ-நான்
நாளைப்போகாமலிருப் பேனோ-இந்த
நாட்டிலிகழுஞ்சென்மம்படைப் பேனோ-நான்
நாளைப்போகாலிருப் பேனோ-தில்லை
நாதனைக்காணமல்பொசிப் பேனோ-நான்(நா)

ஆநந்தக்களிப்பு.

காணாமலிருக்கலாகாது பாழுங்
கட்டைகடைத்தேறவேண்டியிருந்தால் (காணா)
மூத்தியளித்திடும் பாதம்-தில்லை
மூவாயிரம்பேர்கள்பூசிக்கும் பாதம்
சத்திக்கிணையான பாதம்-வேத
சாஸ்திரங்கள்நாலுந்தேடிய பாதம (காணா)
காலனைச்சீறிய பாதம்-ஜன
காதிகளுக்குள்ளேசெலுத்திய பாதம்
மாலயன்தேடிய பாதம்-எங்கள்
மாணிக்கவாசகர்பிடிகை பாதம் (காணா)
ஆசையைப்போக்கிய பாதம்-பர
மானந்தவெள்ளத்திலாடிய பாதம்
வாசம்பொருந்திய பாதம்-தில்லை
மாகாளிதாழவேதூக்கிய பாதம்(காணா)
பாலகிருஷ்ணன்தொழும் பாதம்-காட்டில்
பாம்புபுலிக்குக்கூத்தாடிய பாதம்
கோலச்சிலம்பணி பாதம்-தில்லை
கோவிந்தராஜர்தெரிசிக்கும் பாதம்(காணா)

வசனம்.

நந்தனார்சிவனைக்காணமல் காலம்வீணுகப் போகலாகாதென்று கூப்பிடுவார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

துக்கடா.

எல்லோரும் வாருங்கள்
சுகமிருக்குது பாருங்கள்-நீங்கள்(எல்லோரு)

நல்லோர்பணிந்திடுநதில்லையம்பல
நாதம்பாதம்பணிந்துகொள்வோம் (எல்லோரு)

கண்ணிகள்,

வாருங்கள்-பர-மானமிருக்குதுபாருங்கள்,

சடமெடுத்தபின்னேதுமேகண்டிலீர்
விடமெடுத்துணட்மேனியன்றோர்வர
வடம்பிடித்திடவாருங்கள்தில்லையில்
இடம்பிடித்தூநாமெல்லோரும்வாழலாம் (வாருங்கள்)

சொல்லடாதில்லைச்சிற்றம்பலமென்று
மெல்லடாவாஙயைசங்கிதிரேவே
நில்லடாஇந்தமாயப்பிறவியைக்
கொல்லடாசிவலோகங்குடிபுக (வாருங்கள்)

சளளடாநமதில்லறவாழ்க்கையைத்
தள்ளடாநந்தனார்சொல்லுறுதியென்று
கொள்ளடாதில்லையம்பலத்தாணடவன்
பள்ளடாவென்றுபாடிக்கூத்தாடியே. (வாருங்கள்)

வசனம்.

இப்படிவாருங்களென்றழைக்கப் புலையர்வாராமலிருக்க நந்தனார்நல்லவார்த்தைசொல்லிப் பறையனாசிவநாமத்தைச்சொல்லச்சொன்னார்.

இருச்சொல்லலங்கார வாக்குவாதம்.

நந்தனார்-தில்லையம்பலமென்றுசொல்லச்சொன்னார்
புலையர்-கள்ளப்பேச்சென்றுமெள்ளச்சொன்னார்
நந்தனார்-சங்கராவென்றுசொல்லச்சொன்னார்
புலையர்-இங்கேவாவென்றுநில்லென்றார்
நந்தனார்-சற்றேயாகிலுஞ்சிவனைத்தியானம்பண்ணென்றார்
புலையர்-நத்தையேபோலேபானம்பண்ணென்றார்
நந்தனார்-திருச்சிற்றம்பலமென்றுபிலக்கச்சொன்னார்
புலையர்-வெறுச்சகம்பளமென்றுபிலக்கச்சொன்னார்
நந்தனார்-சேரியில்நல்லகாரியமிதென்றார்
புலையர்-ஏரியில்நல்லமாரியிதென்றார்
நந்தனார்-விட்டநாள்நினையாமலெட்டுநாள்மறவாமல்
நிஷ்டைபண்ணுதசென்மம்-நஷ்டமென்றார்.

புலையர்-விட்டவிதைமுளையாமல் நட்டபயிர்பலியாமல்
கெட்டுதானுல் கிராமம்நஷ்டமென்றார்
நந்தனார்-உங்கள்புலைத்தன்மைபோகுமென்றார்
புலையர்-எங்களைக்கெடுத்தாயேபாவியென்றார்
நந்தனார்-தேவாதிதேவனைத்தெரிசிப்பீரென்றார்
புலையர்-பாவாடைராயனைப்பாவிப்பீரென்றார்
நந்தனார்-அனைத்தாளுமீசனுக்கன்புசெய்யென்றார்
புலையர்-இனத்தாரைநொந்தவர்க்கின்பமேதென்றார்
நந்தனார்-தினமுஞ்சிவனைப்போற்றிக்களிப்போமென்றார்
புலையர்-பதரைத்தூற்றிநெல்லளப்போமென்றார்
நந்தனார்-பெண்ணாசைபொன்னாசைவிடுதலேநன்றாம்
புலையர்-எங்காளுமுன்னாலேகெடுதலையுண்டாம்
நந்தனார்-அப்பனோடுஇஷ்டமுடனிருப்பேன்தடையேது
புலையர்-கப்பலோட்டிப்பட்டகடன்கொட்டைநூற்றால்தீராது
நந்தனார்-பூசத்திருநாளில்போய்வருவோமென்றார்
புலையர்-பேசத்தெரியாதுபேயாநீபோவென்றார்
நந்தனார்-அழுதுமுறையிட்டாலம்பலத்தேகேட்குமென்றார்
புலையர்-உழுதுபயிரிட்டாலுள்ளபடிவிளையுமென்றார்
நந்தனார்-சித்தமெல்லாமம்பலத்தேசென்றதென்றார்
புலையர்-புத்தியெல்லாம்வேறுபட்டுப்போச்சுதென்றார்
நந்தனார்-குற்றாலத்தீசனைக்கூறுவீரென்றார்
புலையர்-கைத்தாளம்போட்டுக்கதறுவீரென்றார்
நந்தனார்-தாண்டவத்தெய்வமேதனுந்தெய்வமென்றார்
புலையர்-தூண்டிவீரப்பனேதொழுந்தெய்வமென்றார்
நந்தனார்-இஷ்டப்படிநடக்குமீசனைத்துதியென்றார்
புலையர்-கஷ்டப்படமாட்டோம் கசக்காதேபோவென்றார்
நந்தனார்-கொண்டாடிதெய்வத்தைக்கொள்ளுவீரென்றார்
புலையர்-பெண்டாட்டிதெய்வமேபெருந்தெய்வமென்றார்
நந்தனார்-நலத்தைக்கொடுக்கவந்தநற்குருவென்றார்
புலையர்-குலத்தைக்கெடுக்கவந்தகோடாலிக்காம்பென்றார்
நந்தனார்-பலவழக்கம்நானறிவேன்பறைபாவென்றார்
புலையர்-குலவழக்கமறியாதகுருடாவென்றார்
நந்தனார்-நாக்கசையப்பேன்சிவனைநவிலுவீரென்றார்
புலையர்-மூக்கறுப்பான்கதைமொழிந்தீரோவென்றார்

### வசனம்.

நந்தனார் பெரியோருடைய அனுஷ்டானத்தைப் புலையர்களுக்குச் சொல்லுகிறார்.

### வேறு.

நந்தனார்-சிவனேதெய்வம் சிதம்பரமேகயிலாயம்
தவமேபெருமைதான்சம்பிரதாயம்
புலையர்-சேரியேசொர்க்கம ஏரியேகைலாயம்
மாரியேதெய்வம மதசம்பிரதாயம்
நந்தனார்-படிப்பதுஞானம் பார்ப்பதுமூலம்
குடிப்பதுமதிப்பால் குலசம்பிரதாயம்
புலையர்-பிடிப்பதுநண்டு பொசிப்பதுஇறைச்சி
குடிப்பதுகள்ளு குலசம்பிரதாயம்
நந்தனார்-பாழைக்கடப்பார் பரவெளிதானடி
கோழையறுப்பார் குலசம்பிரதாயம்
புலையர்-ஆழத்திற்குளிப்போம அருங்கோடைவந்தால்
கூழைக்குடிப்போம் குலசம்பிரதாயம்
நந்தனார்-ஆசையைப்போக்கி ஐம்புலனைச்சுட்டு
மாசற்றவாழ்வுமதசம்பிரதாயம்
புலையர்-பூசைகள்புரிவோம் பொன்னேருழுவோம்
கூசாமல்வாழ்வோம் குலசம்பிரதாயம்
நந்தனார்-மையத்திலாடி மனக்கயிறுபூட்டி
வையத்திலிருப்பார் மதசம்பிரதாயம்
புலையர்-கையிலேகலையம் காலிலேசேறு
பையிலேபாக்கு பறசம்பிரதாயம்

*

### வசனம்.

சிவபத்திபண்ணினால் அணிமாதிகள் அடையலாமென்று நந்தனார் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்.

அஷ்டமாசித்திகளைப்பெறலாம-தில்லையி
லானந்தத்தாண்டவனகோயிலைக்கண்டு
இஷ்டமுடன்வீதிவலம்வந்து-ஈசன்
இணையடிதொழுதார்க்குஇனிப்பிறப்பில்லை
வாருங்கள்வாருங்கள்சொன்னேன்-நீங்கள்
வாராபாடாமேநாடிவருவா மொன்றுளதே

கருகுமணிப்பிச்சோலைபோது-நந்தன்
கள்ளவேஷமெங்களுக்குள்ளேகிடையாது
பருகுவதுகூழ்க்கஞ்சிபோதும்-வாய்
பதறிவார்த்தைகள்பேசிப்பசப்பாதேபோடா.

வசனம்.

நீசொன்னபடி கேட்பதில்லை எங்கள் நிச்சயமறியாமல் நீமயங்காதே நீசொன்னபடி கேட்பதில்லை.

ஏசல்.

புலையர்-பாப்பாரதெய்வமது பலிக்காதுபறையனைக்
காப்பாற்றமாட்டாது கைவிடுவீரென்றார்
நந்தனார்-பாப்பாரத்தெருவென்று பார்த்துபரிசிபோல்
காப்பாற்றுமல்லவோ கண்ணுதலேயென்றார்
புலையர்-அடுக்காதவார்த்தையை அல்லும்பகலோநீயும்
பிடிக்கிறீர்பிடிவாதம் போதுமேயென்றார்
நந்தனார்-கடுக்காயைத்தின்பாரோ கன்னலதுபோலவே
கொடுக்காததானாலும் கொள்ளுவீரென்றார்
புலையர்-பித்தனென்றுசொல்லுவார் பேருலகிலெல்லோருஞ்
சத்தியமிதல்லவோ தள்ளுவீரென்றார்
நந்தனார்-பித்தனயிருந்தாலும் பிறவியறுத்தவர்க்கும்
முத்திகொடுக்குமல்ல மூர்த்தியவரென்றார்
புலையர்-இத்தனைநாளுமிங்கே யில்லாதவார்த்தையைக்
கத்துகிறீரிதுவென்ன காரியமோவென்றார்
நந்தனார்-இத்தனைநாளசென்று ஈசனடித்தாமரை
பத்தியுங்கள்மனத்தேறும் பாக்கியமீதென்றார்

அகவல்.

பாக்கியமீதென்று பரமசிவபக்தி
மார்க்கங்களெல்லாம் வரிசையாய்த்திரட்டி
எடுத்துரைசெய்வார் ஈனமாஞ்சாதி
பிடித்தறியாமல் புலம்புவாரன்றே.

விருத்தம்.

வக்கணைக்காரநந்தா வாய்படப்பேசவேண்டாம்
தக்கனைப்போலே [illegible] பேசித் [illegible] திரிந்தனை [illegible]

பக்ஷவகாலம்வந்தால் பரமனார்திருநாமந்தான்
சக்கரைபோலேதோன்றுஞ் சாதிப்பார்முத்திதானே.

புலையர்களனேகரானபடியால் பலவிதம்பலர்சொல்லுகிறார்

ஏசல்-கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

புலையர்-ஆண்டிப்பரதேசியாகராவென்றவர்
வேண்டுந்தெய்வமதுவிளங்காது வென்றார்

நந்தனார்-மூன்றுலகுக்கிறைமுன்னின்றுகைகூப்பி
ஆண்டவனேயென்றுஅர்ச்சிக்கு மென்றார்

வேறொருபுலையர்-காத்தைப்பிடுங்கியேநடவுநட்டாலிந்த
சோற்றுக்கவலைவிடுஞ் சுகமிது வென்றார்

நந்தனார்-கூத்தவனார்வந்து கூப்பிடும்வேளையில்
மாத்திரைப்பொழுதிலலைமன்னாயி ரென்றார்

வேறொருபுலையா-மாறுருமக்களும் வாழ்கின்றவிடத்திலே
யாறுலுமெப்போது மழுமூஞ்சி யென்றார்

நந்தனார்-தேனுகவேமெத்த தித்திக்குஞ்சிவத்தை
யாறுலுமுங்களுக்கழுகையோ வென்றார்

வேறொருபுலையர்-மூக்குநுனியைப்பார்த்துமுணங்கியேஎந்நேரம்
காக்கைபோலவேசும்மாக்கதறுகிறீ ரென்றார்

நந்தனார்-வாக்கிலேசிவநாமம்வாராதபாவிகள்
நாக்கிலேஊசியைநாட்டுவே னென்றார்

வேறொருபுலையர்-மடைவாயின்பறவைபோல்மதியாயலிருக்கிறீர்
துடைகாலிநீயென்று சொல்லுவோ மென்றார்

நந்தனார்-விடையேறுமீசனை வெட்டவெளியிலுன்னி
அடையாளங்காணுத ஆதிக ளென்றார்

வேறொருபுலையர்-மறையோதத்தெரியாதமடையராய்ப்பூமியில்
குறையாதபுலைத்தன்மை கொண்டோமே யென்றார்

நந்தனார்-பறையனாய்ப்பிறந்தாலும்பரகதிதேடலாம்
உறுதிமாத்திரம்வேணும்உமக்குண்டோ வென்றார்

வேறொருபுலையர்-தலைசுற்றியாடுதுதங்கச்சிகொழுந்தியார்
அலைகைபோகாதென்றறிகிலே னென்றார்

நந்தனார்-நலம்புரியுந்தில்லைநாதாவென்றுநீறதைத்
திலகம்போலேயிட்டுத்தெண்டனிடு மென்றார்
வேறொருபுலையர்-உலகத்திலெவ்வாதஉருவேற்றிச்சேரியைக்
கலகமிட்டீர்பலனைகண்டீரோ வென்றார்
நந்தனார்-பலகாலஞ்சொன்னாலும்பலியாதுபாழ்வினை
விலகாமலிருக்குதுவேடிக்கை யென்றார்
வேறொருபுலையர்-திருப்புன்கூரீசனைச்சேவிக்கலாமென்று
விருப்பமுடனழைத்தவித்தைகா ணென்றார்
நந்தனார்-கரும்புதின்னக்கூலிகையில்கொடுப்பதுண்டோ
இரும்புமனதுக்காரநில்லையே யென்றார்
வேறொருபுலையர்-புத்தியில்லாதவன்புலம்புறான்சிவனென்று
கத்தினாலுமென்னகாரியமோ வென்றார்
நந்தனார்-சித்தமுமொருதரமவனைவுடனேசிவன்
சத்தமிருந்தாலொன்றுந்தாழ்வில்லை யென்றார்
வேறொருபுலையர்-சேரியிலிருந்தாலுஞ்செல்வங்குறைந்திடும்
ஊனைவிட்டாகிலுமநீரொருநங்குவீ ரென்றார்
நந்தனார்-வாருங்களெல்லாரும்மன்னனைப்போலவே
சேருவோந்தில்லைச்சிதம்பர மென்றார்
வேறொருபுலையர்-பாலாறுபெருகவேபண்ணையைப்பயிரிட்டு
ஆளாமலேவீணுக்கலையுறீ ரென்றார்
நந்தனார்-பாலகிருஷ்ணன்றொழும்பாதத்தைநான்கண்டு
காலாம்பதவியைநாடுவே னென்றார்

### வசனம்.

அவர்களில் ஒருபுலையர் உரைத்தது எப்போதுஞ்சிவனைக் கொண்டாடினால் நம்முடைய தொழிலுக்குக் கெடுதலுண்டு பண்ணைவிளையா தென்று சொல்லநந்தனார் கேட்டுச்சொல்லுவார்

### கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

அரகராவென்றொரு குழிநட்டாலேங்கலமே விளையும்
பாவந்-தங்காமற் றலையும்
சிவசிவாவென்றொருதரஞ்சொன்னால் சென்மசபல்யமாச்சு
புண்ணியகருமமதுவே யாச்சு
தில்லையம்பலதெரிசனங்கண்டால் தேவருவருந்தாரோ
அந்த-மூவரும்பொருந் தாரோ
அடிமைக்காரத்தொழில்செய்வதுதுன்ப மாறுதுமேச்சே
சென்மபோறுலும போச்சே

வசனம்.

நந்தனார் புலையர்களைப்பார்த்து அனேகஞ்சொல்லிநாளைப் போவேனென்றுசொல்ல

சிந்து.

நாளைப்போவே னென்றாராம்-அங்கே-நாடும்பறையர்களோடி வந்து-அண்ணேநீபோகாதே - நமக்-குாணையடைபோவொதவன்- வெண்டிக்கொள்ளான், பார்ப்பாரசாதியுண்டே.

வசனம்.

இப்படிச்சொல்லிய புலையனைப்பார்த்து நந்தனார்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

ஆண்டைக்கடிமைக்காரனல்லவே - யா
ருண்டைக்கடிமைக்காரனல்லவே.

அநுபல்லவி.

மூன்றுலோகமும்படைத்தளித்திடு
மாண்டவர்கொத்தடிமைக்காரன் (ஆண்டைக்)

சரணங்கள்.

ஆசைக்கயிற்றினிலாடிவரும்பசு
பாசமறுத்தவர்க்கடிமைக்காரன் (ஆண்டைக்)

தில்லைவெளிகலந்தெல்லைகண்டேறி
த்தேறித்தெளிபவர்க்கடிமைக்காரன் (ஆண்டைக்)

சீதப்பிறையணிந்தம்பலத்தாடிய
பாதம்பணிபவர்க்கடிமைக்காரன் (ஆண்டைக்)

வசனம்.

தன்னையடிமையாகக்கொண்டவேதியர் சொற்கேளாதவரல்லஅப்படியிருந்தும் பக்திபண்ண வேணுமென்று பக்திநெறியைச் சொல்லிக் காட்டினார்

விருத்தம்.

தவம்பெறுமுனிவர்மெய்க்குஞ் சரித்திரங்கொண்டநந்தன்
பவமயககறுக்கவேண்டிப் பகர்ந்திடுஞ்சிவவாக்யத்தை
அவனுனைந்கொண்டபேய றிந்திடப்போமோவெல்லாஞ்
சிவன்செயலாகும்பாற் செய்வதொன்றில்லையென்றார்

திருநாளைப் போவார் அனேகவிதஞ் சொல்லப் புலையர்களாமலி ருந்ததினுல் சிவன்செயலென்று நாளைப்போவார் சும்மாயிருந்தார் அந் தச்சேரியில் புலையர்கூட்டங்கூடி மூத்தோனுல் நந்தனுக்குப் புத்தி சொல்வோமென் றெண்ணி அந்தச் சேரியிலே வெகுநாளாயிருக்கின்ற ஓர்புலையன் வயதுமிகுந்து உடல்தளர்ந்து பல்லுகளுதிர்ந்து தோலுக ள் சுருங்கிநரம்புதெரிந்து முதுகுசரிந்து முழுதும்வளைந்து அங்கம்சொ ரிபடர்ந்து தினவுமிகுந்து அதனைச்சொரிந்து அங்கீர்வடிந்து அவ்வுடல் நடுங்கி இவ்விதமிருக்கும் பெரியகிழவனுனையனுப்பக் கோலூணி கூனி குறுக்கி கோணலாய்நடந்துவந்து அவன் நந்தனுைப்பார்த்து கட்டிய ணைந்து தலைநிமிர்ந்து கண்ணீர்சொரிந்து மார்பில்வழிந்து மனங்கனிந்து காதல்மிகுந்து ஒன்றுந்தெரியாதவரொன்று நினைந்துபரிந்துஞாயமறிந்து சொல்லுவான்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்,

பல்லவி.

ஞாயந்தானேநீர்சொல்லும்-ஓய்-நந்தனுரே
நம்மஜாதிக்கடுக்குமோ (ஞாயந்)

சரணங்கள்.

| | |
|---|---|
| சேரியிலில்லா | வழக்கம்-நீர் |
| செய்துக்கொண்டுவந்த | பழக்கம்-இந்த |
| ஊரிலெங்குமது | முழக்கம்-வெகு |
| உறுதியாச்சுது | ஒழுக்கம்-இது (ஞா) |
| சிதம்பரமென்கிற | பேச்சு-நாங்கள் |
| செய்திடுங்காரியம் | போச்சு-அது |
| மதம்பிடித்ததுபோ | லாச்சு-இந்த |
| மண்டலப்பறையருக் | கேச்சு-இது (ஞா) |
| பறையருக்கேதுதைப் | பூசம்-அதைப் |
| பார்க்கவேயுனக்கு | விஸ்வாசம்-சிறு |
| பயல்களுக்கேயுப | தேசம்-நீர் |
| பண்ணிவைத்ததெல்லாம் | மோசம்-இது (ஞா) |

வசனம்.

சேரியில் பெரியகிழவனுனபடியால் ஜாதிவழக்கங்களெல்லாம் அறி ந்தவனுதலால் நந்தனுருக்கு இன்னமுஞ்சொல்லுகிறுன்.

சிந்து,

பாப்பாரசாதியுண்டே - என்ன-பாடுபடுமுழுக்காமெங்கே - நமக் குந்திருநாளோ-அந்த- ஞாயமுண்டோயென்னமாயமிதுவென்றே - த

கைசெய்தார்-சிவன் - வேடிக்கைதானென்று நாடிக்கொண்டே - அறி யாதுபோலிருந்த

பெரியகிழவன்சொல்லியவிருத்தம்.

கழனியைத்தெய்வமெனச்சுற்றிவந்துதலைவணங்கிக்கரங்குவித்து
உழுதுபரம்படித்துவிரைதெளித்துழுளைகொள்ளநீரோடவிட்டுப்
பழுதறவேநட்டதனைக்களைபிடுங்கிமடைதிறந்துநீர்பாயவிட்டுச [னே
செழித்திடவே பொங்கலிட்டுக் காத்தவராயனை வேண்டுஞ்செய்கைதா

கீர்த்தனம்-இ ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சுவாமிதெரிசனநமக்குண்டோ-புலைச்
சாதியன்றோவந்தநீயறியாமல்

அநுபல்லவி.

பூமிதெரிசனம்போதும் வெகு
புண்ணியமேசோறுபோடுமின்ன மொரு(சுவாமி)

சரணங்கள்.

நாத்துநரம்புகளைச்சமப்பதும் உழுவதும்
நஞ்சைவயலைச்சுற்றி வருவதும்வளம்பெற
பாத்திகள்கட்டிவிரை தெளிப்பதும்பறிப்பதும்
பாயுமடையைத்திறந்திடுவது மன்றியில்(சுவாமி)
சேரியிடையில்குடியிருப்பதும் பதறுள்
சிதறைத்தூற்றிநெல்லளப்பதும் பார்ப்பதும்
ஊரைவளைந்துதமுக்கடிப்பதும் மதுக்குட
முண்டுகளித்துநாம்உறங்குவ தன்றியில்(சுவாமி)
ஆண்டைமார்களிடும்பணிவிடை செய்வது
மருகில்நின்றுவாய்விடுவதும் நடுவதும்
தாண்டிநடந்துநெடுங்கோல்பிடிப்பது மளப்பதும்
தனித்துச்சுடலைதினங்காப்பது மன்றியில்(சுவாமி)

விருத்தம்.

சாதியின்முறைமைகாட்டித் தடையிடப்போதுமென்றார்
வேதமாமுனிவராலும் வினவியுங்கண்டாரில்லை
யேதையாம்புலையருக்குப் பேரின்பநிஷ்டையேதென்
றுதலாலென்செய்வோமென் றம்பலத்தஞ்சுவாரோ.

வசனம்.

பெரியகிழவனைப்பார்த்து நந்தனார்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம-தண்டகம்-ஆதிதாளம்.

சிதம்பரதெரிசனங்காணுவிடிலிந்தச்சென்மசாபல்ய மாமோ
சென்னமரணசமுசாரம்பெருகவேசெய்தவினைகள் போமோ
கண்ணுங்கருத்திருக்கச்சிவனைக்காணுமல்காலங்கழிக்க லாமோ
காலபாசநமதருகில்வராமல்கண்டுபயந்து போமோ
இப்படியேயெப்போதுமிருப்போமென்றெண்ணியிருக்க லாமோ
இருதயமறிந்திடச்செய்திடுங்கன்மங்கள்இகழ்ந்துபிரிந்து போமோ
பின்னுமுன்னுமறியாதமூடர்கள்புத்திகேழ்க்க லாமோ
புலைபரவரடியிருக்கினுமெய்திடும்புண்ணியங்கள் போமோ
பரமசிவனைக்கொண்டாடவேணுமென்றுபரிந்துபார்வி பார்த்தேன்
பாபஞ்செய்தவர்க்குப்பலியாது அதிலபாடுபட்டுப் பார்த்தேன்

வசனம்.

சேரிபுலையர்கள்கூட்டங்கூடி அனுப்பிவைத்தபெரியகிழவன் நந்தனாருக்குச்சொல்லக்கேட்டு ஆச்சரியப்பட்டு நந்தனார்கிழவனைப்பார்த்துச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம-தண்டகம்-ஆதிதாளம்.

| | | |
|---|---|---|
| மீசைநரைத்துப்போச்சே | கிழவா | ஆசைநரைக்கலாச்சோ |
| பாசம்வருகலாச்சே | கிழவா | பாவம்விலகிப்போச்சோ |
| கூனிகுறுகிப்போச்சே | கிழவா | கோபம்விலகிப்போச்சோ |
| அங்கந்தளர்ந்துபோச்சே | கிழவா | ஆங்காரமும்போச்சோ |
| சேரியைமறந்தாயே | கிழவா | சிதம்பரநினைந்தாயோ |
| மானிடசென்மமடா | கிழவா | மாண்டால்வருமோடா |
| அம்பலத்தரசனடா | கிழவா | ஆளுந்தெய்வமடா |
| திருவடிபணியாயோ | கிழவா | தேடித்தெளியாயோ |

வசனம்.

நந்தனார் இவ்விதஞ் சொல்லி சிவகாமவல்லிபாகனை நினைந்துநீறள்ளிபெரியகிழவன் முகத்திலேதடவி வாயிலேபோட்டு கட்டியணைத்து காதிலே சிவமந்திரமுபதேசித்தார் உபதேசமானவுடனே பெரியகிழவன் சித்தந்தெளிந்து சிவமாய்நிறைந்து உற்றதுணர்ந்து ஒருவனுயிருந்து அத்தனடியா ரருளிதுவென்று பத்திமிகுந்து பரவசங்கொண்டுபேசத்தெரியாமற்பேசுவார் நான் இன்றைக்குத்தான் பெரியகிழவனானேன் நந்தானனுது பந்தந்தீர்க்கவந்தாய் முத்திதந்தாயென்று சுத்தி வலம்வந்து அடிபணிந்து விடைபெற்றுக்கண்டேன் களித்தேன் ஆனந்தங்கொண்டேன் குறைதீர்ந்தேன் அமுர்தமுண்டேன் பசிதீர்ந்தேன் பிறவிவென்றேன் வீடுகின்றேனென்றுபேசிக்கொண்டுபெரியகிழவன்வருகிறான்

பெரியகிழவனூர் நந்தனாருபதேசம்பெற்றுவருகின்றார்.

கீர்த்தனம்-இ-ம-சங்கராபரணம-ரூபகதாளம்.

பல்லவி.

பெரியகிழவன்வருகிறான் பேரானந்தக்கடலாடி (பெரிய)

சரணங்கள்.

பரவியமாயையிலிருந்து பார்முதல்பூதங்களைந்து
பெரியவரொன்றுணர்ந்துபேரின்பலாபத்தையடைந்து (பெரிய)

படிபுகழ்நந்தனார்மகிழ்ந்து பரமசிவபக்திபுரிந்து
கொடியபாவங்களதீர்ந்து கூனிக்குறுகிகிடந்து (பெரிய)

நந்தனார்சொன்னதறிந்து நானென்னுமையுமிழந்து
பந்தமயக்கந்தெளிந்து பரவெளியாகநினைந்து (பெரிய)

வசனம்,

புலையர்களெல்லாங் கூட்டங்கூடி நந்தனருக்குச் சிதம்பரபித்துத் தெளிய புத்திசொல்லவனுப்பிய பெரியகிழவனை நந்தனார் பித்துக்கொண்டு அவருடைய மகிமையெல்லாம் புலையர்களிடத்திற் சொல்லிக்கொண்டாடுவான்.

பெரியகண்ணிக்கா

திருநாளைப்போவார் இந்தச்சேரிக்குமூருக்கு
மாருக்கும்பெரியவர்-திருநாளைப்போவார்
ஒருதரமாகிலுஞ்சிவசிதம்பரமென்று
உரைத்திடவொன்றுண்மைகூறிய. (திருநாளைப்)

அடாதுசெய்தால் படாதுபடுவீர் விடாதுபாவந் தொடாமே அவன்பேரிடாதே தூறுபடாதே கையிடிபடாதே வெம்பகையிடாதே அப்பாதிடாங்கன கொப்படாது பட்டால்விடாது சலம் படாதவன் பயப்படாதவன் இடங்கொடாதவன அடங்காதவன நிலைவிடாதவன் மாறுபடாதவன் மனமவிடாதவன் அடங்கிடாதவன் விடையவலைப்படான்மாயைக்கப்படான் சிவனையிடைவிடான் கழனிகளைநடான்கலப்பைகளைத்தொடான நமதுவழிப்படான் பொலி கிடாரி எல்லைப்பிடாரி வெல்லப்படாது சொலலப்படாது கல்லபபடாது தளளப்படாது யாரையும்விடாது துணைபந்தொடாது வழியைததேடாது இரவினைப்படாது சென்மங்கொடாது தெய்வங்கெடாது அவன் கைவிடாது வேறுபடாது ஆசைப்படாமல அருளைக்கொடாது பங்கப்படாத தங்கக்கடாரம பொங்கபபடாதவன இணைவிடாத புண்ணியநடாகஞ்செயதவனா மடாதிபதிப்பிடிபடாதசிங்கம ஆளபடாதமகிமை விடாதபெரியவணடா தெரிசனபபடாதசந்நிதி விடாதநந்தியைசததேடா அரணவிலகடாவெனறசொல்லடா அவனைப்பணியடா தூளையணியடா அறிந்துபோற்றடா கையணித்தேற்றடா மலனைத்தூற்றடா மனதைத்தேற்றடா பிறவிமாற்றடா ஆனந்தக்கூத்தடா சொன்னேன்-திருநாளைப்போவார்இந்தச்சேரிக்குமூருக்குமாருக்கும்பெரியவர். (திருநாளைப்)

வசனம்.

இப்படிபெரியகிழவன் சொல்லக்கேட்டு நந்தனாராலேகெடுக்கப்பட்ட பதினொருபேர்களுக்குள்ளே நீயும்பனிரண்டாம் பேராயிருக்கத் தலைப்பட்டு சிவசிவாவென்று சொல்லிச் சேரியைக் கெடுக்கத் தலைப்பட்டார்களே கிழவாவென்று மிகவுந் துன்பமடைந்து புலையர்ஒருவருக்கொருவர்சொல்லித் துயரப்படுகிறார்.

கீர்த்தனம்-இ-ம-புன்னாகவராளி-ரூபகதாளம.

பல்லவி.

நாமென்னசெய்வோம் புலையரே-இந்தப்
பூமியிலில்லாதபுதுமையைக்கண்டோம்

சரணங்கள்.

| | |
|---|---|
| நந்தனொருவனாலேயிப்படி | யாச்சு |
| நன்மையுந்தின்மையுமில்லாமற் | போச்சு |
| சந்திக்குச்சந்திகூத்தாட | லாச்சு |
| சாமியுமில்லாமல்எங்கையோ | போச்சு(நாம்) |
| கன்னற்கண்டவ்வார்த்தைகேட் | பாரோ |
| காதிற்பட்டாலதைக்கருத்துட்கொள | வாரோ |
| மன்னார்சாமிக்குப்பூசைபோட் | டாரோ |
| மாரியாத்தாளெங்கேமறைந்திருக்கி | றாளோ(நாம்) |
| சேரிக்குள்பதினொருபேர்களுங் | கெட்டான் |
| செயயுந்தொழில்முறையாவையும் | விட்டான் |
| ஊருக்குப்பெரியகிழவனும் | நட்டான் |
| உண்மையறியாமல்சிதம்பரந் | தொட்டான்(நாம்) |

வசனம.

சேரியில்துன்பமடைந்த புலையர்களைப்பார்த்துஉங்கள்தெய்வத்துக்கு வழக்கம்போலே பூசைபோட்டு பலியிட்டுவேண்டினால்சேரிக்குநல்லகாலம்பிறக்குமென்று பெரியகிழவனார்சொல்ல புலையர்கள் பூசைபோடுந்தெய்வங்களாவன.

கடுக்கா.

வீரன் இருளன் காட்டேறிவெறியன் கொண்டிசாமுண்டி தூறித்தூண்டி கலலனானை கொட்டியச் சின்னான் பெத்தணன மாமுனியன்சங்கிலியும் மாடன்கருப்பன பாவாடைமூறிக்காத்தான் சூழியிரிசிமோகினி சத்தகன்னிகையும் சேரிமன்னான் மின்னடியான் சிறுகாட்டுடையான் பனைமரத்தான் மாரியானடி வழிமறித்தான்மலையன் சாத்தன்பக்கிரியும் ஏரியினுஞ்சிலம்பாயி இடையன் கல்லான் ஊமையோவிழுங்கல்லன் பெத்தாச்சி வீட்டுதெய்வமுதலான.

வசனம்.

இதுகளைத்தெய்வமென்று வணங்கிக்கொண்டாட ஏனங்கோழிஆடுகளுடனே மதுக்குடம்வைத்து பள்ளயம்போட்டு பம்பையடித்து வருகச் சன்னதமவரும்சொன்னேனென் சேரிக்கு நல்லகாலம்பிறக்கும சிதம்பரபிகது நந்தனுக்குத்தெளிந்து விடுமென்றும் பெருகவாழ்வீரென்றும் பெரியகிழவன்சொன்னாரே அப்படியே கிழவன்சொல்லைநம்பிக்கை கொண்டு புலையர்களெல்லாரும் பந்தலிட்டு பளையம்போட்டுகொம்பு தம்பட்டமுழக்கி மூப்பூசையிட்டு வேண்டுவார்.

வருந்திக்கொண்டாடும் அகவல்.

புலையர்-எல்லைப்பிடாரியே எதிராகவந்துஎம்
கொல்லையுங்காவலாய்க்கொள்ளடி யென்றார்
நந்தனார்-சொல்லினுமடங்காது சோதிபரமானந்தத்
தில்லைநாயகனைத்தேவ ரறியாரோ
புலையர்-முண்டாசுகட்டிவரும் சொண்டிவீரப்பனைக்
கொண்டாடிப்பூசைகளைக்கொள்ளுவீ ரென்றார்
நந்தனார்-அண்டங்களபதினாலுக் கப்பாலுமிப்பாலும்
நின்றார்க்குமுண்டாகுமிலையாது வென்றார்
புலையர்-கச்சையரிவாள்வைத்த கருப்பண்ணசாமியை
இச்சையுடன்வேண்டிஎன்றெய்வ மென்றார்
நந்தனார்-பச்சிலைபிடுங்கியே பாகத்தில்சாற்றினால்
இச்சையானதுமீயுமென்றெய்வ மென்றார்
புலையர்-நேமமறிகோலமும் நிணமூன்றுசாவலும்
தீயகளும்வைத்துத்தெரிசித்து நின்றார்
நந்தனார் வாயாலேசிவமென்று வருந்தினாலெப்போதும்
தாயாரைப்போலவேதழுவிவரு மென்றார்
புலையர்-பித்துப்பிடித்திருக்கும பேயனும்நந்தனுக்கு
சித்தந்தெளிந்திடச்செய்திடுவீ ரென்றார்
நந்தனார்-பத்திவெள்ளமபெருகிப் பாய்ந்தாலுஞ்சேரியில்
நத்தையுமிஞ்சுஞ்சாதிநாடாது வென்றார்

வசனம்.

இவ்வகையாகப் பூசைபோட்டுத்தெய்வங்களைக்கொண்டாடும்புலையர்களைப்பார்த்து நந்தனார்சொல்லுவார்.

விருத்தம்.

இத்தனைநாட்பரமசிவன்றிருமகிமை யிரவுபகலெடுத்துச்சொன்னேன்,
பத்திபுரியெந்தனுக்கேயருளபுரிந்தவையன்பதம்பணிவீரென்றேன், அ
த்தனையுமிழந்திடவே மனவெறுப்பாயெந்தனையுமவமானித்தீர், புத்தி
சொலவேணுமென்றவர்கள் முழந்தாளிட்டடிகொண்டுபுனைந்திட்டாரே.

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

பத்திசெய்குவீரோ-நடேசனை-பத்திசெய்குவீரோ.

அநுபல்லவி.

அத்திமுகனைப்பெற்றஉத்தமனைவிட—
நித்தியதேவரொவர்களுமில்லையென்று (பத்தி)

சரணங்கள்.

சாமமதர்வணமிருக்குஎசுர்வேதஞ்
சாற்றுமுபநிஷத்தும்கற்பரனாரனென்று
ஏமாறுமற்சொல்லியின்புறுநிலையின்று
எவர்களுமறியவேயிப்புவிதனினின்று (பத்தி)
ஆகமமிருபத்தெட்டாதிபுராணமும
அயன்கீதைமுதலான அனந்தஸ்மிருதிகளும்
பாகமாகியபிரம்ஹம்பரமனொருவனென்று
பண்புடனுரைத்திடும்பான்மையதால்நின்று (பத்தி)
கௌதமர்முதலான விருடிகளனைவரும
கரியமால்தொழும்பதங்கதியென்றனுதினமும்
புவனத்தில்போற்றியேயேற்றினதாலவர்
புகழும்புண்ணியபதம்பொருந்தினரென்பதால் (பத்தி)
அரியயனிந்திரன்முதலானதேவரும்
அரனடிதன்னையேஅன்பாய்ப்பூசித்தால்
பரிவுடனவர்செல்வம்பழுதுவராமலே
பாலித்தார்சிவனென்றுபத்தர்சொல்வதினாலே (பத்தி)
வியாசமுனிவரும்அவரடியார்களும்
விஷ்ணுபரமென்றுவிளம்பினதால்முன்னம்
கயாகாசிக்கங்கைக்கரையிற்கையிழந்ததும்
கல்லாய்த்தானேயவர்சமைந்ததினாலேயும் (பத்தி)
தில்லையம்பலத்தினில்திருநடமாடிடும்
தேவாதிதேவனைத்தினம்பணிந்தேத்தியே
அல்லல்சம்சாரக்கடலினில்மூழ்காமல்
ஆனந்தக்கூத்துகளாடிக்கொண்டிருங்கள் (பத்தி)

விருத்தம்.

இத்தனைநாட் பரமசிவன் றிருமகிமை யிரவுபக லெடுத்துச்சொன்னேன், பத்திபுரியெந்தனுக்கே யருள்புரிந்தவை யன்பதம பணிவீரென்றேன், அத்தனையுமிழந்திடவே மனவெறுப்பாயெந்தனையு மவமானித்தீர், புத்திசொல்வேனென்றவர்கள் முழந்தாளிற் றடிகொண்டு புனைந்திட்டாரே.

வசனம்.

நந்தனார் மகாபலசாலியானபடியால் புலையர்களைச் சிட்சித்துச்சிவநாமத்தைச் சொல்லச்சொல்லுவார்.

தண்டகம்.

நந்திபுலிப்போலேதாண்டிக் குதிப்பார்
முத்தமிடுவதைப்போலேமுகத்தைக் கடிப்பார்
வார்கொண்டுகட்டிவளைத்துப் பிடிப்பார்
மணிக்கல்லெடுத்துத்துடைக்குள் ளெறிப்பார்
பல்லாற்சுரண்டியேபாம்படித் திழுப்பார்
கல்லாலெறிந்துமவர்காயப் படுத்துவார்
குப்புறத்தள்ளியேவைப்பினி லுதைப்பார்
சிவபரமென்றுநீர்சேவிப்பி ரென்றார்

வசனம்.

இப்படிசிட்சித்தபின்பு புலையர்களெல்லோரும் நந்தனாடிக்குப் பயந்துபத்திசெய்யத்தொடங்கினர்.

கடுக்கா.

அரகரசிவசிவ அம்பல வாணா
தில்லையம்பலதேசிக நாதா
புரமூன்றெரித்தபொன்னம்பல வாணா
கரியுரிபோர்த்தகருணா கரனே
அனுதினமன்றுளாடிய பாதா
பிழைபொறுத்தாளும்புண்ணிய மூர்த்தி

வசனம்.

மூடப்புலையர்களுக்குப் புத்தி தருவாயென்று அவர்களுமிப்படிச் சொல்லித்தொழுவார்.

கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

பத்திகள்செய்தாரோ-பரசிவ-பத்திகள்செய்தாரோ

சரணங்கள்.

பத்திகள்செய்தார்நற்றவம்புரிநந்தனர்
சித்தமகிழ்ந்திடவத்தனைபேர்களும் (பத்திகள்)
எடுப்பான்சிவகதைபடிப்பான்தடியொன்று
பிடிப்பான்காலுக்குஅடிப்பானென்றே (பத்திகள்)
கல்லாதவனிங்கேசெல்லாதவனறி
வில்லாதவன்வெகுபொல்லாதவனென்றே (பத்திகள்)

வசனம்.

அந்தச்சேரியிலே புலையர்கள் பத்திசெய்ததால் சேரி சிவலோகம்போல விளங்கியது சிலநாளுக்குப்பின்பு புலையர்க ளெல்லாருங்கூடி நந்தனரைப் பணிந்து நல்லவார்த்தைச் சொல்லி நாங்க ளெல்லோரு

ம் நாளொன்றுக்கு மூன்றுவிசை சிவனேயென்று சொல்லுகிறோம் மற்றவேளையில் எங்கள் பண்ணைத்தொழிலே செய்வோமென்றுகேட்கநந்தனார்நல்லது அப்படியேதப்பாமல் செய்யுங்களென்று நந்தனார் சொல்லச்சேரி பெரியகிழவனுடன் திருப்புன்கூருக்குப்போய் வந்தபக்தி புரிபுலையர்கள் நந்தனைச்சுற்றி அடிபணிந்துசொல்லுவார்.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

கொள்ளையெனும்பிறவிவினைமூளைவீசாமற்
குடிமாறிப்போவதற்கோர்வகைகைக்கேட்டு
கள்ளமனக்குரங்கதனுல்விடையமாச்சு
கட்டியிருந்தாலிருந்தவிருத்திபோச்சு
உள்ளங்கைக்குள்ளிருக்குங்கனியைப்போல
உருவில்லாதான்மாவேரறுத்துவாழ்வீர்
எள்ளளவும்பிசகில்லையென்றுஞானம்
ஏற்றுவார்மும்மலத்தைத்தூற்றுவாரோ.

கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

பார்த்துப்பிழையுங்கள்-நீங்கள்-பார்த்துப்பிழையுங்கள்.

அநுபல்லவி

பார்த்துப்பிழையுமிந்தச்சோற்றுந்துருத்தியை
ஏத்தித்தொழவேண்டாம்காற்றுபோகுமுன்னே (பார்த்து)

சரணங்கள்.

ஆத்திமதிசூடுங்கூத்தனிடமாய்ச்
சூக்திரத்தையிந்தக்ஷேத்திரத்துள்நாடி (பார்த்து)
வீற்றிருப்பீர்காலங்காத்திருப்பான்சிவ
சாத்திரத்தைஞானநேத்திரத்தாலுற்றுப் (பார்த்து)
மூலக்கனல்தாண்டிமேலக்கரைவந்து
பாலைக்குடியிந்தநாலுக்குள்வராமல் (பார்த்து)
பாலகிருஷ்ணன்தொழுங்கோலக்கணகளை
மேலுக்குமேல்நாடிசாலக்கலியற (பார்த்து)

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி- அல்லது-சாரங்கா-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைசிதம்பர மென்று-ஒரு
தரஞ்சொன்னால்பரகதி யுண்டுண்டு

அநுபல்லவி.

நல்லசுருதிமுடி கண்டு-சபா
நாதன்திருத்தாளைச்சிந்தையிற் கொண்டு (தில்லை)

சரணங்கள்.

வேரில்லாமலொருவிருட்சமொன் றிருக்கு
விளையும்வினைகளெல்லாமது செய்யுந்திருக்கு
பேரில்லாமல்ஞானததிகொண்டு கருக்கு
பேரின்பவாணனைப்பிசகாமல் நெருக்கு (தில்லை)
தேசம்புகழுந்தில்லைக்கோயில் வளைந்து
தித்திக்குஞ்சைவபஞ்சாட்சரம் புரிந்து
ஆசையுடனேயர்த்தஜாமத்தி லிருந்து
அங்கம்புளகிதமாயடிக்கடி பணிந்து (தில்லை)
மாயன்கோபாலகிருஷ்ணன்றனைத் தேடி
மருந்துஞ்செந்தாமரைமலரடி நாடித்
தாயைப்பிரிந்தவிளங்கன்றுபோல் கூடித்
தனித்திருந்துதாளம்போட்டுக்கொண் டாடி (தில்லை)

கீர்த்தனம்-இ-ம்-கௌளிபந்து-ஆதிதாளம்.

பல்லவி.

நமக்கினிபயமேது-தில்லை-நடராஜரிருக்கும்போது.

அநுபல்லவி.

மார்க்கண்டேயருக்காகமறலியையுதைத்திட்ட
மான்மழுவேந்தும்மாதேவனிருக்க (நமக்கினி)

சரணங்கள்.

இம்மைமறுமைமுதலியாவுக்கும்பரமன்
சின்மயானந்தரூபச்சிவபெருமானிருக்க (நமக்கினி)
அரியயனமரரும்ஆலங்கண்டஞ்சமுன்
பரிவுடன்வரக்காத்தபரமசிவனிருக்க (நமக்கினி)
திரிவிக்கிரமனாய்வரும்திணமாயன்மமதையை
விரிவுங்காளனாகிவிலக்கும்பரனிருக்க (நமக்கினி)
ஆதிசேடனுமாலுமலரோனிலக்ஷ்மியும்
காதலாய்த்தவஞ்செயக்களித்தபரனிருக்க (நமக்கினி)
இரணியனால்வெறிகொண்டநரசிம்மனை
தரணியில்ரட்சித்தசித்தசங்கரனிருக்க (நமக்கினி)

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சங்கரனைத்துதித்தாடு-இனி-சனனமில்லையென்றுபாடு.

அநுபல்லவி.

பொங்கரவணிந்திடும்பொன்னம்பல வனை
புந்தியில்நினைவாகப்போற்றுவாய் சிவனை-(சங்கர)

சரணங்கள்.

பாரினிற்பெண்கள்பேற் கருத்து-போய்ப்
பற்றவொட்டாமலே திருத்து
பேரின்பஞானத்தை வருத்து-சுகப்
பெருவெளிநீநெஞ்சி லிருத்து (சங்கரனை)

நீர்மேற்குமிழியிக் காயம்-என்றும்
நிலையில்லாவாழ்வினு மாயம்
பேரானமாலயன் நேயம்-பெறப்
பேசுவதே யுபாயம் (சங்கரனை)

மணிதச்சனனத்தில் தேடு-நல்ல
மாதவத்தோர்களைக் கூடு
தனிவெளியாமொரு வீடு-தன்னைத்
தத்துவத்தால்கண்டு நாடு (சங்கரனை)

வசனம்.

இப்படிச்சொல்லிய நந்தனைநோக்கி அவர்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சவாயி-தண்டகம்-சாப்புதாளம்.

அவர்கள்-புண்ணாகியவிந்தப்பிறவிப்பிணிக்குமருந்
துண்ணாமலிருப்பதுஉண்மையோ நந்தா

நந்தனார்-கண்ணாலேபார்த்திடில்காட்டில்மறைந்திடும்
மண்ணானபூதங்கள்மாயமே மைந்தா

அவர்கள்-இருப்பதுபொய்யென்றிராததுமெய்யென்றும்
இருந்திப்பேசியவகையென்னடா நந்தா

நந்தனார்-உருத்தெரியுதுநாமரூபமல்லவோ
கருத்திலிருத்திக்கொண்டால்காணலா மைந்தா

அவர்கள்-விஸ்தாரமாமிந்தபிண்டமானமத்தை
பத்திக்கொண்டிருந்ததுபகர்ந்திடும் நந்தா

நந்தனார்-வித்துக்குள்விருட்சமடங்கியவாறுபோல்
சத்துக்குள்ளணடசராசர மைந்தா

அவர்கள்-புத்திக்குளெட்டாதபோதத்தைநாமுணர்
முத்திபெறும்வழிமொழியுமே நந்தா

நந்தனார்-அத்தனிருக்குமிடமன்னமயாதிகள்
பத்துதலில்லாப்பரவெளி மைந்தா

அவர்கள்-தத்துவங்கள்தொண்ணூற்றாறுங்கடந்திடும்
வஸ்துவைநாமெண்ணும்வகையேது நந்தா

நந்தனார் நித்திரையொழிந்தபின்நினைவுடனேகூடி
உத்தாரம்பேசியதுண்மையே மைந்தா

அவர்கள்-பித்தனைவேறொருபேய்பிடித்தாற்போலுஞ்
சித்தவிகாரங்கள்தெளியுமோ நந்தா

நந்தனார்-பத்திவலைவீசிப்பார்த்திடும்வேளையில்
தத்திக்குதித்திடுந்தாண்டவ மைந்தா
அவர்கள்-சீலமுள்ளநல்லசேதிசொன்னாயுந்தன்
காலுக்குக்கும்பிடக்கண்டோமே நந்தா
நந்தனார்-பாலுக்குச்சர்க்கரைபலித்ததுபோலுங்க
ளாலேயன்றோவீடுநாடாது மைந்தா
அவர்கள்-துலச்சரீரத்தைச்சுமந்துபிள்ளைப்பூச்சி
போலேயானோநந்தன்புண்ணிய நந்தா
நந்தனார்-பாலகிருஷ்ணன்தொழும்பரமசிவனரு
ளாலேபொங்கிவருமானந்த மைந்தா

எண்சீரடியாசிரியவிருத்தம்.

ஓங்காரமென்றுசொல்லுநூலைப்போட்டு
உறுதியெனுமிருப்புலக்கைகையிலேந்தி
வாங்காரமென்றதட்டுவாகையிட்டு
வடிக்கடியேகண்ணியதைப்புடைத்தெடுத்து
ரீங்காரசிவயோகநிஷ்டைகொண்டு
நிர்மலமதாயவருஞ்சுற்றிவந்து
பாங்கானநந்தனிருதாளைப்போற்றிப்
பணிந்திட்டார்திருநீற்றையணிந்திட்டாரே.

வசனம்.

அவர்கள்நந்தனாரை விட்டுநீங்கி தனிதிருக்கமனம்வராமல்சொல்லுவார்.

விருத்தம்,

தில்லையிற்போகவேண்டாம்திரும்பிவந்தாலுமும்மைச்
செல்லாதுபண்ணைபார்ப்பான்சினங்கொண்டபடியாலிந்த
எல்லையிலிருந்துதானேயீசனார்திருநாமத்தைச்
சொல்லியேகாலம்வீட்டிற்சேருவோம்வாரீரென்றார்.

வசனம்.

அனல்கண்டமெழுகதுபோலுருகிப் பத்திவெள்ளம்பெருகிச்சொல்லியபேர்களைகரவாலிங்கனம்பண்ணி கண்ணீர்சலம்பெருகச்சொல்லுவார்.

கீர்த்தனம்-லாவணி-ஆதிதாளம்.

தில்லைவெளியிலேகலந்துகொண்டாரவர்திரும்பியும்வருவாரோ
எல்லைகண்டபேரினிப்பிறவாரென்றியம்புவதறியாரோ
பெண்டுபிள்ளைகள்வெறுங்கூட்டமது பேய்ச்சுரைக்காய்தோட்ட
கண்டுகொள்வார்பெரியோரறிவிற்கனகசபையினாட்டம் [ம்
திருவாதிரையில்தெரிசனங்காணத்தேடித்திரியாரோ
அரிதாகியவிந்தமானிடங்கிடைத்தாலானந்தமடையாரோ

குஞ்சிதபாதத்தைக்கண்டாலொழியக்குறையதுநீங்காதே
சஞ்சிதக்குமராதிகளுடாடியசடலமுந்தாங்காதே
சேரியிடையிலேகுடியிருந்தாலிந்தச்சென்மமுந்தொலையாதே
சிதம்பரம்போவேன்பதம்பெறுவேன்தடைசெய்வதுமறியாரோ
இரவும்பகலுமொழியாக்கவலையிருப்பதுசுகமோடா
இன்பம்பெருகும்பரமானந்தவெள்ளமிழுந்துநீபோடா.

வசனம்.

சிதம்பரம்போவேன் நீங்களிங்கே இருங்களென்று நந்தனார்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்- செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.,

சிந்தனைசெய்துக்கொண்டிருந்தாலுங்களுக்
கெந்தவிதமுங்கறையேறலாம்சிவ (சிந்தனை)
அந்தணமுனிவருமிந்திரனமரரும்
வந்துபணியுமரவிந்தபொற்பாதத்தை (சிந்தனை)
மாமலைவளைத்தவன்காமனையெரித்தவன்
மான்மழுதரித்தவன்தாமரைப்பாதத்தை (சிந்தனை)
தம்புருவணிந்திடுந்தும்புருநாரத
ரும்பணியும்பொன்னம்பலவாணனை (சிந்தனை)
வெம்பியதும்பிக்கருளியபாலகிருஷ்
ணன்பணியுந்திருவம்பலநாதனை (சிந்தனை)

கீர்த்தனம்-இ-ம்-பூரிகல்யாணி- அல்லது-சாமராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைத்தலமென்றுசொல்லத்தொடங்கினு
மில்லைப்பிறவிபிணியும்பாவமும்

அநுபல்லவி.

சொல்லுக்குமிதுவேசிவலோகம்
எள்ளத்தனையறஞ்செய்யில்மோகங் (தில்லை)

சரணங்கள்.

ஆகமவேதபுராணங்கள் சாத்திர
மருந்தவம்புரிவாற்கருளிய பாத்திர
யாலயமாயிரத்தெட்டினி னேத்திர
மானந்தத்தாண்டவமாடிய க்ஷேத்திர (தில்லை)
கணத்திலாமணிமாதி சித்தியுங்
கரத்திலாரும்விண்ணாடர்கள் வெற்றியும்

இணையில்லாத குருசாஸ்திர பத்தியும
இகத்திற்றுனேவருஞ்சிவபத முத்தியும்(தில்லை)
பரமரகசியமொன்று பார்க்கலாம்
பாலகிருஷ்ணன் கவிபாடிக் கேட்கலாம்
கருமவினைகளடங்காமற் போக்கலாம்
கசடர்கட்குமுத்தியுமுண் டாக்கலாம்(தில்லை)

வசனம்.

நந்தனர் ஞானவுபதேசஞ்சொல்லக்கேட்டு முன்னேநந்தனருடன் திருப்புன்கூரிற்போய் சிவதரிசனஞ் செய்துவந்தவர்களாகிய-அறவன்-தொந்தி-ஆனையேறி-முத்துமாரி-கழனிகாத்தான்-பாச்சலூரான்-ஆண்டிசேவகன்-சொறியன்-வெறியன்-காணியான்-எல்லைச்சுற்றிஎன்கிற பெரியகிழவன் இந்தஆறிருபேர்களு மானந்தமடைந்து அவரவர்கள் நிஷ்டையிலிருக்கத் தொடங்கினார் மற்றபுலையர்கள்கூட்டங்கூடி நந்தனர் நம்மைநாளொன்றுக்கு மூன்றுதரஞ் சிவநாமததைச் சொல்லச்சொன்ன குற்றத்தைப்பாராட்டிநந்தனையடிமைகொண்ட அந்தணனிடத்திற்சொல்லுவார்.

விருத்தம்

இரவுபகல்பரமசிவனிணையடியேதொழுதிருக்குமின்பங்கூறிக், கனைபுரளுங்கடலைப்போற் சிவத்தினிடைக்கருத்துணரக்கண்டெல்லாரும், பரவிவரும்புலையர்களும்பண்புறவேநெறிகாட்டிப்பகரக்கேளீர், அரியதொருநந்தனவனடிமைபுரியந்தணர்பாலறிக்கைசெய்வார்.

நொண்டிச்சிந்து-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

ஐயோ ஒருசேதிகளும்-உங்கள்- அடிமைக்காரப்பறைய னட்த்தையெல்லாம் - வரவரக் கெட்டுப்போச்சு - சேரியில் - வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான் - குடியிருக்கமாட்டோம் - எப்போதும் - கூக்குரல்போடுவாருக்கமறந்தே - இருப்பானொருவேளை - கொள்ளாத-ஏக்கமடைந்தவன்போல் நாக்கைவளைத்துச் - சிரிப்பானொருவேளை-தில்லைச்-சிதம்பரமென்றுசொல்லி மதம்பிடித்தே- அழைப்பானொருவேளை-எங்களையும் - அண்ணேவாவென்றுசொல்லி- கிணறுரங்கொட்டி- குதிப்பானொருவேளை-திக்குமுக்கல் கொண்டவன்போ லெதையோ கண்டவன்போல்-களிப்பானொருவேளை-மரம்போலே-கையசைக்கல்-காலசைக்கல்மெய்யசைக்கலும் - இருக்காதொருவேளை - தாளம்போட் - டெக்கலிகொட்டியே குடிசைக்குட்புகுந்து-பேசானொருவேளை- கண்டதெல்லாம்-பிரட்டென்றுசொல்லுவான் முரட்டுத்தனம்- மன்னருசாமிபோலே கிளம்பி-வாய்விட்டலறுங் குரலொட்டுமே-ஐயோசிவனேயென்பான் கீழேபுரண் - டழுவான்யானையுந்தொழுவானே - தூண்டினதுபோலே

துள்ளித் துள்ளித் - துடிப்பான்பற்களைக் கடிப்பானே-சிவனென்றுமூன்றுதரம - நாங்களுஞ் செப்பவேணுமல்லாவிடில் வைப்பிலுதைப்பான்-கோயிலிற்போவோமென்பான்- எங்களையும்-கும்பிடச்சொல்லி யில்லா வம்புபண்ணுவான்-சுற்றிவரச்சொல்லியடிப்பான்-சிவன் பேரைச்-சொல்லடா சந்நிதியில்நில்லடாவென்பான்-சொல்லித்தலைக்கவேணும்-இல்லாவிடில்-சுக்குமாந்தடிகொண்டு நொக்கிவிடுவான்-கொம்பேறி மூக்கன்போல - முதுகினில்-குத்துவான்புலிபோலே தத்துவானே-இது வென்னகாரணமோ- எங்களுக்-கீனமாயிருக்குது மானமல்லவோ- கறுப்பண்ணசாமிதானோ-இருளன்-காட்டேறிவீரனிவன் யிட்டேறியோ-பாவாடைதுரைதானோ-ரண-பத்திரகாளியோவுன்மத்தவீரனோ-பூசைகள்போட்டுப்பார்த்தோம்-ஒன்றிலும-போவதில்லைகாரியமாவதில்லையே-எங்கள்வள்ளுவரைக்கேட்டோம்-அவர்-எடுத்துச்சொன்னாரிதை விரித்துச்சொன்னார்-மயான உருத்திரனார்-பிடித்து-வாட்டுதடாயிப்படியாட்டுதென்றார் - தெளியாதென்றுசொன்னார் - ஐயேதெளியாதென்றுசொன்னார்.

கீர்த்தனம்-இ-ம்-கன்னடபியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

சேதிசொல்லவந்தோம்-நந்தனார்-சேதிசொல்லவந்தோம்

அநுபல்லவி.

சாதிமுறைமைதெரியாதவனுமக்கூத
வாதவனென்றொருமாதமாய்த்தெரிந்த (சேதி)

சரணங்கள்.

ஏரைப்பிடித்துச்சற்றே உழுவான்-மன
தேங்கித்தள்ளாடியே விழுவான்-எங்கள்
சேரியைப்பார்த்தே அழுவான்-சிவ
சிதம்பரமென்றே தொழுவானையே (சேதி)

நாத்துமுடியைக்கையி லெடுப்பான்-அதை
நடத்தெரியாமலே விழிப்பான்-இதைப்
பார்த்திடும்பேர்களைப் பழிப்பான்-அடே
பாவியென்றங்களை அடிப்பானையே (சேதி)

உதட்டையசைத்துமுணு முணுப்பான்-அவன்
ஊணுறக்கத்தையுந் துறப்பான்-நாங்கள்
அதட்டிப்பேசினு லடிப்பான்-பொன்
னம்பலவாணனைப் படிப்பானையே (சேதி)

கீர்த்தனம்-இ-ம்-கமாசு-ஆதிதாளம்.

பல்லவி.

அடக்கியாளுமையே-இவனை-அடக்கியாளுமையே

அநுபல்லவி-

அடக்கியாளுமிந்தத் துடுக்குக்காரனிவனை
யடித்துப்பிடித்துக்கணடித்துப்படபடத்து (அடக்கி)

சரணங்கள்.

பொன்னம்பலவாணனென்றிவன் பேசி
பொழுதுபோக்குவான்சாமபலைப் பூசி
சன்னதங்கொண்டவன்போலவே வாசி
சண்டைபிடிக்கவருவானவன் தோஷி(அடக்கி)

பலித்துதையேஒருமந்திரம் போட்டான்
பழைமையானஇனிதங்களைக் கூட்டான்
குலத்தைக்கெடுக்கவந்தானிவனொரு கோட்டான்
கோபக்காரனெங்கள்வழிப்பட மாட்டான்(அடக்கி)

குளத்தைவெட்டச்சொல்லிக் கூலியைக்கொடுத்தான்
கூட்டிக்கொண்டுபோய்ப் பயல்களைக்கெடுத்தான்
களத்தைச்சீய்க்கவேயெங்களை விடுத்தான்
காடுமண்டிவருஞ்சுடலையிற் படுத்தான்(அடக்கி)

வசனம்.

சேதிசொல்லவந்தபுலையர்களைப்பார்த்துவேதியர்சொல்லுவார்.

விருத்தம்.

காலமேவந்தானிங்கே கள்ளக்கும்பிடுகள்போட்டு
பாலனைப்போலேபேசிப் பசப்பினன்போடாவென்றேன்
வேலைசூழுலகிலிந்த வீணனைப்போலேகாணேன்
சீலமாஞ்சிதம்பரத்தைச் சேரவேவிடைகொடேனே.

வசனம்.

அந்தணர்சொன்னமொழியைப் புலையர்கள்கேட்டுமிகவுஞ்சந்தோஷங்கொண்டு சேரிவந்து சேர்ந்தபின் நந்தனொப்போதும்போலே அந்தணரிடத்தில்வருகிறார்.

துக்கடா-ஆதிதாளம்.

நந்தனாரும்வந்தார்-வெகு
சொந்தமானதங்களையாளக்காண (நந்த)

அங்கமுழுதிலுங்கீறுபூசியே அரகரசிவசிவவென்றுபேசியே
சங்கையாருந்திருக்கைகள்வீசியே சாமிசாமியென்றுதன்னையேசியே(ந)
தில்லைச்சிதம்பரபள்ளுபாடியே தெரிசனங்காணேனென்றுவாடியே
அல்லலறுஞ்சிவலோகந்தேடியே அடையுவேணுமென்றிங்கோடியே

நந்தனாரும்வந்தார்.

விருத்தம்.

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சந்தேகந்தெளியாதுதானுயிற்கும்
பேதகுணம்பற்றறுத்துப்பேரின்பம்வருவித்துப்பேணிக்காக்கும்
ஆதிபராபரமென்னுந்திருச்சிற்றம்பலத்தைக்கண்டறிவிலுன்ன
வேதமொழிவிளங்கிவருந் திருவாயால்விடைகொடுத்துவிடுவீரென்றார்.

கீர்த்தனம்-இ-ம்-உசேனி-ரூபகதாளம்.

தில்லையம்பலத்தலமொன் றிருக்குதாம்- கண்டபேர்க்கு
சென்மமரணபிணியைக் கருக்குதாம்
உபருஞ்சிகரக்கும்பந் தெரியுதாம்- கண்டபேர்க்கு
உள்ளங்குளிரக்கருணை புரியுதாம்
பண்ணவரயன்மாலுந் தேடுமாம்-தில்லைக்காட்டில்
பாம்புபுலிக்கூளிர்த்த மாடுமாம்
அரியபிரமனெழுத்தைத் தள்ளுமாம்- ஆனையுமது
ஆனந்தமூழ்க்காட்டிக் கொள்ளுமாம்
போய்வருபவர்புண்ணிய சாலியாம்- தருமராசன்
புறத்தில்பழுதுவந்து கேலியாம்
உருவில்லாதகுருவொன் றிருக்குதாம்- மூலக்கனலை
ஊதிபெழுப்பிக்காணப் பெருக்குதாம்
உருவமாகிவெளியே வருகுதாம்- நான்மறைக்கு
மூணர்வில்லாதகாட்சி தருகுதாம்
போய்வருகஉத்தாரந் தாருமே-பொன்னடித்தாள்
போற்றுவேன்கண்ணாலே பாருமே- (தில்லை)

வசனம்.

சிதம்பரம் போவேனென்று அந்தணர்கேட்கும்படி நந்தனார்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ஏகதாளம்.

தாதரிகிடதகசந்தரிசனதசாதகிமிதகிடதகணந்தரிதீனதத்திம் தகசந்தரிகுந்தரிதந்தகணந்த னனந்தனனந் தனந்தனந்தசணகி த்தனதத்தின்னகிட தகதோந்தத்தின்னகிடதகதோந்தத்தின்ன கிடதகதோம்.

பல்லவி.

ஆடியபாதத்தைக்காணுமோ பிறந்-தானந்தம்பூணுமோ.

அநுபல்லவி.

காரிந்தைப்பூரணபூசத்திலே தில்லை
நாயகனூர்த்ருருவாரத்திலே மன்றுள் (ஆடிய)

சரணங்கள்.

பாசமறுத்துடல் வாசியொடுக்கி
பத்திபண்ணுங்காட்டில் பாம்புபுலிக்கி
ஆசையுடனே யருளைப்பெருக்கி
அன்பர்களிக்கச் சிலம்புகுலுக்கி (ஆடிய)
கொட்டமுளிக்கும் புலன்தொழில்நீக்கி
கோடிகாலஞ்செய்த பாழ்வினைபோக்கி
வெட்டவெளியிலே கெட்டிடத்தூக்கி
வேதம்பணிந்திடத் தென்முகம்நோக்கி (ஆடிய)
சேணுஞ்சடைப்புனல் பூமியில்சொட்ட
சேவித்தநாரதர் பாடியேகிட்ட
கோணங்கிழிந்தண்ட கோளமுமுட்ட
கோபாலகிருஷ்ணனு மத்தளங்கொட்ட (ஆடிய)

வசனம்.

ஆனபடியினால் நான்சிதம்பரம்போக உத்தரவு தரவேணுமென்று அந்தணரைத் திருநாளைப்போவார் கேட்கிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

உத்தாரந்தாருமையே-எனக்
கொருவருமில்லைபரகதியடைய (உத்தாரந்)
வித்தைகள்கற்றதுமில்லை-யாதொரு
பத்தியிற்சென்றுபரகதியடைய (உத்தாரந்)
குற்றங்களைத்தனைகொடியேன்செய்தேன்
அத்தனையும்பொறுத்தாதரவாக (உத்தாரந்)
பெண்பிள்ளையென்றுபேயனைப்போலவே
கண்டுகளித்துக்காலங்கழித்தேன் (உத்தாரந்)
தில்லைச்சிதம்பரத்தைதெரிசித்துவந்துங்க
ளெல்லையைக்காத்துக்கொண்டிருக்கிறேனையே (உத்தாரந்)

வசனம்.

நந்தனூர் சிதம்பரம்போக உத்தரவு கேட்டதனால் வேதியரடிமையைப் பார்த்துச்சொல்லுகிறார்.

விருத்தம்.

படிபுகழ்த்தில்லைநாதன் பத்தியேயுருவாய்வந்து
கடிநகராதனூரில் களித்திடும்நந்தனென்று

சிடுசிடுமூஞ்சிகாட்டிச் சில்விடம்போலேநெஞ்சந்
துடிதுடித்திடவேனுயந் தோஷியும்பேசுவானே.

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

சேரிமுற்றுஞ்சிவபத்திபண்ணும்படி
விட்டையாமது விட்டையாம்
சேதிசொல்லவேணுமென்றிங்கேநீ
வந்தையோ.அகப்படுகிழ்ந்தையோ
காலைமாலையில்வந்துதெரிசனங்
காட்டுறாய்சிலைநாட்டுறாய்
கதறினாலுமூர்க்குருவிகருடன்போ
லாகுமோவதிவேகமோ
அடிமைவேலைசெய்யுமுனக்கிந்தக்கொண்
டாட்டமோசெனக்கூட்டமோ
அடக்கியாளமாட்டேனோசிங்கக்குட்டி
யல்லவோவதைசொல்லவோ
காளிபூசையவர்போமேபோதுநீ
கண்டித்தையாந்தெண்டித்தையாம்
கபடமெல்லாம்வெளிப்படுவதாகவழி
காட்டுறேனிதைநாட்டுறேன்

வசனம்.

நந்தனார் சிதம்பரம் போறேனென்று சொல்லுவதால் அந்தணர்கண்டிக்கிறார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

பல்லவி.

பறையாநீசிதம்பரமென்றுசொல்லப்
படுமோடாபோகப்படுமோடா-அடே (பறையா)

அநுபல்லவி.

அறியாத்தனமினிசொன்னாலினிமே
லடிப்பேன்கூலியைப்பிடிப்பேன்பாவிப் (பறையா)

சரணங்கள்.

சிதம்பரமென்பதை விடு-கொல்லைச்
சேறடியிலேவந்து படு-நாத்தைப்
பததிலேபிடுங்கி நடு-கறுப்
பண்ணனுக்கேபலி கொடு-அடா-(பறையா)
எப்போதுமொருதடி பிடி-கையி
லெடுத்துக்கொண்டே-தமுக் கடி-உங்கள்

கற்பனையாம்பள்ளு படி
காலனோகாமலேகாடியைக் குடி-அடா (பறையா)
கள்ளந்தீருதற்குப் பாரு-உன்
கால்படும்பணையில்வீற் றிரு-இது
சொன்னதுமில்லையோஉன் ஏருநீ
சுகமுடன்வாழ்ந்துக்கொண் டிரு-அடா-(பறையா)

விருத்தம்.

ஓதியடிவீராவென்றும் உக்கிரமாடாவென்றும்
பதிபெறுங்கறுப்பாவென்றும் பாவாடைராயாவென்றுந்
துதிபெறுமிருளாவென்றுந் தொட்டியச்சின்னனென்றும்
மதுவொடுபிசிதம்வைத்துவருந்தியேவணங்குவாயே.

வசனம்.

அந்தணர் நந்தனைக்கண்டித்து மறுபடியும் நல்லவார்த்தைசொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தா-ஒருசேதிசொல்லுறேன்கே
ளிந்த-பங்குதோன்றியநாளமுதல்
சொந்த-முறியெழுதிக்கொடுத்தநீ
வந்த-பறையனல்லவோமறந்தாய் (நந்தா)
பாரு-இந்தவயல்வரப்பைவெட்டிப்
பேரு-அந்தக்கழனியைவெட்டிப்பணை
சேரு-பொறுப்புள்ளவனுனையன்றி
யாரு-இதுவல்லவோகாரியம் (நந்தா)
வாடா-உன்கூலியைமுழுதுந்தா
வோடா-பண்ணைப்பறைச்சிகளுடனே
கூட-பழனங்கடோறும்நடப்
போடா-இதுவல்லவோபுண்ணியம் (நந்தா)
பாடு-உன்கறுப்புதெய்வத்தைக்கொண்
டாடு-கள்ளுசுள்ளுடன்பூசைகள்
போடு-நெல்விளையும்படிக்குவழி
தேடு-புத்திசொன்னேனிதுதான் (நந்தா)

வசனம்.

வேதியர் நந்தனைச் சிதம்பரம் போகாதேயென்று கண்டித்துச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாதே-சொன்னேன்-சிதம்பரம்போகாதே

அநுபல்லவி.

சிதம்பரம்போனால்-இதம்பெறலாமென்று
சேதிசொல்லுறாயுன் ஜாதிக்கடுக்குமோ (சிதம்பரம்)

சரணங்கள்.

கள்ளக்கும்பிடுதனைப் போடாதே-உன்
கபடமில்லாமிங்கே காட்டாதே
மெள்ளச்சொல்லடாமுழுமூடாகிழே
தள்ளிவிட்டுஉன்னைத்தகும்படி செய்வேன் (சிதம்பரம்)

நாத்தைப்பிடுங்கிக்கழனி நடவேணும்-அந்த
நஞ்சைவயலைச்சற்றே யுழவேணும்
பார்த்துப்பரம்படித்துப்பழுதுவராமல்
பாயுஞ்சலம்விட்டுப் பார்த்திடுவாய்நீ (சிதம்பரம்)

அடிக்கடிமறுத்துநான் சொல்லவோ-நீ
அடிமைக்காரப்பய லல்லவோ
எடுத்துக்காட்டுவேனிருக்குதுசாதனம்
தடுத்துப்பேசினால் தாடையிலடிப்பேன் (சிதம்பரம்)

வசனம்.

அந்தணர்கண்டித்துச் சொன்னதால்நந்தனார் துயரமடைந்து சேரியில்வந்து சிவனைநினைந்து பக்திபுரிந்து கொண்டாடுகிறார்

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ரூபகதாளம.

பல்லவி.

பத்திபண்ணிக்கொண்டிருந்தால்-முத்திபெறலாமே

அநுபல்லவி

எத்திசையுமெவ்வுயிர்க்குமவ்வுயிராய்நிறைந்திருக்கும்
வஸ்துவென்று அம்பலவன் மலரடிநினைந்தோறும் (பத்தி)

சரணங்கள்.

கட்டழகிசோரனிடங்காதலது போலே
கடுகிவருங்கன்றுகில்கபிலையது போலே
கட்டவரைத்துணியுமில்லாப்பேதையொருக் காலே
காவலனார்பதம்வருகில்களிப்பதனைப் போலே
கண்டுமுறைகிழகலக்கண்டறியார்மதுமயக்கங்
கற்பனையாமிப்பிரபஞ்சஞ்சொற்பனம்போலொப்புமிகும் (பத்)

தாயடிக்கில்பால்குடிக்கத்தழுவுதல்திருஷ் டாந்தம்
சடலம்பொறுக்காமல்துயர்தருகிறு மேகாந்தம்
ஆயிருந்துவழுத்திலிந்தமாயையுப சாந்தம்
ஆகுமென்றுசாதனங்கள்வழங்குது வேதாந்தம்
காயஞ்சனிக்காதிருக்கக்கண்டுகொள்ளவேணுமென்றால்
காசுபணம்பாசமதுமாசறவே நேசமுடன் (பத்தி)

பச்சைமரத்தாணிபோலேபதிந்துமனம் நாடி
பாலகிருஷ்ணன்பணியும்பொன்னம்பலவனைக்கொண் டாடி
இச்சையொழிந்தைம்புலன்களைந்துகளும் வாடி
ஏகரசமானபரிபூரணத்தைத் தேடி
அச்சமறந்திருவிழியிலானந்தநீர்கனாபுரள
அரனேதிரிபுரனேகங்காதரனேபராபரனேயென்று (பத்தி)

வசனம்.

சேரியில்சிவபத்தி பண்ணிக்கொண்டிருக்கின்ற பன்னிருபேர்களுடன் நந்தனருமிருந்து பக்திபண்ணும்நாளையில் ஒருநாள் நந்தனர் பன்னிருவருடைய பக்திதிடப்பட்டதோ இல்லையோவென்று அறியப்பரிட்சைபார்த்தார்.

இருச்சொல்லலங்காரம்.

நந்தனர்-சிவதலத்தில்சிதம்பரமேகாட்சி யென்றார்
அவர்கள்-அவித்தைகளைத் துணடிநிற்றலேகாட்சி யென்றார்
நந்தனர்-சிற்சபையின்மகிமையென்னசெப்புவீ ரென்றார்
அவர்கள்-அச்சுதனுங்காணுதவானந்த மென்றார்
நந்தனர்-ஆக்கையினுலென்னபலனு மென்றார்
அவர்கள்-நாக்கதனுலேசிவநாமநவிலு மென்றார்
நந்தனர்-கற்றதனுலென்னபலன்கண்டா ரென்றார்
அவர்கள்-கொற்றடிமைக்காரன்பலன்கொண்டா ரென்றார்
நந்தனர்-அம்பலத்தைத்திரைபோடத் தொடங்கினுரே
அவர்கள்-சம்புவித்தையாயைக்கு ளடங்கினுரே
நந்தனர்-மனத்திருத்திகொண்டார்க்குவராதொன்றில்லை யென்றார்
அவர்கள்-கனவருத்தமுண்டாக்குங்காராதுதொல்லை யென்றார்
நந்தனர்-சாதியிலேயெளியவன்தானறிவேனே வென்றார்
அவர்கள்-ஆதியிலேபேதமில்லைஅறிவீரோ யென்றா
நந்தனர்-ஞானமில்லாதவர்முத்திநாடா ரென்றார்
அவர்கள்-ஊனமில்லாச்சிவபக்திதேடா ரென்றார்
நந்தனர்-மதியில்லாதவர்களுக்கெல்லாம்விதியே தென்றார்
அவர்கள்-துதியில்லாதவர்க்கெல்லாங்கதியே தென்றார்

நந்தனார்-பவக்கடலைக்குளப்படிபோல்பகுப்பா ரென்றார்
அவர்கள்-சுகக்கடலிலிளைப்பாறிசுகிப்பா ரென்றார்
நந்தனார்-பாப்பானுத்தாரங்கொடுப்பானோ வென்றார்
அவர்கள்-காப்பாற்றுங்கடவுளுக்குக்கைப்பார மென்றார்
நந்தனார்படித்தாப்போல்காட்டிவிட்டேன்பலமாச்சுதென்றுசொன்னார்
அவர்கள்-அடித்தப்பால்போட்டுவிட்டாராலேயாகு மென்றார்
நந்தனார்-அங்கேயேன்நீங்கள்வல்லையோ வென்றார்
அவர்கள்-இங்கையேனதுஇல்லையோ வென்றார்
நந்தனார்-எங்கும்நிறைந்தபூரணங்க ளென்றார்.
அவர்கள்-இங்குமிருந்துஇயற்றுங்க ளென்றார்

வசனம்.

இப்படிஇருக்குங்காலத்தில் ஒருநாள்நந்தனார் தனக்குத்தானே பரவசமாய் ஆனந்தக்கண்ணீர்பெருகிப்பாடுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

பாடுவாய்மனமே-சிவனைக்கொண்-டாடுவாய்தினமே

இந்திரன்முதலியஇமையவர்க்குபகார
நந்தியின்மீதேறுமநம்பன்பதம்போற்றி (பாடுவாய்)
ஆலந்தனையுண்டமரரைக்காத்திரு
நீலகண்டன்கழல்பெறநெறியுடன்போற்றி (பாடுவாய்)
சீலமாதவர்சித்தத்தினின்றுடுஞ்
சூலபாணியனெனுஞ்சுயம்புதாள்போற்றி (பாடுவாய்)
மோகமாந்துன்பத்தினால்மூழ்கிக்கெடாமல்
ஆகமமுறையிடும்அந்திவண்ணனைப்போற்றி (பாடுவாய்)
பஞ்சாக்ஷரந்தன்னைப்பக்தியாயுருவேற்றி
மெய்ஞ்ஞானம்பெற்றுய்யுமேலோனைநீபோற்றி (பாடுவாய்)

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரமேவினைமனமே-முத்தி-பதம்பெறலாகுமனமே

அநுபல்லவி.

சதம்சதமெனும்பொருளபதம்பதம்மய மருள்
சமரகடம்புரிசாமிசிதம்பரவிமலன்திருவுருநீகொள் ளரகர(சிதம்)

சரணங்கள்.

ஒழியாக்கவலைகொண்டு விழலாய்-ஆனாய்
உண்மையில்லாவீட்டுநிழலாய்

தழுவாதிருந்ததில்லைத்தலமெனுமேல் வீட்டை
சார்ந்தாலல்லோநல்லசாபல்யமாம் பாட்டை
சந்ததமும்பெற பந்தமுமேயற
எந்தவினைத்திற முந்தூரம்முற (சிதம்)
தேகமெடுத்தவருண்மை யறியாய்-மோசத்
தெரிவையர்வலைசிக்கிமுறியாய்
சாகுமட்டுஞ்சம்சாரமே வீட்டு
சவியாமலேயுழைத்துச்சண்டாளமாந் துட்டு
சம்பாத்தியமது வம்பாகும்விதி
நம்பாதித்தீதி தெம்பாயதிபதி (சிதம்)
உனக்குள்ளேயுணர்வாய்நீ மோனம்-உண்மை
ஓர்வழிகாட்டுமே ஞானம்
தனக்குச்சிதம்பரஞ்சார்ந்தாலே தன்மயம்
சத்தியமாய்க்கூட்டும் சாம்பிராச்சியசின்மயம்
சரிவரசிவகுரு வசமயமாய்வரு
முருவெளியெனுமொரு பொருளதுவாந்திரு (சிதம்)

தூக்கடா.

ஹரஹரஹரமகாதேவா
சிவகாமிநாதாதில்லையில்வாசா

வசனம்.

நந்தனார்சிலநாளானபின்பு அடிமைகொண்ட அந்தணரிடத்தில் வந்துசிதம்பரம்போக உத்தாரம்மிகவும் வருந்திக்கேட்கிறார்.

இது-அறுசீரடி-விருத்தம்.

வேதியரோபெரியவரோ நல்லவரோ நான்கடையன் விண்ணோர்மெச்சும்
சாதியரோபலகலையுங் கற்றுணர்ந்துபுரையில்லாத் தவமேசெய்யும்
போதியரோபத்தியில்லாநான்புலையனேதறியேன்புண்ணியமூர்த்தி [ரோ
ஆதிகுருசிதம்பரத்தைக் காணவென்றே யாசைகொண்டே னனுப்புவீ

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைச்சிதம்பரத்தை ஒருதரமாகிலுக்
தெரிசித்துவாவென்றுத்தாரந்தாருமையே

அநுபல்லவி.

தில்லைச்சிதம்பரத்தைக்கண்டால்பிறவிபிணி
இல்லையென்றுபெரியோர்சொல்லக்கேட்டிருக்கிறேன் (தில்லை)
அல்லலறுக்குந்திருவம்பலநாயகன்
அல்லும்பகலுமாமோனந்தம்பெருகிய (தில்லை)
ஆதிமுதலாயென்னை அடிமைகொண்டதல்லவோ
வேதகுலமேயெந்தனிமீதில்தயவுசெய்து (தில்லை)

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசிக்கவேணுஞ்-சிதம்பரத்தைத்-தெரிசிக்கவேணும்

அநுபல்லவி.

தெரிசித்தவுடனுடல்கரிசைப்பிணிகளறும்
பரிசுத்தமாகுமுன்மறுசுத்தமாகவே (தெரிசிக்க)

சரணங்கள்.

பக்தர்பணியுந்திருக் கூத்தன்சந்நிதிதொழு
தேத்திப்பிறவிதுய ராத்தியெப்போதும (தெரிசிக்க)

வேதனையடியவர் போதனைமுனிவர்கள்
நாதனைகரங்குவித் தாதரவாக (தெரிசிக்க)

ஈசனேபுலியூரில் வாசனேகனகச
பேசனேயென்று நடராசனைப்போற்றி (தெரிசிக்க)

காமக்கையகலவர் வாமத்தினின்றுசிவ
நாமத்தைச்சொல்லியர்த்த சாமத்தில்வந்து (தெரிசிக்க)

ஞாலம்புகழுமவன் மாலையணியுங்கோ
பாலகிருஷ்ணன்தொழுஞ் சீலபொற்பாதனைத் (தெரிசிக்க)

வசனம்.

நந்தனார்தரிசனஞ்செய்யஉத்தாரங்கேட்கஅந்தணர்சொல்லுகிறார்

இஃதெண்சீரடி யாசிரியவிருத்தம்.

புத்திசொல்லிகேளாத மூடாவுந்தன்
புரட்டெல்லாநானறிவேன் போடாபோடா
பத்தியென்றுஞ்சித்தியென்றும் பறையர்க்கேது
பாப்பாரதெய்வமது பலிக்காது
குற்றமுண்டுன்சாதியிலே வழக்கமில்லாக்
கொள்கையிலேசேரியிலே கூடாதப்பா
பித்தமதுகொண்டவன்போ லிங்கேவந்து
பேசாதேபோபோவென் றேசுவானே.

கீர்த்தனம்-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரதெரிசனமா-நீயதைச்-சிந்திக்கலாமாபறையா
சிதம்பரதெரிசனஞ்சதுர்மறையோர்கள்
செய்வதுஞாயம்நீசொல்வதுமாயம்
சொல்லாதே-இங்கே-நில்லாதே
சேரிக்குப்போடாநாளைக்குவாடா (சிதம்)
சனகமகாமுனியோகிகள்தேடிய
கனகசபேசனைக்கண்டறிவாயோ
பேசாதே-கை-வீசாதே
வீரனைதொழுடாஏரியைஉழுடா (சிதம்)
தவமுடையோர்கள்தரிக்குமந்திரஞ்
சிவபதமென்றுசேவிக்கலாமா
ஆகாது-வினை-போகாது
விரைதெளியன்றோ அறுதலிமகனே (சிதம்)

வசனம்.

உழுதுசேறுபண்ணி பரம்படித்து விரைதெளித்துநாற்றுபறித்து நடவுநட்டு மடைதிறந்து மடைகோலி களைபிடுங்கி காத்திருந்து பதத்திலறுத்து கட்டியடித்து நிரம்பிய பட்டடையைக் காப்பதுமில்லை இராக்காலங்களில் பந்தம்பிடித்து தடியெடுத்துகொம்புதம்பட்டமுழங்கிகோலாகலமாகி நாலுபறையரோடுங்கூடி வரப்பைவிட்டோரைச்சுற்றிவந்துகாக்கும்படி கிராமத்தாரிட்ட காவல்காப்பதுமில்லை உனக்குவேண்டியஊணுறக்கம் முதலாகியதேசதருமம் மறந்து எப்போதும் தில்லையம்பலம் திருச்சிற்றம்பலம் சிதம்பரம்என்று பித்துப்பிடித்துத் தாயைவிட்ட குழந்தைபோல வாய்விட்டலறி பேய்ப்பிடித்தவன்போல் மதிமயங்கிஉடல்கலங்கி எல்லோரும்பழிக்கக் கீழேபுரண்டழுது தத்துபித்தென்று தள்ளாடிய காரணமென்னவென்று அந்தணர் நந்தனைக்கேட்கிறார்.

கீர்த்தனம்-இ-ம்-சூரியகாந்தம்-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாவுனக்கிந்தபிர்மை-வந்தகாரணம்-நானறிந்திடச்சொல்லும்

அநுபல்லவி.

அந்தரங்கமுள்ளசொந்தபறையனே
யன்றுயிருப்பதுபோய்சண்டைபிடிக்கவந்தாய் (நந்தா)

சரணங்கள்.

சாதிமுறைமைதுறந்தாய்-தில்லைச்
  சபாபதியைநினைந்தாய்
சூதுக்காரபறையருடன்கூடிச்
  சும்மாவிருப்பதுஎமமாத்திரம்நான் (நந்தா)

குலத்திலில்லாதவழக்கம்-நீயதைக்
  கொண்டாடுறெழுக்கம்
வெளுத்ததிருநீறென்னஎருமைச்சாணியது
  மேனியிலணிவரோவையகந்தன்னில் (நந்தா)

திருட்டுப்புரட்டுமறியாய்-பொல்லாத்
  தீங்குவார்த்தையுரையாய்
முரட்டுத்தனத்தையென்முன்னேகாட்டி
  விரட்டிப்பேசுறாய்வெறிமயக்கமோஅடா (நந்தா)

வசனம்.

வேதியர்நந்தனாரைப்பார்த்துச் சிதம்பரபிரமை வந்தகாரணமென்னவென்றுகேட்க பின் நந்தனார்வேதியருக்குச்சொல்லுவார்

இஃதறுசீரடியாசிரியவிருத்தம்.

மனங்கண்டவிடமெல்லாம்போகாமலாணையிட்டுமறித்துவாங்கி
அனல்கண்டமெழுகதுபோலெனதுள்ளந்தனதாகவுருகிச்சாய்க்கும்
புனல்கொண்டவேணியனைப்புண்ணியனைப்புராந்தகனைப்போற்றிசெய்யக், கனங்கொண்டதில்லைநகர்போய்வருவேன்கருணைவழிகாட்டுவீரோ.

வசனம்,

நந்தனார்வேதியரைப்பார்த்து உத்தாரங்கேட்கஅந்தணர்சொல்லுதல்

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

நட்டநடவுவிளையும்பொட்டவெளியைத்தொட்டபோதிலும் (நட்ட)
கெட்டமதியைவிட்டுவிதிகேளடாபண்ணையாளடா (நட்ட)
கிட்டநெருங்கும்பண்ணையுன்கால்பட்டதினால்பசுமைகொள்ளும் (நட்)

விருத்தம்,

கதிரொருமுழமேநீளுங்கட்டுமுக்கலமேகாணும்
துதிபெறுநந்தாவுனைகைதொட்டதேதங்கமாகும்
பதிதனிற்பெருமைசொல்லும்பறையனாயிருந்துந்தில்லைச்
சிதம்பரப்பித்தேன்கொண்டாய்செய்தொழிலேதென்றாரே.

வசனம்.

நந்தனருக்குச்சிதம்பரபித்து தெளியாமையால்வேதியர்என்னசெய்யப்போறேனென்று துயரமுற்றுநந்தனைப்பார்த்துப் புலம்புவார்.

கீர்த்தனம்-இ-ம்-தனசரி-ஆதிதாளம்.

பல்லவி,

பித்தனய்ப்போனதென்ன நந்தா (பித்தனய்)

அநுபல்லவி.

எத்தனையோபுத்திகளெடுத்துப்படித்தும் (பித்தனய்)

சரணங்கள்.

சித்தமிப்படி செய்ததாரோ
பற்றுதலில்லாமலே பண்ணியபேராரோ
பத்தியென்றுபே ரிட்டதாரோ
நித்தமுமிப்படியே நிலையிட்டதாரோ (பித்தனய்)

எத்திசையும்புகழ் பெற்றிருந்தும்
வித்தைகளனேகம் விளம்பத்தெறிந்தும்
பத்தியோடுசால மறிந்தும்
கத்தனென்றுபேரிட்டு நானுனக்கிருந்தும் (பித்தனய்)

வசனம்.

மனதிற்றுயரமுற்றவேதியரை நந்தனார்மிகவும் வணங்கிச்சொல்வார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பித்தமதுதெளிந்துவிடமருந்துண்டு தில்லைவனம்பேணிச்சென்று
சத்திசிவகாமிப்பெண்சந்நிதியில்நேராகத்தலைவணங்கி
தித்தியென்றநடனமிடுந்திருக்கோலங்கண்குளிரத்தெரிசித்தால்
பித்தமதுதெளிந்துவிடும்வேதாந்தமறைசொரியும்பெரியகோவே.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

பித்தந்தெளியமருந்தொன்றிருக்குது-பேரின்பமன்றுள்ளே

அநுபல்லவி.

மற்றமருந்துகள்தின்றலுமுள்ளுக்கு வல்லே வல்லே வல்லே ஐயே அது [டுமை

சரணங்கள்.

பாம்பும்புலியுமெய்ப்பாடுபட்டுத்தேடிப்பார்த்துப்பயிரிட்டது - அந்த
ப்ராளந்திருமாயனும்வேதனும்பார்த்துக்களித்ததுண்டு ம-பார்பதியெ

ன்றொருசீமாட்டியதில்பாதியைத்தின்றதுண்டு இன்னம் பாதியிருக்கு
ப்பறையாநீயும்போய்ப்பாரென்றுத்தாரந்தாரும்தாரும் (பித்தந்)

பத்துத்திசையும்பரவிப்படர்ந்தாலும் பார்த்துப்பிடியாரோ, தத்திக்குதி
க்குந்தாளங்கள்போடுந் தண்டைச்சிலம்புகொஞ்சுந், தித்திக்குந்தேனோ
செங்கரும்போநல்ல சத்தமுடையார்க்கே-என், சித்தத்தைக்கட்டியிழு
க்குது அங்கே சென்றால்போதுங்கண்டால்திருமையே (பித்தந்)

ஊனைச்சொன்னாலுமிப்பாவந்தொலையு மூழ்வினைகளுமூடறுக்கும், பே
ணைக்கொண்டாடிப்புலம்புகிறார்வெகு பேர்களுக்குப்பிழைப்பு, சாருந
ணையுந்தீருமருந்துச்சாதியைப்பாராது-இன்னந்-தீராதநோய்கள்படைத்
தவெனக்குத் தீருந்தீருந்தீருமையே. (பித்தந்)

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாம லிருப்பேனோ
சென்மத்தைவீணாக்கிக் கெடுப்பேனோ(சிதம்பர)
பத்தியுமனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் சட்டமுமிங்கே(சிதம்பர)
ஆசையுநேசமு மானந்தமங்கே
பேசலும்பாசமும் பிதற்றலுமிங்கேசி(தம்பர)

வசனம்.

இப்படி நந்தனார்சொல்ல வேதியர் மூர்ச்சையடைந்துவிழுந்துதெளிந்து எழுந்துசொல்லுவார்.

இதுவுமறுசீரடியாசிரியவிருத்தம்.

நாற்பதுவேலிபூமி நடவுநட்டாகவில்லை
பார்ப்பதுமில்லைசைவப் பழமதுதின்றாய்பண்ணை
கார்ப்பதுமில்லையுன்னைக் கைவிடமனதுவல்லை
சேர்ப்பதாலாவதில்லைச் சேரியிற்றொலைந்துபோடா.

வசனம்.

என்றுவேதியன்சொல்லிய உத்தாரப்படி சேரியில் நந்தனார்வந்து பன்னிரண்டுபேர்களைப் பார்த்துச்சொல்லுவார்.

திபதை-இ-ம்-மாஞ்சை-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆசைநேசராகுந் தோழரேகேளுங்கள்
பேசுந்தெய்வங்களுண்டோஈசனல்லால்நடக்கு (ஆசை)

ஆயன்மாயன் அன்றடிமுடிகாணாத
சேயனழலுருவாய் நின்றநின்மலனல்லால் (ஆசை)
மண்ணாயவிண்ணாய்மற்றுளபொருள்களாகி
எண்ணுமெள்ளுமெண்ணெயபோலிருக்குமீசனல்லால் (ஆசை)
அருவாயருவாயண்டபகிரண்டமெங்கும்
பரமாய்நின்றதேதந்தப்பராபரத்தையல்லால் (ஆசை)

வசனம்.

என்றநந்தனார்சொல்லிப் பின்னும் ஆனந்தக்கூத்தாடுவார்

தரு-இ-ம-தந்யாசி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஆநந்தக்கூத்தாடினார்-ஆனந்தநந்தன்
ஆநந்தக்கூத்தாடினார்

அநுபல்லவி.

வானுந்திதேவர்முனிவர்ஜயஜயவென்று
வாழ்த்தும்பிரானடிகள்வாய்ப்பதெப்போதோவென்று (ஆநந்த)

சரணங்கள்.

மாயவலைக்குட் பட்டு-அதிலெப்போதும்
மாளாத்துயரப் பட்டு
மாயுமுன்னகவந்து வலியவாண்டருண்மூர்த்தி
நாயேனைகளிக்கவென்றான் ஞவென்றேசாத்தி(ஆநந்த)
கவலைப்படாதே நெஞ்சமே-காலன்கைப்பாசங்
கண்முன்வராதே அஞ்சுமே
தவநிலையையுணர்ந்த சன்மார்க்கர்தமக்கன்று
தற்பதத்தைக்காட்டினேன் தனைக்காணுவேனென்று(ஆநந்த)
காயமிகவுஞ் சதமா-அன்றியுற்பவங்
காணபதெவ்வொரு விதமா
ஆயுமெழுபிறப்பா யவதரித்தலுண்டென்றும்
தூயபதத்தாலந்தத் துகளற்றிருப்பேனென்றும்(ஆநந்த)

வசனம்.

இவ்விதமாகப் பன்னிரண்டுபேர்களையும் வேலைசெய்யவொட்டாமல் தன்சமீபத்தில் நிற்கவைத்துக்கொண்டு போதித்திருப்பதை வேதியன் கேள்வியுற்றுநந்தனாரைச்சீறிக் கடுங்கோபஞ்செய்ய நந்தனார்வேதியருக்கு இதவுசொல்லுகிறார்.

தரு-ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதுக்கென்மீது இத்தனைபேதகம்
எண்ணுவனோ தோதகம்

அநுபல்லவி.

காதகராம்மனக்கசடர்சொன்ன சொல்லை
சாதனைசெய்துசாதித்தீர்பிழையொன் றில்லை (ஏதுக்)

சரணங்கள்.

நான்உனக்குப் பண்டு-சாதனஞ்செய்து
நலமாய்த்தந்த துண்டு
தோன்றலேநீசொல்லுஞ்சொற்படிச் செய்கிறேன்
பான்மையாகநித்தம்பத்தியாய் உய்கிறேன் (ஏதுக்)

காசளவு நன்மை-செய்தோரை ஒருக்
காலும்மறவாத் தன்மை
தாசனுக்கெப்போதுமுண்டோமே கண்டு
யோசிக்கப்போகிறீர் இனிமேல்நான் செய்தொண்டு (ஏதுக்)

ஏழைநான் தானே-சூதும்வாதும்
ஏதொன்றறி யேனே
மேழியுடனேயொரு-மேதிகாளைக ளெங்கே
ஊழியனுக்கும்உழு-கயிறுங்கொடுப் பீரிங்கே (ஏதுக்)

நந்தனார்-ஏருழுதல்.

இஃதெழுசீரடியாசிரியவிருத்தம்.

வணக்கமாய்ச்சொல்லும்வார்த்தையையுணர்ந்து
வஞ்சனையிலாதவேதியன்றன்
கணக்கிலாதனதுபண்ணையாள்வசத்திற்
கைப்பிடியாகவேவந்து
பிணக்கிலானிவன்சொற்படியெலாஞ்செய்வான்
பின்னிடான் அழைத்துப்போவென்ன
இணக்கமாய்க்கொண்டுபோயினர்நந்தன்
ஏர்தொழில்மிகப்புரிந்தனனே.

தரு-இ-ம்-சஹானா-ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

பத்திஆகஆண்டைசொற்படிசெய்தானந்தன்பலருடன்மிகப் (பத்தி)

அநுபல்லவி.

கர்த்தனைச்சித்தங்களித்துக் கதித்தவன்
கமலபாதத்தை நாடி-மெத்தக்
காதலாகவேகொண் டாடி
மனம் நீடி (பத்தி)

சரணங்கள்.

நீருள்ள ஆதனூர்நஞ்சை புஞ்சைகளை
 நித்தமுமேர்கொண்டு பழுது-அறச்
 சுத்தமதாகவே உழுது
 காலைப் பொழுது (பத்தி)

கறுப்புவெளுப்புச்சிவப்பு நிறமுள்ளக்
 காளைகளைக்கட்டிப் பூட்டி-பொற்
 காறுஒன்றதிலே மாட்டி
 ஏ ரோட்டி (பத்தி)

கந்தன்கறுப்பன்கடம்ப னிடும்பன்
 கரியனவன்தமபி பெரியன்-சின்னக்
 காத்தானவன்மகன் சொரியன்
 குள்ள நரியன் (பத்தி)

சீரகச்சம்பாசிறுகருடன் சம்பா
 சிறந்தமணக்கத்தை நட்டு-கம்பு
 சோளத்துவரையு மிட்டு
 பயி ரிட்டு (பத்தி)

வசனம்.

இவ்விதமாய் ஏர்த்தொழில் புரிந்துகொண்டிருந்த நந்தனார் இனிமேல் சிதம்பரம் போவேன் போகாவிடில் பிராணனைவிடுவேன் அன்றியும் சேரியில் வரமாட்டேனென்று சொல்லிக்கொண்டு வேதியர்பால்சென்று தலைவணங்கிக் கரங்குவித்து மனந்துடித்துக் கண்டித்துச் சிதம்பரம்போக உத்தாரங்கேட்கிறார்.

இதுவு-மறுசீரடியாசிரியவிருத்தம்.

பொய்ச்சடலம்புழுக்கூடொன் பதுவாசற்றோற்பையைப்போற்றிசெய்யும், துச்சனிவனென்றெண்ணித் தள்ளாமனன்னெறியைச் சொல்லவேணும், பச்சைமிகுந்தொடியழகி சிவகாமிமாதுபங்கன் பாதங்காண, இச்சைமிகுந்திருக்குதையே அம்பலத்தைக்கண்டுகளித் திறைஞ்சுவேனே.

தரு-இ-ம-சாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

பொன்னம்பலவாணனடிதொழுவா-ரொருவரன்றிப்
பிறவிக்கடலிடையில்கிடந்தழுவார்.

அநுபல்லவி.

இன்னமம்பலதெய்வங்களுமிருக்குதெனக்கிவர்
போலதேவயில்லைதயவில்லைஏழையிட்த்திலிருந்தருள்செய்திடும்

சரணங்கள்.

வேதமொருநான்குமறியாதபழம்பொருளாகினும்
வேண்டிபதஞ்சலிக்காகவேதில்லைப்பதிவந்து
பாதச்சிலம்பசையமணிகுலுங்கப்பிறையிலங்க
பணிபடமாடவேசடையாடவேபரமானந்தக்கூத்தாடிய (பொன்)

உலகந்தனில்கனமதுபோலெங்கினும்பரிபூரண
முருவத்தருமருவத்தருமறைபத்திக்குஞ்செல்வங்
கலியத்தவர்மதமத்தவர்விடையத்தினிலுருவத்திட
கலைகற்றவர்வலயக்கவரிதயத்தினில்நடமாடிய (பொன்)

இரவுபகல்கருமங்களிழைக்கும்பொறிகரணங்களதை
இருத்துவசப்படுத்தும்வகையெனக்குத்தெரியாது
பரவிவரும்ராகாதிற்சரணடிங்கிமனதொங்கிவழி
பார்க்குமிடமார்க்குமரிதாக்கும்பாலகிருஷ்ணன்தொழும் (பொ)

வசனம்.

இவ்வகையாய்ச்சொல்லும் நந்தனைப்பார்த்து வேதியர் சொல்லுகிறார்,

ச்லோகம்.

மெள்ளப்பேசிமெழுகிறாயனுதினமடாவுனக்கித்தனை
கள்ளக்கும்பிடலாவதென்னபலனோகாட்டிப்பசாசல்லவோ
துள்ளித்துள்ளிதுடிக்கிறாய்சிவபதஞ்செல்லாதுன்சாதியிலே
எள்ளுக்கொல்லையிலமாடுவந்துதொடராதேகும்படிச்செல்லடா.

வசனம்.

இப்படிசொல்லிய வேதியருடனே நந்தனார் தனக்குத்தெரிந்த வித்தைகளை அத்தருணத்தில் சொல்லிக்காட்டுவார்.

முன்நந்தனார்பின் வேதியர் இருவருமாகச் சொல்லிக்கொள்ளும்

எட்டிக்குப்போட்டியான இருச்சொல்அலங்காரம்.

நந்தனார்-தில்லையைப்பார்க்கவல்லையோ வென்றார்
வேதியர்-கொல்லையில்முளைகாயில்லையோ வென்றார்
நந்தனார்-கள்ளம்போனாலுள்ளதுகாணு மென்றார்
வேதியர்-வெள்ளம்போனாலுள்ளதுவிளையு மென்றார்

நந்தனார்-திருச்சிற்றம்பலங்கண்டால்தேகங்களிக்கு மென்றார்
வேதியர்-பொரிச்சகறிகொண்டால்தேகம்பெருக்கு மென்றார்
நந்தனார்-அரகராவென்றால்பாவம்போ மென்றார்
வேதியர்-பறையனைக்கண்டால்பாவமா மென்றார்
நந்தனார்-வெட்டவெளியிலேமனமுடிட்டிப்பாரு மென்றார்
வேதியர்-பொட்டவெளியிலேகுழிவெட்டிப்பாரு மென்றார்
நந்தனார்-எனக்குஊரியஞானமாரியைமதி யென்றார்
வேதியர்-உனக்குநாறியபறையர்சேரியேகதி யென்றார்
நந்தனார்-கத்தாவேயென்னுள்ளம்பெற்றா ரென்றார்
வேதியர்-நத்தாழையக்கினியிலபத்தா தென்றார்
நந்தனார்-மறையோருக்கெப்போதும்வாயிலேதற்க மென்றார்
வேதியர்-பறையருக்கெப்போதும்சேரியேசொற்க மென்றார்
நந்தனார்-கொள்ளித்தேள்போலென்னைக்கொட்டாதே யென்றார்
வேதியர்-அள்ளித்தந்தேனென்னைத்திட்டாதே யென்றார்
நந்தனார்-கடுமையாய்வந்துகவலைப்படுத் துவதேன்
வேதியர்-அடிமையாய்வந்துஅவலப்படுத் துவதேன்
நந்தனார்-தில்லையோடுன்னைச்சேரோனோ வென்றார்
வேதியர்-எல்லையோடுமுன்னைப்பாரோனோ வென்றார்
நந்தனார்-திருவாதிரைவருகுதுபோவேனே யென்றார்
வேதியர்-மறவாதிருபறையாபோகாதே யென்றார்
நந்தனார்-தெரியாதேமெள்ளப்போவேனே யென்றார்
வேதியர்-மரியாதையல்லபோகாதே யென்றார்
நந்தனார்-ஆனையைவிட்டுவழிகாட்டும்பெரியோரே யென்றார்
வேதியர்-பிராணியைவெட்டும்பழிகாட்டும்புலையரே யென்றார்
நந்தனார்-ஆடிப்பாடிப்படிப்பே னென்றார்
வேதியர்-தேடித்தேடிப்பிடிப்பே னென்றார்
நந்தனார்-தில்லையிலேகலங்காமல்நாடுவே னென்றார்
வேதியர்-கொல்லையிலேவிலங்காகப்போடுவே னென்றார்
நந்தனார்-சிந்தைநொந்துதவிப்பேனோ வென்றார்
வேதியர்-வந்துவந்துஅலப்பாதே யென்றார்
நந்தனார்-கெஞ்சினால்நெஞ்சமுருகாதோ வென்றார்
வேதியர்-அஞ்சினால்பஞ்சம்வருகாதோ வென்றார்

நந்தனார்-சிதம்பரம்போகஉத்தாரந்தாரு மென்றார்
வேதியர்-இதம்பெறலாமோகத்தாலேபோது மென்றார்
நந்தனார்-சீக்கிரமாய்ப்போதே னென்றார்
வேதியர்-போக்கிரியாய்ப்போவா யென்றார்
நந்தனார்-அன்னீதஞ்செய்யே னென்றார்
வேதியர்-சொன்னதுதவறே னென்றார்
நந்தனார்-எங்கள்சாதிக்குஎன்னவழி யென்றார்
வேதியர்-உங்கள்சாதிக்குஇந்தவழி யென்றார்
நந்தனார்-உற்றதுஒது மென்றார்
வேதியர்-பெற்றதுபோது மென்றார்
நந்தனார்-பறையனாய்ப்பிறந்ததென்தலையெழுத்திது வென்றார்
வேதியர்-மறையராய்ப்பிறந்தாங்கள்வருத்தமது வென்றார்
நந்தனார்-வாய்க்காதவெனக்குவழிசொல்லு வீரோ
வேதியர்-காய்க்காதமரத்தில்கல்லெறி யாரோ
நந்தனார்-எப்போதுமிப்படிச்செய்வதே னென்றார்
வேதியர்-அப்போதுமிப்படிச்செய்ததென் னென்றார்
நந்தனார்-உலகமனைத்துங்கடவுளாய்நிறைந்த தேன்
வேதியர்-பலகலைகற்றுமபறையனாய்ப்பிறந்த தேன்
நந்தனார்-பழுதானசென்மம்படைத்தேனை யென்றார்
வேதியர்-அழுதாலுங்கன்மமகெக்காதோ வென்றார்
நந்தனார்-காப்பதுன்பாரங்கட்டுவிடு மென்றார்
வேதியர்-நாற்பதுவேலியைகட்டுவிடு மென்றார்
நந்தனார்-அப்பன்கருணையிப்படியோ வென்றார்
வேதியர்-தப்பினனதுவுமொப்பிலே னென்றார்

வசனம்.

அப்போது நந்தனார் மெத்தவும் ஐயரை வணங்கி உத்தாரங் கேட்கிறார்.

விருத்தம்.

அல்லெலுங்குழலாள்மோக மணடாதுவொருக்காற்றொண்டர்
பல்லூழிகாலஞ்செய்த பழவினைத்தொடக்கறுத்துச்
சொல்லினிமட்டங்கொணுதச் சுகக்கடலாட்டிவைக்குந்
தில்லைநாயகனைக்கண்டு தெரிசனஞ்செய்வேனென்றார்.

கீர்த்தனம்-இ-ம-கண்ணி-பியாகு-ஆதிதாளம்.

மார்கழிமாதத்திருவாதிரைநாள் வரப்போகுதையே
மனதைப்புணருகப்பண்ணுமலொருதரம்போய்வாவென்றுசொலையே

கட்டையிருக்கையில்சிதம்பரம்போயே காணவேணுமையே
கசடனாகிலுமாசைவிளையுதன் காலுக்குக்கும்பிடையே
காலில்நகழுனைத்தநாள்முதலாயுமக் கடுமைக்காரனையே
காலபாசத்தில் காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில்வெள்ளெலும்பாட வோடியுழைத்தேனையே
உண்டதுமுறங்கினதன்றியில்வேறே யொன்றுங்காணேனையே
எட்டுமிரண்டுமறியாதபேதை யெளியேனானையே
இனனந்தாய்வயிற்றிடையனுகாம லிடங்காட்டிடுமையே
வெள்ளைவெளுத்திருந்தண்ணீர்குடித்திடும் வெறியேனானையே
மேதினியினில்நாயினுங்கடையேன் வழிவிடவேணுமையே
தானந்தவங்களொன்றுங்காணா தடியேனானையே
தளரவிடவேண்டாமொருகோடி தருமமுண்டையே
அல்லும்பகலுங்களாதரவாலே ஆளாகினேனையே
அன்புடனேநல்லகதிபெறலாயென் றனுப்பவேணுமையே

விருத்தம்.

சிலைபணிந்திடும்வேளைநிந்திடச் செய்திடுந்திருமேனியைக்
கலந்தணைந்திடவேணுமென்காதலைக் கண்டிலராயகிலமதனைத்
தலைசுமந்திடுஞ்சேடனார்ந் தன்மைகொளும்நந்தனாரை
விலைக்குவாங்கியபெருமையாலிவன் வேணதெல்லாம்பேசுவான்.

வசனம்.

இப்படிச்சிதம்பரம்போக உத்தாரங்கேட்ட நந்தனாருடைய சிவ பத்தி பரிதாபத்தை ஆதிசேடனாலுஞ் சொல்லவொண்ணாத மகிமைகொண்ட மகானுபாவனை தனக்கடிமைக்காரனென்று வேணபடிபேசுவார்.

கீர்த்தனம்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

மாதின்னும்புலையாயுனக்கு மார்கழித்திருநாளோ
தேடியெடுத்தாயாரிடத்தேபோய் தீண்டாதேபோடா
ஆதின்னும்புலையாவுனக்கு ஆனிதெரிசனமோ
நாசிரிக்கும்வார்த்தைகளன்றோ நாடாதேபோடா
நண்டுக் குக்கலியாண மூளைநரிக்குச்சங்கராந்தி
பண்டிக்குப்பூசைதிருநாளுண்டோ பறையாநீபோடா
பூசைகள்செய்வாயோ ஆண்டவன் பொன்னடிதொழுவாயோ
கூசல்போடாதேபோடாதேகூழைக்கும்பிடலாகாதோ
கங்கையிலாடுவையோ அங்கேகாணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவென்டிகடுவந்து இரையாதேபோடா

அஞ்செழுத்தோ தானவையோ உனக்குமானந்தத்திருக்கூத்தோ
வஞ்சகவார்த்தைநாளைக்குந்தெரியும் வாராதேபோடா.

வசனம்.

அடா நந்தா சபாசு நன்றாயிருக்கின்றது நீ சிதம்பரம் போகவேண்டுமென்று கேட்பதை ஆலோசித்தால் மிகுந்த ஆச்சரியமா யிருக்கின்றதென்று வேதியர் பின்னுஞ் சொல்லுகிறார்.

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

அட்டாநந்தனே தில்லைக் கனுப்புமென்றனைக்கேட்ப
தாச்சர்ய-மிக-வாச்சர்யம்.

அநுபல்லவி.

அட்டாகட்டுக்கதைக ளனைத்துமிங்குதவாது
நட்டாவயலைத்தேடி நடவுநடவிப்போது (அட)

சரணங்கள்.

ஈனசாதியிற்பிறந் தோனுனக்கவடத்தி
லென்ன அறிவு லுண்டு-அல்லவென்று
போனபோகினுமூவா யிரவரிருக்கும்தி
புகுந்துநீகடந்துக் கொண்டு
மானுமழுவுஞ்சிர மாலையணிந்தவரு
மாற்றலர்திரிபுர மதனையெரித்தபெரு
மானுக்கியலுந்திரு மஞ்சனோற்சவந்திரு
வாதிரைப்பலன்பெத மாட்டாய்சொற்படியிரு (அட)

வேள்விகளொருபுறம் வேதியர்களியற்றும்
மேன்மைகள்மிகத் தங்கும்-அந்தத்
தாழ்மையிலாததிவ்யத் தலம்போய்வருவதற்குத்
தடையில்லையெனப் பொங்கும்
தன்மையிலெல்லாங்கள வாகமுடியவரும
ஜாதியிழிவையோசித் தாலேதெரியவரும்
பண்ணிப்பண்ணிப்படித்தேன் பரவாயற்றுயேவரும்
பட்டாய்தெரியும்பறைய னுக்கெனபதுபோல்வரும் (அட)

அல்லும்பகலும்சோ றளித்துக்காத்திடுந்தெய்வ
மானவம்பல வாணன்-இங்கிருக்க
தொல்லைப்படவேவேண்டா மென்றுரைத்திட்டவென்
சொல்மறந்தநீ வீணன்
தில்லுந்திரியாவரப்பேச் சேதுக்கடாபிடித்
திருக்குமெனதுபிடி திரும்பாதடாபகடி
பல்லைபொடித்துவிடு கிறேன்பாரடாதகடி
பஞ்சைநீயாசமர்த்தும் பார்ப்போனேடடாதடி (அட)

## வசனம்.

வேதியர் சொற்களைக்கேட்ட நந்தனார் நீங்களென்னைத் தடியாலடித்தாலும் பிராணனைமடித்தாலும் கழுத்தை ஒடித்தாலும் சிதம்பரத்தில் நடித்தானைக்காணும விருக்கேனென்று கடுத்துச்சொல்ல வேதியருக்குக் கோபம்பிறந்து சொல்லுவார்.

## தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

### பல்லவி.

இனியுன்குற்றத்தைப்பொறுப்பேனோ-அனுவள
வேனுஞ்சம்மதிப் பேனோ

### அநுபல்லவி.

தனியாம்வேதசாஸ்திரந் தனையுணர்ந்தாலும்சாதி
தன்புத்திபோகாதென்ற சரித்திரம்பொய்யல்லநீதி (இனி)

### சரணங்கள்.

பலகாலமும்பழமும் பாலூட்டினாலும்பாம்பு
பழகாததற்குவொப்பாய்ப் பகரலாகுமேவேம்பு
தலம்விட்டப்புறம்போய்நீ தான்செய்யாதடாவீம்பு
தரையிற்கறந்தபாலுந் தாவுமோமுலைக்காம்பு (இனி)

இடையிலிருக்குமிந்த இடும்பன்கடம்பன்சரி
இவர்களெல்லாமலிதோ இருப்போர்கள்சிறுநரி
கடையிலிருப்போன்மவறா நல்லவனெருந்தேரி
காணுனைச்சேர்ப்பேனென்று நம்பாதேபரிகரி (இனி)

வசனம்.

என்றுசொல்லிய வேதியருக்கு நந்தனார் மிகுந்த தாழ்மையோடு மேழ்மையோடுஞ்சொல்ல வேதியருக்குக்கோபம்வந்து திருட்டுவேடங் கொண்ட முரட்டுப்பயலேயென்று மறுபடியுஞ்சொல்லுகின்றார்.

கீர்த்தனம்-இ-ம்-தனாசரி-ஆதிதாளம்.

பல்லவி.

திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம்-நந்தா-அடாவுனக்கு
திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம்-நந்தா

அநுபல்லவி.

முரட்டுத்தனமாய்ப்பே சாதேநீர்மூடா
முன்னும்பின்னுமறி யாக்குடிகேடா
வரட்டுத்தவளைபோல்வா யாடாதேயடா
வயலைமுழுதிலுஞ்சீர்ப் படுத்திடப்போடா (திருட்)

சரணங்கள்.

புத்தியுள்ளவனாகப் யாரு-ஏர்கொண்டுழுது
புன்செய்நிலமுழுதுஞ் சீரு-செய்துவிதைத்து
வைத்திடனம்போற்குடி யாரு-இருப்பார்களுன்
னைத்துதிப்பார்சகல பேரும்
சத்தியமாகக்குண் டைகளைநீகூட்டி
சார்ந்ததற்குவா யாரநீரூட்டி
சத்தியுள்ளமட் டுக்குமேரோட்டி
தக்கவுன்றன்றிற மதுமிகக்காட்டி
மற்றுமற்றனைத் தனைத்துமுடிவுற
மெத்தமெத்தசித்த மொத்துசெய்குவாய் (திருட்)

பட்டாங்குனக்கேதடா பாவி-என்சொந்தமான
பழனங்களுமீடேறத் தேவி-பூசைபுரிந்து
பொட்டெனப்பதம்பணிந்து சேவி-இதைமறந்தால்
போக்குவேனேயுன்னிட ஆவி
சட்டமாகவுன் சமர்த்தைக்காட்டாதே
சரணமென்றுகண் ணீரையோட்டாதே
தட்டுவனேகை மிஞ்சிநீட்டாதே
சலசலப்புக்கஞ்சிநரி யோடமாட்டாதே
விட்டுவிட்டுவிட்டு விட்டுவிடுவிடு
கெட்டுகெட்டுகெட்டு கெட்டுபோகாதே (திருட்)

பாயுஞ்சலமூழுதுங் கட்டி-பதனமாகப்
பழையபயெருவெடுத்துக் கொட்டி-சேறுபோலாட்டி
தோயும்கட்டமுதலோ ரட்டி-வாராமற் செய்ய
சொன்னாலனுப்புவேனோ மட்டி
காயமுள்ளபோ தேநீநானட
கர்த்தன்றன்னைக்கா ணப்போவானட
எய்த்துவிட்டுப்போ கப்போறாயட
யேர்த்ததிருவாதிரைக் கனுப்பேனோநட
ராயன்ராயன்ராயன் ராயன்சாட்சியாய்
தீயன்தியன்தீயன் தீயன்உனைவிடேன் (திருட்)

இதுவும் வேதியர் சொல்லுகிறார்.

இ ஃ த று சீ ர டி ய ா சி ரி ய வி ரு த் த ம்.

வானிருந்தவிடக்தேடிக்காணமல்மாதவத்தோர்மதிமயங்கத்
தேனிருந்தசெந்தாளைச்சிந்திப்பார்புந்தியுறத்தெளிந்தாரில்லை
ஊனருந்தும்புலையாநீசிதம்பரத்தேசென்றாலுமுண்டோமுக்தி
தானிருந்தவிடம்விட்டுப்போகாமல்சஞ்சலத்தைத்தளளுவாயே.

வசனம்.

அடாவாடா மூடா கேளடா என்னைப்போலொத்த பெரியவர்களாலே கூடத்தேடி அறியப்படாதஜெகதீசனுடையதிவ்வியநாமத்தை நத்தையுரிஞ்சும்பறையா நீ கத்திக்குலைக்கலாமா இப்படி தத்திக்குதிக்கலாமா வித்தையொன்றுமறியாதவனிங்கே பத்தியெண்ணலாமா நத்திமுத்தி தேடலாமா சுத்தமான பெரியோர்களிடத்தே சத்தம்போடலாமா இங்கே சித்தம்நாடலாமா வியர்த்தமான இந்தசென்மமெடுத்துஞ் சித்திதேடலாமா அங்கேபுத்திசெல்லலாமா அடா இதுவெல்லாம் விட்டுவிடடா நாத்தைப்பிடுங்கிநடடா என்தொழிலைத்தொடடாதோல்கட்டியதடியையெடடா யாருந்திருடாமலிருடா களத்தில்படடா காவல்கொடடா புல்லறுடா மூடடா வழிதெரியாக்குருடா நான் சொல்வதுநேரடா இதுடா உன்செய்கையென்று கல்லாலெறிந்து தடியாலடித்து வாயால்திட்டி தேள்போலேகொட்டி இவனொரு ஆள்போலே நின்றான் அவர் நாள்போகுதேயென்றார்.

வசனம்.

நந்தனார் வேதியரைப்பார்த்துச்சொல்லுகின்றார் நீங்க ளென்னையடிக்கலாம் நானும் அடிபடலாம் தங்களுக்குக்கைநோகுமென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடித்ததுபோதுமையே-என்னை-அடித்ததுபோதுமையே

அடித்தாலுங்கள்கைவலி யாதோ
அடிமைவேலைசெய்யுமென்னுடன் வாதோ
படித்ததெல்லாமென்மனதிற் படாதோ
பாவியெனக்குயினிமேற்றெரி யாதோ (அடித்)

நல்லவரோயுங்கள்மனதுபிர காரம்
நடக்காமலிருந்ததுமப சாரம்
சொலலத்தெரியுமோயுனக்குப சாரம்
சுகிர்தசாதியுங்களாலேயிந் நேரம் (அடித்)

வசனம்.

ஐயனைத்தலைவணங்கிச்சொல்லுவார்,

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

இலவுகாத்தகிளிளை யாச்சே-நான்
எடுத்துச்சொன்னதெல்லாம் போச்சே

பறையன்சொல்லுபழு தாச்சே-நீங்கள்
பார்ப்பாரென்பதுமே லாச்சே

ஏழைச்சொல்லம்பலமாச்சே தெய்வ
மில்லாமலெங்கையோ போச்சே

சேரியேசொர்க்கமென் றாச்சே-தில்லைச்
சிதம்பரமென்பது போச்சே

விழலுக்கிறைத்தாற்போ லாச்சே-எந்தன்
வேண்டுதல்வீணாகிப் போச்சே

கண்டத்தைக்கண்டிட லாச்சே-நல்ல
காலம்பிறக்காமல் போச்சே

வசனம்.

பெரியோர்கள்கோபத்தை எளியேன் தாங்கேனென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

பெரியோர்விசனமடையாரடைந்தாற் பெருங்கடல்தீயாசோ
பேயேன்தாங்குவேனோனும் மாத்திரம்பிழைபொறுத்தாளேயே

அல்லும்பகலும்நானறிந்துமேதோ வறியாமல்போனேன்
ஆசைகொண்டேன்திருவம்பலத்தெய்வம் மோசஞ்செய்யுதையே
பாவியெனைத்தொடர்ந்தடித்தாலுமென் பாழ்வினைதீராதோ
பார்தனில்போர்சொல்லாதவனென்றே படைத்ததுபோதாதோ
சிங்கம்பொசித்திடுமிறைச்சியைவேறொரு செந்நாய்தொடலாமோ
சிதம்பரம்நான்தொடலாமோசாதியில் சின்னவனன்றோ
இன்னமுஞ்சிதம்பரம்போவேனென்று இங்ஙனேவருவேனோ
இம்மட்டும்போதுமையேஉங்கள்தய விருந்தாலதுபோதும்

---

இவை ஐஞ்சீரடியான்வந்த

விருத்தம்.

சேதிவந்தவர்வேதியன்சினத்தால்
காருகளடர்ந்திடுஞ்சோலையினின்றவன்கருத்தை
ஏருலாவியபரமனற்றுண்மலரிறக்கி
தீரனுகியநந்தனுமிப்படிச்செய்தான்.

வசனம்.

தங்களையருக்குத்தலைவணங்கி பெரியகும்பிடுபோட்டு ஒருசோலையிலிருந்து சமாதிபண்ணுவார் தன்னுடையசரீரத்தைதில்லைவெளியிலே கலந்துகொள்வேனென்று வீரவைராக்கியபட்டத்துடனே சேரியில்வராமல் தானேயிருந்தார் தன்னுடையதுயரங்களையெல்லாம் அம்பலவாணருக்கே ஒப்பிவித்து சலுகைகொண்டாடுவார்-

விருத்தம்.

வேதியரிப்படிசொல்லவெந்துமனம்வேறாகிவினையோவென்று
சாதியிலேபாவமிதுநீயன்றோபிறப்பித்தாய்சுவாமியென்னை
சோதனையேசெய்கின்றாயெவ்வுயிர்க்குமவ்வுயிராய்த்தோய்ந்திருக்கும்
ஆதிகுருவலவோநீபார்ப்பானுக்குள்ளிருந்துமனுப்புவீரோ.

கீர்த்தனம-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயாவுன்னடைக்கலம்பொய்யாகியதேகமடைக்கலம் (ஐயா)

அத்தாநான்வருவேனோஅம்பலத்தைப்பரவேனோ
சற்றேயாகிலுங்காண்பேனோசந்நிதிகாணுதென்செய்வேன் (ஐயா)

விருத்தம்.

தாறில்லாதவிப்பிறவியைத்தானெடுத்தஞ்சி
தூறுபட்டனற்சீழ்க்குமொகியித்துன்பம்
நீறுபட்டிடுமல்லவோதில்லையினின்றால்
பேறுபெற்றிடுவேனதற்குமொருபிசகோ.

கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி-திரிபுடைதாளம்.

பல்லவி,

ஐயோதெய்வமேயிந்தவையர்க்கடிமையானேன்
செய்பாவினைசெய்தல்லவோ
உள்ளங்கரைந்துருகிஉய்யும்படியாய்க்கேட்கில்
கள்ளக்குமரனல்லவோ
ஆலைக்கரும்பதுபோலாச்சுதங்கமுழுதும்
வேலைக்கிடமில்லையே
பாவியெனக்கோவந்தபார்ப்பான்மனதிரங்கான்
ஆவிதவிக்குதல்லவோ
கோவில்கும்பத்தைக்கண்டால்கோடிவினைகள்தீரும்
பாவிக்குக்கிடையாதுகாண்
தில்லையம்பலவாணதெய்வம்புலையர்க்காகக்
கல்லாச்சமயலாச்சுதே
பொன்னம்பலவாயுன்னைப்போற்றும்பகையில்லாமல்
இன்னம்பிறவியேறுமோ
அன்னைதந்தையுநீயென்னாவிபொருளுநீ
உன்சந்நிதிவரச்செய்வாயோ

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடிமுடியொன்றுமில்லாதம்பலத்தரசேயுன்பால்
கொடியனான்வந்தாலென்னகுறையுமோவதனால்நீதி
நடலைசெய்பார்ப்பான்கையில்நடுங்கவோவிடுத்தாயென்றும்
படிமிசைவீழ்ந்தானடிப்பதறுவான்கதறுவானே.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி- யமுனாகல்யாணி.

பல்லவி.

செய்யமுடியாமற்போனேனறியேன்
அரகரசிவனே தில்லைச்சிவனே

பத்துவருட்காலமாகவந்துபார்ப்பானைக்கேட்டேன்
சித்தமிரங்கிபோய்வாவென்றொரு நல்லசேதிசொல்லக்காணேனையோ
செய்ய

பாவிபுலையனாய்ப்பிறப்பேனோஇந்தபாரினிலிருப்பேனோ
ஆவிதவிக்குதேபொன்னம்பலவா வுன்னடிக்கமலங்காணேனையோ
செய்யு

பல்லுமுளைத்தநாள்முதலாகஇந்தப்பாடுபடுவேனோ
தில்லைநாயகாகனகாவென்றுன்னைத்தேடும்வகைகாணேனையோ
செய்யு

நாற்பதுவேலிநிலமிருக்கிறதைநடுகவேணுமென்றார்
கார்ப்பதாருகளைபிடுங்குவதாரென்றுகடுத்தப்பேச்சுக்கடியேன்
செய்யு

ஆற்றிலேகுளத்திலேவிழுவேனென்றுவதைபிடித்திழுத்திடுவேன்
பார்த்தினிக்கிருபைசெய்யாவிடிற் பறையன்பழிவீணபோகாதுசொன்
செய்யு [னேன்

தில்லைச்சிதம்பரத்தைக்காணவிடவென்தேகந்தெரியாது
சொல்லிவிட்டேன்பொன்னம்பலவாவுன் சொர்ணசபைக்குவருவேனோ
செய்யு [கான்

விருத்தம்.

கடிவருந்தியும்பணிகலனுகவுங்கற்றைச்
சடிலமேவியபிறையுணற்றரிக்கவுந்தருமோ
விடுவதில்லையுன்னருகினிற்றொரு வங்கைக்
கொடியன்வந்திறலென்னதில்லையிற்றுறையோ.

இதுவுமது.

மாவளர்தில்லைமாநகர்வீதியும்மதிலும்
கோயலுந்திருக்கூட்டமுங்கண்டுகண்குளிரப்
பாவியாகினேன்காயத்தையேதுக்குப்படைத்தே
னாவிதானிருந்தும்பரகதியடைந்திலனே.

ஆதிகாண்முகற்றவம்பெருமாமுனிக்காக
நாதமோங்கவேநாடகம்புரிந்திடுநாதன்
பாதம்போற்றியென்னேரமும்பாவியாநந்தன்
ஏதந்தீரவேகனவிலுமீயனுமிருந்தார்.

வசனம்.

தில்லைத்தலத்தைக்காணாத ஜென்மமிருந்தாலென்ன போனாலென்னவென்று நிச்சயம்பண்ணி மனதுருகி வாசல்வெளியில் கொஞ்சம்நித்திரைபோலவேகண்டு அந்நித்திரையில் அம்பலத்தேவன்வந்துசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம-எ நாதுகுலகாம்போதி.

பல்லவி.

கனவினில்கண்டாரே-நந்தனார்-கனவினில் கண்டாரே
மனதினிலெப்போதும் வருந்தியடிபணியுங்
கனகசபேசனைக் கணணிற்காணாமல் (கனவி)

நீசஇங்சழனிகள் நாளடச்சொன்னேன்
வானமில்லாமனுன் னுடையவன்களிக்க
மானிடப்பிறவியி லுனக்கிணையார்பத்தி
மானில்லையெனத்தில்லை நாதனுமவந்துரைக்க (கனவி)

கங்குல்பகலாம் கலித்தலிட்டளியாய்
சங்கரனேயென்று சாருநன்னிலையால்
அங்கம்புளகித மாச்சுது அகனு
லிங்கேவந்தேனென்று ஈசனும்புகல (கனவி)

விருத்தம்.

அறிவுமிகுந்தாற்றலுடன் சிவபெருமான்பெயர்சொல்லி யாற்றுநாளில், கறைமருவுமிடறழகன் றனதடிமைவெறியகலக் கனவில்வந்து, குறையறவேகழனிகளை நடச்சொன்னேனுனக்குவிடை கொடுக்கேனென்ற, மறையோதுமவர்க்குரைத்து நீவிரைந்துவாவென்று மனதுட்சென்றார்.

நந்தனார் கனவில் நடேசமூர்த்தி சொன்ன வசனம்.

நம்முடையநந்தனோ உன்னிடகழனிகளை நமது பூத கணங்களாலே நடச்சொன்னேம் வேதியருக்குக்காட்டினால் உத்தாரங்கொடுப்பாரென்றுசொல்லி தான் அம்பலத்தேசென்றார்.

நந்தனார் வயல்களைக்கண்டு சந்தோஷமடைவார்.

கண்ணிகள்.

களைபெடாமல்சலம்விடாமல் கதிரொருமுழங்காணுமாம்
கனிக்குதுபயிரிருக்குது அதைக் கட்டுகட்டவேந்தானுமாம்

பழுதிலாமலேரிகுளங்கள் பள்ளமேதெண்ணியால்
பரமசிவனைப்பணியுகந்தனர் பயிரிடுந்திருப்பண்ணையாம்
கனவில்வந்துஉருவமாகி கருணைமாரிகண்டவன்
கடுகிநடந்துவேதியரிடம் காணவென்றுசென்றனன்

## விருத்தம்.

அய்யரேவாருமென்று அழைத்திடுநந்தனைத்
துய்யவேதியருங்கண்டு தொல்புவித்தெய்வமெல்லாம்
பொய்யிதுவென்றுதள்ளிப் புலையனும்வந்தானென்று
செய்யவேண்டியதுசெய்யச் செப்புவானெப்புவானே.

பலவித-இராகஞ்சேர்ந்த-கீர்த்தனம்-வராளி-ஆதிதாளம்.

## பல்லவி.

### வேதியர்சொல்லுதல்.

நந்தாவுனக்கிந்தமதி வந்ததென்னதந்ததாரு
அந்தரங்கஞ்சொந்தமா யிருந்ததுமறந்தபோய்
விசனையாய்நினைந்தன்றே அந்தவேளைபுந்தியில்லை (நந்தா)

## தொகு.

கொல்லக்காட்டுநரிபோலே பல்லைக்காட்டிப்பேசுவாய்
கல்லைக்காட்டிகோபங்கொண்டு சொல்லைக்காட்டியேசுவேன்
தில்லையென்றுசொன்னதெல்லா மில்லையென்றுபோச்சுதா
கல்லையென்றுஐயர்சொன்ன சொல்லேநிசமாச்சுதா
சித்தமுந்தெளிந்துதா உற்றதுவுணர்ந்துதா
பக்திபுந்துலைந்துதா சுத்தமும்பறந்துதா
சட்டம்-சட்டம்-நல்லது-நல்லது மெத்த-மெத்த-சந்தோஷம்

## மத்தியமாவதி.

இப்படிஅப்படிசொல்லாதே தப்பெடுத்தடிப்பையா
சொற்படியொப்புதலாகநீ மெய்ப்படிநடப்பையா
கள்ளக்கும்பிடுதள்ளடா காரியங்கைக்கொள்ளடா
என்னுக்கொல்லைக்காரடா எங்குஞ்சுற்றிப்பாரடா
தெய்வமென்பதுகுற்றம் தெளிந்துபாருசுற்றம்
கையைக்கொட்டுசத்தம் கண்டுகொள்ளுசித்தம்

ஊணுறக்கமேயின்பம் ஊனிழந்தாலேதுன்பம்
சாணவயிற்றுக்கு அன்பு சாதிமுறைமைவம்பு
ஓகோகோ பலே பலே சபாசு கண்டுகொண்டாய்

கேதாரகௌளம்.

சூதாடிதோற்றவன்போல் வாதாடிநிற்பவற்கு
வேதாந்தசாஸ்திரங்கள் காதாலேகேட்டிருந்தும்
என்னகாரியம்அதில் என்னவீரியம் தன்னாதன்னா

புன்னாகவராளி

இல்லையென்பதுகாட்டிலுண்டு கேட்டதில்லையா
தேகம்பட்டால்புண்ணாகும் பார்த்ததில்லையா
அம்பலமாவதுஆகாச மூற்றுப்பாரு
அருளில்லைபொருளில்லை கண்டுசேரு
பத்தியென்றுஞ்சித்தியென்றும் வற்றியென்றும்முத்தியென்றும்
இத்தனைநாள்கற்றகலை அத்தனையும்பித்தமாச்சு
மாறுபாட்டுக்காரன்வார்த்தை கூறுபடுமோ
தாறுமாறுபேசினதால சோறுபோடுமோ

நாதநாமக்கிரியை

எல்லாமுழுப்புரட்டு வல்லான்வகுத்தவழி
சொல்லாதேசும்மா கில்லாதே
காரியத்தைப்பாரடா உனக்கிணையாரடா
காசுபணஞ்சேரடா இதுநல்லஊரடா நல்லபிள்ளை

மாஞ்சை

கஞ்சிகூழுகுடித்தாலும் பஞ்சமில்லையே
கொஞ்சமிருந்தாலும்போதும் சஞ்சலமென்ன

மத்தியமாவதி

சம்பாநெல்கிட்க்குனக்குத்தாரேன் ஒற்றைச்
சல்லாகிழித்துனக்குத்தாரேன் ஒற்றைக்
கண்டாங்கிச்சேலையொன்று துண்டாய்க்கிடக்குதந்தன்
பெண்டாட்டிக்குக்கொடுத்து நன்றாய்சுகமாயிரு

புன்னாகவராளி

துண்டுவெட்டுபாக்குதின்று தண்டைவெட்டிபோர்த்தையா
கண்டனடிக்கட்டளையில் முண்டிருக்குபார்த்தையா

மோகனம்

தாரணியில்லாதவனொரு மாணியில்லாதவன்போலே
தோணியிலுந்தோணாது தோணிகிடந்தாலுமென்ன

பெண்டாட்டியில்லாச் சுகமல்லவோமனங்
கொண்டாட்டங்கொள்ளா தகைச்சொல்லவோ

ஆரபி

எருவிட்டுழுதவயல் மறுவிட்டுத்தேவையில்லை
எதுவெட்டினுலுந்தாங்குருந்துருவிட்டுப் பார்க்கவேணுந்துரையே
நிலம்பாராதபேர்கட்குப் புரையேயிதுவல்லால்
வேறேயுண்டாஇறையே இந்தவூருக்குளிதுநல்லவிரையே
அப்பப்பாயீகத்திற்கு

அசாவேரி

மூலைக்காலவிளைந்ததானல் சேலைக்குக்காணும்
உனது கூலிக்குக்காணும் குழந்தைபாலுக்குக்காணுமல்லவோ
ஊருக்குளிந்தநிலஞ்சப்பையேநீவாரி விடவேணுமிந்தகுப்பையே

சாவேரி

வாரிகாலைச்சுற்றிப்பாரு கோரையைப்பிடுங்குநம
தேரியையுமுகச்சொல்லு வீரியைநகைச்சொல்லு
செட்டியார்குளத்தருகே மூட்டிருக்கப்பேர்த்தையா
வெட்டியானகத்தருகே திட்டிருக்குப்பார்த்தையா

புன்னகவராளி

எல்லாமுனதுபொறுப் பெல்லாமுனதுசுக
மல்லாமல்வேறேகதியில்லை இல்லைஇல்லை
கட்டியடிக்கட்டளையில் விட்டதுமுளைத்துதா
பொட்டைத்திடல்குட்டையிலே நட்டதுபலித்துதா
காடுவெட்டிநஞ்சைபண்ணு மாடுகட்டிவைக்கோல்போடு
பாடுபட்டுழைத்தாலன்றோ வீடுகட்டிவாழலாம்-நந்தா

வசனம்.

இப்படிச்சொல்லும் வேதியனை பண்ணையைப்பார்க்க வாருமென்றுநந்தனர் கூப்பிடுவார்.

விருத்தம்.

பண்ணையாவையும்பாருமென்றழைத்திடப்பரிந்து
கண்ணுலாவியவேதியன்களிப்புறநந்தன்
பண்ணுலாவுமபொனனமபலக்கூத்தனைப்பரவி
எண்ணிலாவரும்காதல்கொண்டிருந்தனர்தாமே.

வசனம.

கேவலமாகியநீசன் சிவகணங்களாலே ஒருராத்திரியில் நடவுகட்டு அறுப்பறுக்கும்வயலை வேதியர்கண்டு ஒன்றுந் தோற்றுமல் உலகவாசனை பற்றுகின்றார்.

நந்தனார் அம்பலவாணனைக் கொண்டாடிக்கூத்தாடுவார்

கீர்த்தனம்- கடுக்கா

நந்தனானந்தபரிதமானான் நந்தனாரும்ஆனந்தமாகினார்
சொந்தமானவயல்வந்து பார்க்கையில்
விந்தையாச்சுது பலபந்தம்போச்சுது
சிந்தைதிரவே யந்தரங்கத்தில் (நந்தனார்)

நீசச்சாதியென்று பேசிப்பேசுமிந்த
தோசிவேதியனு மாசையாகவே
தேசமேற்றுந்தில்லை வாசமாகூட
ராசமூர்த்திக்கு தாசனென்றுவரும் (நந்தனார்)

வாரும்வாரும் மிதைப்பாரும்பாருஞ்சிவ
னாரேவந்துசெய்யுங் காரியங்களிது
பாரின்மீதிலினை யாருமில்லையென்
றாரினுள்ளபெரியோருஞ் சொல்லச்சொல்ல (நந்தனார்)

சித்தமீதிலொரு குற்றமேதுமில்லை
சுத்தமானவித யத்திலுள்ளசிவ
பத்திபண்ணிவெகு சித்தியாகிவர
முத்திதேடிவரு பத்தனென்றுமகிழ் (நந்தனார்)

வசனம்.

நந்தனாரைப்பார்த்து சிவபத்தர் அபசாரம்பண்ணினேனென்றுமி கவும் குழைந்துசொல்லுவார்.

தரு-இ-ம்-பியாகடை-அடதாளசாப்பு

பல்லவி.

நந்தனாரேயுன்றன் பெருமையின்றுகண்டேன்
நானென்வினையை விண்டேன்

அநுபல்லவி.

விந்தையைக்குறியாமல் விழலனைறியாமல்
வீம்புக்குக்கச்சுகட்டி வீசினேனென்னையாளும் (நந்தனா)

சரணங்கள்.

அறியாமனத்தினாலே ஏதேதோபேசி யுன்
அருமையைத்தெரியாமற்போனேனே மெத்தன

சிறியோர்செய்தபிழைபெரியோர்பொறுப்ப என்று
செப்பும்வார்த்தையுமக்கேகனவானே இந்த
மூறையுணர்ந்தோர்க்குஎன்னதான்சொல்லத் தோணும்
மூடன்மேற்கிருபைவைத்துமுழுதுங்காத்திட வேணும்
நிறைவுற்றவருட்பெற்றோர்க்கேதுநிகராங் காணும்
நினைக்குமுன்னடிவணங்காதோவந்துயர் சேணும்(நந்தனு)

நேற்றுப்பொழுதளவுஞ்சும்மாவிருந்ததிந்த
நிலங்கள்முற்றும்பயிர்கள்மூளைத்துக் கதிக்கச்
சாற்றுங்கதிர்கள்முற்றுச்சாய்ந்து அறுவடைக்குத்
தக்கதாயிருக்குதேமிகக்கிளைத்து உமது
ஆற்றல்தனக்குநிகராவரோ யாவரும்
அய்யாவுனதுநல்லவருளால்நலமே வரும்
நாற்றிசையோர்களும்நாடிப்பணிய வரும்
நாயேன்களிக்கமனம்நயந்துக்கிருபை தரும்(நந்தனு)

குண்டைகளுங்கலப்பைக்கோலுங்காறும்விதையுங்
கொட்டத்திலிருக்கநீர்செய்தீரோ அந்த
அண்டர்பணியுந்தில்லையாண்டாவனே யுமக்கு
வடிமையாளாகிவந்துசெய் தாரோ
துண்டத்தனத்தாலென்றெண்ணிக்கும்மைக் கொண்டேன்
தொல்லுலகத்துள்ளோர்யாருமேசக் கண்டேன்
தொண்டனுவேனுமக்குத்தோதகங்களை விண்டேன்
சொல்லும்பணிகள்செய்து சுகப்பட்டுத்துணிவுண்டேன் (நந்தனு)

வசனம்.

என்றுவேதியர்சொல்லிப் பின்னுஞ்சொல்லுவார்

இதுவும் வேதியர்சொல்விருத்தம்.

கறைப்பிங்கண்டன்றாளைக்கருத்தினிற்பெறவேநோக்கி
குறையறுநந்தனுனைக்குலமதுகிழென்றெண்ணி
மறைபுகல்பெருமையாலே வருத்தினேன்கொடியனென்று
இறைபகிவனம்போலஞ்சியேங்கியேயரற்றுவானே.

கீர்த்தனம்-இ-ம்-புன்னுகவராளி-ரூபகதாளம்.

சுத்தமெத்தனைசெய்தபோதிலுமுந்தன் சித்தத்தில்நினையாதே-சிவ
பக்தனென்றறியாமலபதறிவார்த்தைகள்சொன்ன பாவந்துலையாதே

புலையர்கள்பரகதிதேடும்படியவர்புண்ணியஞ் செய்வாரோ-உன்னை
கலிதீரக்கண்ணாரகண்டபேர்களெல்லாங் காட்சிபெறுவாரோ
உருவமனதறியவொருவனுலாகாதென்றுலகம் மொழியாரோ-அது
திறமாச்சுதினியுந்தன்ஜென்மசபலமாச்சு தெய்வமுமிரங்காதோ
ஜாதியிலிழிகுலஞ்சாஸ்திரங்கிடையாதுசந்தேகப்படலானேன்-இப்போ
ஆதிசிதம்பரரகசியம்பாரென்று அனுப்பிவிடலானேன்

---

வசனம்.

இப்படி மிகவும்வணங்கி வரலாற்றைக்கேட்க நாளைப்போவார்கண விலே ஈசன்வந்து கருணைசெய்தாரென்றார் அதற்கு நாளைப்போவாரை ப்பார்த்து வேதியர்சொல்லுகின்றார்.

கீர்த்தனம்-இ-ம-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாவுன்கனவினி லெப்படிவந்தார்
 வரந்தந்தாரென்றாய் (நந்தா)

சநந்தமுஞ்சனகாதிமுனிவர்தொழும்
 சச்சிதானந்தமூர்த்தியல்லவோ (நந்தா)

ஆதிமுடிவுங்கிடையாதபராபரஞ்
 சோதியல்லவோநீசசாதியென்றறிந்தும் (நந்தா)

அண்டரண்டநிறைகின்றசபாபதிக்
 கொன்றும்பேதமில்லையென்றதெளிந்தது (நந்தா)

வசனம்.

வேதியர் தான்செய்த பிழையெல்லாம் பொறுத்துக்கொள்ளுமீ ரென்றுசொல்ல நந்தனார் மறுவுத்தரவுகூறல்.

கீர்த்தனம்-இ-ம-தெண்டகம்-எதுகுலகாம்போதி.

வேதியர்—ஏழைப்பார்ப்பான் செய்திடும்பிழையை
 யேந்துக்கொள்ளாதே நான்
இனமறியாதவன்முன்பத்திக்கார னென்பதுவும்பொய்யோ

நந்தனார்—பொய்யாகியவிந்த வுலகத்தைப்பார்க்கும்
 புண்ணியவானே நான்
புலையனுங்களடிமையல்லவோ பத்திசொல்லுமையே

வேதியர்—புத்தியுண்டு வித்தையுண்டு
பத்திகிடையாது வாயால்
புலம்பினதாலென்னமனமடங்காது போகங்கிடையாது
நந்தனார்—கிடைக்குஞ்சிதம்பர தெரிசனமென்று
கிருபைசெய்யு மையே
இழ்குலமல்லவோாயினுங்கடையேன் கீர்த்திபெறுவீரோ

வசனம்.

பரமபத்தனாகியநீயே எனக்கு அடிமைவேலை செய்பவன்போல் வந்தபடியினாலே என்பிறவிப்பிணி தொலைந்ததென்று சொல்லுவார்.

அறுசீரடி விருத்தம்.

அவப்பொழுதுபோனதன்றி மறைமுடிவையுளங்கனிய
யறிவிலுன்னித்
தவப்பொழுதுங்கணப்பொழுதுங்கண்டறியாப்பாவியெனைச்
சார்ந்தாரன்றோ
சிவக்கொழுந்தினடிமையென்றுபெயரிட்டுவேலைகளைச்
செய்ததாக
பவக்கடலைக்குளப்படிபோல் தாண்டிவரச்செய்ததுந்தன்
பத்திதானே.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தக்களிப்பு.

நந்தாநீசிவ பத்தன்-உன்னை
நம்பாமலேமோசமானேனுன் பித்தன்
பூமிக்குள்நீயொரு சித்தன்-இந்தப்
பூமிக்குநானொருசாஸ்திரப்பிர சித்தன்
காமிக்குள்ளேவெகு மத்தன்-உன்னைக்
கண்டுதெரிசித்தபேர்களே முத்தன் (நந்தா)

படித்துமென்னவெங்கள் வேதம்-அதில்
பார்த்ததில்லையிந்தபகவற் கீதம்
எடுத்துச்சொன்னாய்சிவ போதம்-அது
ஏற்காமல்போச்சுதுஎன்பிடி வாதம் (நந்தா)

தெவிட்டாதசோகம பானி-உந்தன்
தேகமுழுதிலுஞ்சிவன்திரு மேனி
பகைபாகியவொரு கூனி-போலே
பழுத்தேனானாலுநீயாத்தும ஞானி (நந்தா)

பவசாகரந்தாண்டிச் சென்றாய்-உள்ளே
பார்த்துணர்ந்துபரமானந்தங் கொண்டாய்

தவமாணிபோலே நின்றாய்·தில்லை
தாண்டவராயனைக்கண்ணாலே கண்டாய் (நந்தா)

வசனம்.

இப்படி வேதியர் சொல்லும்போது நந்தனார் மனம்நொந்து கைகால்நடுங்கி ஐயரைச்சுற்றிவந்து தலைவணங்கி எனக்கு அன்னங்கொடுத்து ஆடையளித்து இத்தனைநாளுங் காப்பாற்றின பெரியவரே உங்களுக்கடிமைவேலைசெய்யுமென்னை இப்படிப் பெருமையாய்ச் சொல்லவேண்டாமென்று சொல்லுவார்.

தரு-இ-ம்-கலியாணி-ரூபகதாளம்.

பல்லவி.

ஐயாசொல்லு வேனோ-உம
தடிமைப்பறையன் தானே

அநுபல்லவி.

மெய்யாகவேயிங்கமேதினியாளு வோர்கள்
வேலைசெய்யுழியர்தம்மையோதாழ் வார்கள் (ஐயா)

சரணங்கள்.

வேம்புக்குயர்ந்தமதுரங்கள் பூட்டினும்
வீறுமதன்குணம்மாறுதெங் காட்டினும்
ஆமபுத்திக்காரனானாலேயாவ தாவேடோ
அய்யனாருனையல்லாமலும் வேறுண்டோ (ஐயா)

மேவுங்கிளாத்தண்டுமேருவைத் தாங்குமோ
வீசுங்கதிர்முன்மின்மினிப்பூச்சி யோங்குமோ
ஆவதழிவதெல்லாமையன் றன்னாலே
ஆச்சுதென்றாலென்னஆச்சுது என்னாலே (ஐயா)

முன்னமேசெய்தவினையின்வ சத்தாலே
மூட்டப்புலையனும்மேவி யதனாலே
இன்னம்பலவேதுன்னின்னமும் ஏண்டா
ஏத்திக்கொள்ளுமென்றனைக்கெடுக்க வேண்டாம் (ஐயா)

வசனம்.

நந்தனார் தனது ஆண்டையாகிய வேதியரைப்பார்த்துத்தங்களுடைய திருவாக்கினால் என்னையுமிப்படிப் புகழலாமாவென்று மிகவும் வணக்கமாய்ச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-அமிர்தகல்யாணி.

பல்லவி.

சின்னசாதியல்லவோசிதம்பரம்போய்வருகிறேனன் (சின்)
அன்னைதந்தையொருவரில்லை அடைக்கலமென்னையாளவேணும் (சின்)
ஈரமில்லாநெஞ்சமாகிஇறைச்சிதின்றுஉடல்பெருத்த (சின்)
அல்லும்பகலுமதுவையுண்டு அறிவுமயங்கியாட்டங்கொள்ளும் (சின்)

வசனம்.

இப்படிச்சொல்லிய நந்தனைப்பார்த்து வேதியர்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-பைரவி- திரிபுடைதாளம்.

பல்லவி.

ஆருக்குப்பொன்னம்பலங்கிருபையிருக்குதோ
அவனேபெரியவனும்

சரணங்கள்.

வேதபுராணங்க ளோதினதாலென்ன
வேலைசூழ்பணிமாதராலென்னகாரியம்
சாதனையாகவராதொருநாளும்
மண்ணாசைபெண்ணாசைபொன்னாசைபொல்லாது (ஆரு)

பாணன்மதங்களடங்கவேசெய்த-கோ
பாலகிருஷ்ணன்தினந்தொழுமம்பல
வாணனென்றாதரவாய்விரும்பாதவன்
வானவராகிலுந்தானவனசின்னவன் (ஆரு)

வசனம்.

பொன்னம்பலஞ் சிவபத்தியுள்ளவன் பெரியசாதி சிவபத்தி யில்லாதவன் பார்ப்பானாயிருந்தாலுஞ் சின்னசாதி ஆனபடியினாலே திருப்புன்கூரி லுனக்காகப் பரமசிவன் சந்நிதியைவிலக்கி தெரிசனங்கொடுத்ததும் நீகுளம்வெட்டினதும் ஒரு ராத்திரிகாலத்திலே நாற்பதுவேலி நிலமும் நடராஜமூர்த்தியேவந்து நடவுநட்டதும்பார்க்கும்போதுநீயே மகாபுண்ணியபுருஷனென்று சொல்லவேணுமேயல்லாமல் வேறில்லை நீயிதுவரையி லெனதுவார்த்தையைத் தட்டினதுமில்லை ஆகையால் எனக்கு குருவாகிநின்றுஉபதேசம்பண்ணென்றுபின்னுஞ்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாநீகுருவுபதேசம்கவிலிடவேணும்நான்கடைத்தேறநீ (நந்)

நொந்தாலுன்கதிபெறமாட்டேன்
நோயெனும்பிறவிக்கடலிடைவீழ்வேன்
மந்தாரப்பூவெடுத்தரனார்மலரடிச்சாத்திவாழவென்னறிவு
சிந்தாமல்வரந்தரவேணும்சிதம்பரரகசியந்தெரிசித்திடவே (நந்)

வைத்தாக்கருணைக்கடலுன்மனதினிற்சென்றுநீகீர்த்தனம்புரிந்து
ஒத்தாசைபூதகணங்களுரிமையுடன்வந்தூழியஞ்செய்ய
பெற்றாநீபெரியவனுந்தன்பெருமையைநானறிவேனோமூடன்
நத்தாமல்மோசமதானேனம்பிக்கைசொன்னேனாகதிபெறவே (நந்)

கலிவிருத்தம்

வேதமோட்டறஞ்செய்திநூற்களைவிதித்தும்
ஆதனாகினேனடியவர்க்கஞ்சினமடையப்
பாதகம்புரிந்தேனென்றுநதனைப்பரவி
ஏதந்தீரவேவேதியருபசரித்திருந்தார்.

வசனம்.

இப்படிசொல்லிய வேதியர்வார்த்தையைத் தள்ளப்படாமையால் சுற்றிவந்து தலைவணங்கி ஒரு மூலையைநோக்கிச் சொல்லுகிறாப்போல் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

அய்யேமெத்தக்கடினம்-உனக்கடிமை-அய்யேமெத்தக்கடினம்.

அநுபல்லவி.

பொய்யாதபொன்னம்பலத்தையாயிருக்குமிடம்
கையாதமனிதர்க்குஉய்யாதுகண்டுகொள்ளும் (அய்யே)

சரணங்கள்.

பாலகிருஷ்ணன்பணிந்திடுஞ்சீலகுருசிதம்பரம்
மேலேவைத்தஆசையாலேகாலனற்றுப்போலவொன்று
சாத்திரம்-நல்ல-க்ஷேத்திரம்-சிர்பாத்திரம்-ஞானநேத்திரங்கொண்டு
வாசியாலேமூலக்கனல்வீசியேசுழன்றுவரப்
பூசைபண்ணிப்பணிந்திடுமோசறக்குண்டலியைவிட்
டாட்டிடுமே-மன-மூட்டிடுமே-மேலோட்டிடுமே-வழிகாட்டிடுமே-இந்த

மாறுமோனம்விட்டுத்தாறுகின்றவர்க்குச்
சேறுதிப்திபோலேஞானுதிபதியுண்டு
பாருமே-கட்டிக்காருமே-உள்ளேசேருமே-அதுபோருமே-அங்கே
சங்கையறவேகின்றபொங்கிவரும்பாலுண்டு
அங்கமிளப்பாறிக்கொண்டுதங்கபொம்மைப்போலவே
நில்லுமே-ஏதுஞ்சொல்லுமே-ஞானஞ்சொல்லுமே-யாதும்வெல்லுமே
அட்டாங்கம்பண்ணினாலும் நெட்டாங்குபண்ணியது
கிட்டாதுகிட்டவரவொட்டாதமுட்டியது
பாயுமே-மூளைதேயுமே-அதுஓயுமே-உள்ளதோயுமே-வேத
மந்திரத்லேபாடுமெந்திரத்திலேபோர்க்குந்
தந்திரத்திலேயுமில்லை-அந்திரத்திலேயவ
தானமே-அதுதானமே-மலைனமே-பேசாமோனமே-அந்த
மூப்பாழுந்தாண்டிவந்து அப்பாலேநின்றவர்க்கு
இப்பார்வைகிடையாது அப்பாதிருநடன
மாடுவார்-தாளம்போடுவார்-அனபர்கூடுவார்-இசைபாடுவார்-இதை
கண்டாருங்கிடையாதுவிண்டாருஞ்சொன்னதில்லை
யண்டரண்டகோடியெல்லாமொன்றாய்ச்சமைந்திருக்கு
மல்லவோ-அதைக்கொல்லவோ-பறையன்சொல்லவோ-அங்கே
செல்லவோ-நேரமாகுதல்லவோ (ஐயே)

கலிவிருத்தம்.

வானமேவியவும்பர்வாழ்த்தியமறையைக்
கானமேசெயுமவேதியரேயுமக்கடிமை
ஈனமாமிழிகுலத்தினிலெய்தியநந்தன்
ஞானமாரிகொண்டேயவரருளுறநனைந்தார்.

வசனம்.

இப்படி நந்தனார்சொல்ல வேதியர்கேட்டு திவ்வியஞானமடைந்து நந்தனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-சாமம்-ஆதிதாளம்.

கண்ணிகள்

சிதம்பரம்போய்நீவாருமையா நான்
செய்ததெல்லாமபசாரமையா (சிதம்)

சிதம்பரம்போவீர்பதம்பெறுவீர் வேறே
சிந்தனைவேண்டாம்நந்தனே இனிமேல் (சிதம்)

எத்திசையிலுமுமக்கிணைசொல்லப் போமோ
பத்தியேமுதலென்றுபாடியபெரியவர் (சிதம்)

சித்தமுந்தெளிந்தது தெய்வமேநீயென்று
புத்தியும்வந்தது பொய்யிதுவல்லவே (சிதம்)

வசனம்.

இப்படிச்சொல்லிய வேதியரைச்சுற்றிவந்து தலைவணங்கி ஒதுக்க வணக்கத்துடனே தூரவிலகிநின்று வேதியரை ஆசீர்வாதம் பண்ணச் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-ஓரடியிலிரண்டுவார்த்தை-துக்கடா.

| நந்தனார் | வேதியர் |
| --- | --- |
| சிதம்பரதெரிசனங்கிடைக்குமோ | கிடைக்கும் |
| ஜென்மசபலமாமோசொல்லுமே | ஆகும் |
| பதம்பெறுந்தலநெறியறிகிலேன் | அறிவீர் |
| பரமசிவனருள்செய்வாரோ | செய்வார் |
| சாதியில்தாழ்ந்தவனல்லவோ | அல்ல |
| சாத்திரமுறைமைக்குஞாயமோ | ஞாயம் |
| ஆதியம்பலதெய்வம்காடுமோ | காடும் |
| ஆனந்தமடைவேனோவையரோ | அடைவீர் |

வசனம்.

வேதியர்நந்தனாருக்காசீர்வாதம்பண்ணி யனுப்பியபின்பு நந்தனாருடைய குணாதிசயங்களைக் கொண்டாடுவார்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

அடியவர்கள்மனமிடியப்பேசினதுண்டபராதமனந்தங்கோடி
படுநரகில்வீழ்வாரென்றெனவுரைக்கும்பாவமதுபலித்ததென்று
துடிதுடித்துத்தொடைநடுங்கிநீர்வடித்துசிதம்பரத்தே துதிகள் செய்து
படிபுகழுந்திருத்தொண்டர்குணமெல்லாமுலகறியப்பகருவாரே

இதுவுமது.

சாத்திரக்குப்பையெல்லாந் தள்ளினேன்பதறுபோலே
காத்திரஞ்சுத்தமாச்சு கனிந்திடுமுள்ளம்பத்தி
மாத்திரமிருந்தாற்போது மற்றொன்றுமில்லைசைவ
க்ஷேத்திரமுழுதுஞ்சுற்றிச் சேருவேனில்லையென்றார்.

கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டிகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தநேரமும்நந்தனைசிந்தித்தா
னந்தமாகியிருந்தனரந்தணர் (எந்த)
பந்தந்தீரவேயிந்தஉருவாகி
வந்துதோவரந்தந்ததோசிவனென்று (எந்த)

வசனம.

விட்டதோ இந்தவிட்டுக்கவலைகள் பட்டதோபவசாகரச்சே றழிந் திட்டதோ மூத்திவெள்ளம் கரைபுரண்டதோவென்று ஏத்தித்தொழுத வர் எந்நேரமும் வேதியரிப்படியே சிவபத்திபண்ணிக்கொண்டு ஆனந்த மடைந்திருந்தார் அப்படியிருக்க நந்தனார் ஆதனூரைவிட்டுச் சிதம்பரம் வருகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

நந்தன்சிதம்பரம்வருகிறார்ஆதனூரைவிட்டு
கொள்ளிடந்தாண்டியப்பால்வருகையிலே
தொண்டரங்கம்பரவசமாய்-எங்கும்-பொங்கிச்சிவமயமாய்
அந்தக்கருணைவிருத்தியழிந்து
அனேகசென்மவாசனையை
யனல்கொண்டுகொளுத்தாரோ-சஞ்சித-வினையென்றுவறுத்தாரோ (நந்தன்)
குண்டலிசத்தியைக்கொண்டு
கிளம்பிமண்டலம்புகுந்து
சஞ்சரித்துக்கொண்டார்-குறையா-அமுர்தமுண்டார்கிளையார் (நந்தன்)
அநாதிமாயகற்பிதமிந்த
நாமரூபாதிபிரபஞ்சமெல்லா
மழிந்துபோமென்பார்-குறைகட-லெழுந்தநுரையென்பார் (நந்தன்)
சைவத்தலங்களிற்றெய்வமிதுவே
சத்தியம்பண்ணுவேன்நான்பறையன்
சதுர்மறைகேட்டிலேயோ-மிக்க-ஷண்மதங்கேட்டிலேயோ (நந்தன்)
எப்போதும்நடராஜமூர்த்தியின்
இணையடிதொழுதார்க்கீடுறையோ
னிந்திரபதிசிகரோ-திரும்பியும்-வந்தவர்காணகிலரோ (நந்தன்)
ஈசன்கருணைலேசமிலாதவ
னெத்தனைவேதங்கற்றாலு
மெட்டிபெருங்கொம்பு-நெருங்கித்-தொட்டால்செங்கரும்பு (நந்தன்)

ஆதனூரிலொருபுலையனுக்காக
அம்பலநாடகமாடுவரோ
வருந்தவம்புரிந்தேனோ-கனவில்-வருந்தியுமிருந்தேனோ. (நந்த)

அரகரசாம்பசதாசிவனேபொன்
னம்பலத்தாடியதேசிகனே
ஐயையுன்னடிமை-மனது-நையேனுன்னடிமை. (நந்த)

செழித்தவியனுலகெட்டிச்சிகரங்க
ளெங்குந்தெரியுதுகாணையே
தில்லைத்தலமென்பார்-அன்புடன்-சொல்லப்பலமென்பார். (நந்த)

குதிப்பாரொருதரங்களிப்பார்கண்ணீ
ருருப்பாரானந்தலாகிரியால்
கொண்டானடிப்பாரோ-குரவை-நன்றாய்ப்படிப்பாரோ (நந்த)

பாரளந்தகோபாலகிருஷ்ணன்துதி
பாடுந்திருவடிபணிவேனோ
பரகதியடைவேனோ-பூமியில்-மறுபடிவருவேனோ. (நந்த)

வசனம்.

நந்தனார் ஆதனூரைவிட்டுக் கொள்ளிடத்தருகில்வரும்போதுசொல்லுகிறது.

கீர்த்தனம்-இ-ம்-முகாரி-அட்டதாளம்.

பல்லவி.

கொள்ளிடக்கரைபோனான் நந்தன்
கோபுரங்களைக் கண்டான்

அநுபல்லவி

பள்ளச்சாதியிலும் பறச்சாதிநானென்று
உள்ளமுருகியவர் வெள்ளக்கரைபுரள (கொள்)

சரணங்கள்.

ஓட்டத்தின்மேலேறி-நந்தன்
ஓங்குமகிழ்ச்சிமீறி
நாடயெவருமநல்லநடனக்கூத்தாடியே
நண்புடன்கெதிபெறலாமென்றுறுதிகொண்டு. (கொள்)

அக்கரைபோனானே-நந்தன்
ஆனந்தங்கொண்டானே
சிக்கெனவேசிவசிதம்பரேசனைக்காண
சிந்தைமகிழ்ந்துசிவத்தியானஞ்செய்துக்கொண்டு (கொள்)

திருவாதிரைத்திருநாள்-செய்யுந்
தினமல்லவோஇந்நாள்
திருநடராஜமூர்த்திதிருமுகந்தனைக்காண
சித்தங்களிப்பேறுமென்றுறுதிகொண்டு. (கொள்)

வசனம்.

இந்தப்பிரகாரம்ஸ்தோத்திரஞ்செய்து கொள்ளிடக்கரையைக்காண்டுவரும்போது தில்லைக்கோபுரத்தைக்கண்டு தெரிசனம்பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தெண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கோபுரதெரிசனமோ-எந்தன்-பாபவிமோசனமே.

தாபங்கள்மூன்றுந்தணித்துவிடுமே நல்ல
சோபனமுண்டாஞ்சோதிவிளங்கிய. (கோபுர)

விண்ணணைந்துமேலோங்கியேகண்டு
கண்ணுளார்க்கெல்லாங்காட்சியளித்திடும். (கோபுர)

அல்லும்பகலுமமரர்துதித்திடும்
தில்லைக்கிறையோன் றினமுமகிழ்ந்திடும். (கோபுர)

வசனம்.

தில்லைத்தலமிப்படியிருக்குதென்று சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-நவரோஸ்-ஆதிதாளம்.

பல்லவி,

மாங்குயில்கூவியசோலைகளும் வாபிட்சகூபதடாகங்களுந்
தூங்கதிர்மண்டலமெத்தையுஞ் சொர்ணசபேசன்துசயமும்

நாலுபுறத்திலுங்கோபுரமும நவமணிச்சித்திரமண்டபமும்
சிலமுருகதிருவீதிகளுந்தில்லை வேதியர்மாளிகையும்

கண்டேன்கலிதீர்ந்தேன்-என்-கவலையெல்லாமொழிந்தேன்
மண்டலமபுகழுஞ்சபேசனைசந்நிதிவாழகதிப்பணிந்துநின்றேன்

தஞ்சமென்றடைந்தே னிந்தச்சடலத்தால்நொந்தேன்
அஞ்சவேண்டாமென்றொருதரஞ்சொல்லி அழைத்தாலாகாதோ.

அப்பாவுன்சரணம் தில்லைக்கரசேயுன்சரணம்
ஒப்பாரில்லார்நடம்பயிலுமொளியேயுன்சரணம். (கண்)

வசனம்.

கோபுரதெரிசனமேயென்கிற கீர்த்தனமுதற்கொண்டு சிதம்பரவிலாசமென்றுபெயர்.

சிந்து.

இவன்-வேடிக்கைதானென்றுநாடிக்கொண்டே - அறியாதுபோலி ருந்த-செம்பொன்-னம்பலத்தாடியைக்கும்பிடவே- ஆதனூர்தனிலிருந் து-விடும்-அம்புபோலப்பறந்தையமின்றித்-தில்லையருகில்வந்தார் -மன ந்-தேறிக்கொண்டார்குறையாறிக்கொண்டார்- கெண்டாமணியோசை

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

நாளைப்போவேனென்னநாள்கள்சொலத்தெரியாது
பூளைப்பூவாம்பிறவிப்பிணிப்பொழியப்போவாராய்ப்
பாளைப்பூங்கமுகுடுத்தபழம்பதியினின்றுபோய்
வாளைப்போத்தெழும்பழனஞ்சூழ்தில்லைமருங்கணைந்தார்.

வசனம்.

இது-பொழிப்புரை.

நாளைப்போவேனென்றுசொல்லி அநேகநாள் ஒழியச் சபாநாதரைத் தரிசனம்பண்ணவேண்டுமென்னும் ஆசையை அடக்கக்கூடாதவராய் பூளைப்பூவையொத்த நிலையாமையையுடைய பிறப்புகளால் உண்டாகிய சம்பந்தம நீங்கும்பொருட்டுப் போகின்றவராய்ப் பாளையையுடைய பொலிவாகிய கமுகமரங்கள் சூழ்ந்திருக்கும் பழமையையுற்ற தம்முடைய ஊரில்நின்றும் புறப்பட்டு ஆண்வாளைமீனானது எழும்பிவிளையாடும் வயல்களையுடைய சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார்.

கீர்த்தனம்-கரகரப்பிரியைராகம்-ரூபகதாளம்.

கெண்டாமணியாடுது-கண்டுபிணியாடுது

முத்திமணிதேடுது நாடிக்கூடுது (கெண்டா)

பரவசமாகுது பாவங்கள்போகுது (கெண்டா)

ஜெனனமரணாதிகள் மோகமுந்தீர்ந்தது (கெண்டா)

சிந்து.

கெண்டாமணியோசை-காதில்- கேட்குதென்றாரதைப்பார்க்கவென்றே-கொண்டாட்டமாகிவந்தார்- கையைக்-கும்பிட்டெண்நமக்கபிட்டுதோ-வென்றேமனமகிழ்ந்தார்-தெரு-வீதியிலேவந்துகாதலுடன்-கண்டார்களையாறி-இரு-கண்களிலானந்தம்பொங்கிடவே-நின்றார்மதிற்புறத்தே-வெகு-க்ஷேத்திரென்றுரிதைப்பார்த்ததில்லை-பண்டாரவசமாய் நல்ல-பாக்கியசாலிகளாகுமென்றார்-இதுதானோதில்லைப்பதி.

வசனம்.

நந்தனார் தில்லையைக்கண்ட ஆனந்தானுபூதியைச்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ ம்-தெண்டகம்-ஆதிதாளம்.

தில்லைத்தலத்தைக் கண்டார் அதுசிந்துவிலாசமென்றார்-அந்த
எல்லையிலே நின்றார் மனதேகமாக்கிக்கொண்டார்
இருகண்கள்நீர் வடித்தார் கொடுங்காமவலையறுத்தார்
இருகையை தூக்கி குவித்தார் தன்காலைக்கோணிக்குதித்தார்-இந்த
ஐம்புலன்களை மறந்தார் பரமானந்தக்கடலுறைந்தார்
தன்தேகபாவ மறந்தார் தில்லைச்சிவனேயென்றிருந்தார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

இதுதானோதில்லைத்தலம்-இத்தனைநாளுமறியேன்
இதுதானோதில்லைத்தலம்
அதுவோயிதுவோவென்று அலைந்திடும் பேயனைக்
கதிதருவேனென்று கைகாட்டியழைக்குது (இது)
காசினியிலிதை கயிலையென்றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றி பேணிப்பார்த்தறிகிலேன் (இது)

வசனம்.

நந்தனார் தில்லையைக்கண்டு கொண்டாடுவார்.

கீர்த்தனம்-இந்துஸ்தான்-காபிராகம்- ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைதில்லையென்றார் பிறவிஇல்லைஇல்லையென்று மறைமொழியும்
தொல்லைதொல்லையென்றகொடுவினை
வல்லைவல்லையென்றகலுமதிரு (தில்லை)

கற்றோருங்கற்றோருங்களங்கமறிந்திட்
பெற்றோயபெற்றோம்பேசாப்பெருமையி
லுற்றோமுற்றோம் பொன்னம்பலத்தினில்
தத்தோந்தத்தோமென்றுநடனமிடும். (தில்லை)

வாடிவாடிமாலயனிருவரும்
கூடிக்கூடிக்கொண்டல்லும்பகலும்
தேடித்தேடித்திருவடிமுடிகளைப்
பாடிப்பாடிக்கோபாலகிருஷ்ணன்தொழும். (தில்லை).

அக்கடா-இ-ம்- தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

இதுவேதில்லைச்சிதம்பரக்ஷேத்திர மீசனிருப்பிடமோ
மதுரமபொழிநதியும் மறையோரிருப்பிடம்
மாமுனிவர்தவம வாழுயபெரியிடம்
பதவிபெறுநதொண்டர் பணிந்துவரூமிடம்
பலதெய்வமுமலலில பாதியிலுறுமிடம் (இது)

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

ஆடுஞ்சிதம்பரமோ-வையன்-கூத்தாடுஞ்சிதம்பரமோ
ஆடுஞ்சிதம்பரமன்பர்களிக்கவே
நாடுஞ்சிதம்பரம்நமச்சிவாயப்பொருள் (ஆடுஞ்)

ஆருமறியாமல்அம்பலவாணனார்
சீரடியார்பார்க்கசேவடிதூக்கியே (ஆடுஞ்)

பாலகிருஷ்ணன்போற்றும்பனிமதிச்சடையினார்
தாளமத்தளமபோடதாதெய்தாதெய்யென்று (ஆடுஞ்)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தில்லைக்கண்டபோதே தெளிந்தகென்னுள்ளமெல்லாம்
பல்லூழிகாலமசெய்த பாழ்வினைதொலைந்துபோச்சு
நல்லருளநடனங்காட்டும் நாயனார்சிற்சபைக்குள்
செல்லுவார்மகிமைசெப்ப சேடனாலாகாதென்றே.

வசனம்,

இப்படியே தில்லையைக்கொண்டாடி தில்லையைப்பாராதவரே பாவியென்பார்.

கீர்த்தனம்-இ-ம்-சவாயி-சாப்புதாளம்.

பல்லவி.

மார்கழிமாதத்திலாதிரைநாளையில்வந்துசிதம்பரதேசிகனை
பாராதபாவிகட்கேதுமில்லையிந்தப்பாரில்வந்துபிறவாதவரே

வானிற்றொடுந்திருமாளிகைமண்டபமாமதிலுநதில்லைமாநகரம், காணக்
கிடைக்காதப்பாஇந்தபாக்கியங்காதில்கேட்டவணைணங்கணடதுவே

ஆதிபராபரமாகியதில்லைப்பொன்னம்பலவன்வளர்சந்நிதியில்
நாதமுழங்கிதமுங்கேட்குதுவானந்தநாடகவேளையைநானறியேன்

வசனம்.

நந்தனார் சிதம்பரங்காணுததால் சிவலோகங்காணுமென்பார்.

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-ரூபகதாளம.

பல்லவி.

சிதம்பரம்வந்துசேர்ந்திசிபாதசென்மம்வீணென்றுபேசு
மனதிலெண்ணினார்பாதகமலத்தியானமபண்ணினார்
பறையனுக்குமிந்தத்தலத்தைப்பார்த்தபின்புமோட்சபதவி
பலிக்குதல்லவோபாவிசென்னமறுக்குதல்லவோ
தொண்டுகொண்டதங்களையர்பெருமையெல்லாம்சொல்லிசொல்லித்
துளிக்காவினாஞானவினையையளித்துவினார்
பூதலத்தினிலிதுவேதெய்வமென்றுநந்தனுநந்தக்கடல்
பொங்கிப்பாடினார்புண்ணியத்தலமென்றுதேடினார்

கீர்த்தனம்- இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

அரகரசங்கரவண்ணலேவமபலத்தானே
நானுந்தனடைக்கலமென்று
உருகித்துதியாரோ-வானந்தம்
பெருகிப்பதியாரோ
முத்தியளிக்குந்திருமூலத்தானனாக்கண்டு
பத்திபண்ணுதவன்பாமரனல்லவோ
பாருக்குச்சுமையாச்சு-அவனிருந்து
மாருக்குச்சுகமாச்சு
மங்கையர்மோகமாய்மயங்கிதினந்தோறு
மங்களம்புளகிகமாயவரிக்கமேவல்
கொண்டாழிக்கியுழைத்தாரோ-அன்னியாயமாய்
நாளையுங்கழித்தாரோ
வீசிநடைநடந்தமெய்யும்பொய்யாகவே
ஓசையடங்கும்போதொருவருமங்கில்லைத்
துாசியுமபோகாதே-காதறுந்த
ஊசியுமவாராதே
சிவசிதம்பரமென்றுதில்லைவெளியினின்று
பவசாகரமென்றுபரமபதமடையுந்
தவநெறிபொருந்தாரோ-பொருந்தின
மவனையும்வருந்தாரோ
சாத்திரங்கற்றாலுஞ்சதுர்மறையுணர்ந்தாலும்
சூத்திரம்பெற்றாலுஞ்சொன்னேனகங்கார

மாத்திரம்போகாதே-கருணைக்குப்
பாத்திரமாகாதே

சரணாகதமென்றுசார்ந்தடிபணியாமல்
வருணாஸ்திரம்விதிவழுவாதிருக்கிலும்

சனாதிகள்விடுமோ-சரவண
மனாதிகள்படுமோ

அஷ்டசித்திகள்பெற்றுஆண்டாயிரங்காலம்
மட்டிருந்தாலுமெனமரணபயமெய்திலா •

நஷ்டசென்மமாச்சே-மனிதசென்ம
மெட்டிவீணாய்ப்போச்சே

ரூப்பாழுங்காண்டி-மூலக்கிமூட்டிக்கொண்
டப்பாலேகின்றலானந்தங்காணலா

மொப்பாரில்லையடாவதுறுதி
நிற்பாரில்லையடா

ஆலமிடறடக்கியம்பலக்கூத்தன்கோ
பாலகிருஷ்ணன்தொழும்பரமசிவனேயென்று

பாடிப்படியாரோ-பருவத்தில்
தேடிப்பிடியாரோ

வசனம்.

நந்தனார்சிவபத்தி பண்ணாதவனை நிந்தனைசெய்து இன்னமுஞ்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-சாப்புதாளம்.

வானோர்புகழுந்தில்லைவனநாதர்வாழும்
ஞானசபையைப்போற்றிநமச்சிவாயவென்று
சொல்லாதவன்-கல்விகல்லாதவன்-வெகு-பொல்லாதவன்

காசினிபுகழ்சிவகாமவல்லியைக்கண்டு
பாசமகலுமனெறிபாராதவன்சுத்தப்
பதராச்சு-ஆட்டி-னதராச்சு-கிருமிக்-கெதிராச்சு

ஆட்டுக்காலைச்சற்றேகேட்டுவாங்கியுள்ள
நாட்டிக்கொள்ளாதவன்மாட்டுக்குவமையென்று
நாடாரோ-கண்டு-கூடாரோ-என்றுந்-தேடாரோ

அம்பலவாணனருகில்வந்துகையால்
கும்பிட்டிறைஞ்சாதகுருடர்களுக்குத்திற
மதியேது-பரகதியேது-பண்ணும்விதியேது

நாக்கிருந்துஞ்சிவநாமத்தைநவிலாமல்
சாகப்போகும்பேசுஞ்சண்டியவனைக்கால
னடியானோ-கட்டிப்பிடியானோ-கையா-லிடியானோ

வேதாகநூற்களைவிவரித்துணர்ந்தாலு
மேகாந்தபத்தியொன்றில்லாதவனுள்ள
முருகாது-கள்ளங்கருகாது-வெள்ளம்பெருகாது

ஆத்திமதியுஞ்சடையழகனுடையகூத்தைப்
பார்த்துக்களிக்காதபாவியனிதார்க்கொன்றும்
பலியாது-வினைசலியாது-சிலம்பொலியாது

பாலகிருஷ்ணன்தேடும்பாதசரத்தைக்கண்டு
சிலமுடனேயுண்டுசெபிக்காதவன்துன்பம்
துலையாது-இன்பம-நிலையாது-கனமங்கலையாது.

வசனம்.

சிதம்பரம் பாரதகண்படைத்தாரை மூகத்தைக்கெடுக்கவந்தபுண்படைத்தாரென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம॰ ஆனந்தக்களிப்பிலே-ஒருபேதம்.

காணாதகண்ணென்னகண்ணோ
வீணானகணமயிக்கண்ணதுபுண்ணோ (காணாத)

சொல்லும்பொருளிறந்ததுரியவடிவதாகி
யல்லும்பகலுமற்றவானந்தப்பேரொளி (காணாத)

பசியாமருந்தளிக்கும்பரமரகசியத்தி
லசையாமலேயாடுமம்பலநாதனைக் (காணாத)

ஊராருமறியாமலொளிகண்டுபிசகாமல்
ஈராறுகாற்கொண்டெழும்பியமண்டபம் (காணாத)

அண்டத்துளடங்காதவாசைவலையைப்பூட்டி
பிண்டத்துளடங்கியபேரின்பதென்பத்தைக் (காணாத)

நாசிநடுவிருந்துநாதனேதானென்று
பேசாமற்பெருமையையொருநாளும் (காணாத)

என்னையானறியேனென்றிகழ்ந்திடும்பேயனை
தன்னநதனியனுக்கித்தருவனென்றழைத்தாரைக் (காணாத)

சோற்றுத்துருத்தியிலைச்சமந்தனுடலென்ன
ஆத்திமதியஞ்சடையழகனமருங்கோயில் (காணாத)

சீலக்கமலமுகச்சிவகாமிமனமகிழ்
கோலக்கனகன்றில்லைக்குழகனுடையகூத்தைக் (காணாத)

பாதகிருஷ்ணன்தொழும்பாதத்தைப்பணிந்தொரு
நாளும்மறவாதநலமிக்கவழிதேடி (காணாத)

வசனம்.

பத்திபண்ணாதவன் முத்திபெறானென்றுசொல்லுகிறார்

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

வேதம்படித்ததும்சாஸ்திரங்கற்றதுமமெய்யினில்நீறுபூசுவதும்
ஆதிசிதம்பரதேசிகன்திருவடிக்காளானலன்றானந்தம்
உடனேதுலையுமபவபாதகஞ்சொன்னேன்சொன்னேன்சொன்னே
ஊணுறக்கமுதலாகியநானாகுணமுண்டேயுலகில்யாவருக்கும் [னே
ஆணவமலநீத்தார்களறிவாரகத்தைச்சுருக்கிக்கொள்ளுவரோ
ஜகத்தைப்பொய்யாத்தள்ளுவரோசொன்னேனசொன்னேன்
அருந்தவமுனியாகிலும்நல்லராசைபொல்லாதரியாரோ
வருத்திப்படுத்திமனதைமயக்கிவைத்திடுமன்னமயக்கோசம்
உற்றுப்பார்த்தாலதுநேசம்சொன்னேன்சொன்னேன்
அரவணைகோபாலகிருஷ்ணனல்லும்பகலும்பணிந்தேற்றும்
திருவடிசரணாகதமென்றெண்ணித்தெளிந்தார்க்கன்றோபரபக்தி
ஒழிந்தார்க்கன்றோவரமுத்திசொன்னேன்சொன்னேன்

---

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இப்பரிசாயிருக்கவெனக்கெய்தலரிதென்றஞ்சி
யப்பதியின்மதிப்புறத்தினுறுதபெருங்காத
லொப்பரிதாய்வளர்ந்தோங்கவுள்ளுருகிக்கைதொழுதே
செப்பரியதிருவெல்லைவலங்கொண்டுசெல்கின்றார்

வசனம்.

இந்தப்பிராமணர்களுடையவீடுகள் இத்தன்மையாயிருக்கவெனக்கு அவ்விடத்திற்குப்போகுதலரிதென்றுபயந்து அந்தஸ்தலத்தின மதிலி

ன்புறத்தில் அளவற்றபேரன்புசமானமில்லாமல்வளரமனமுருகிக்கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லையைவலஞ்செய்துகொண்டுபோவார்.

விருத்தம்

அம்மையாந்தில்லைமாநகர்மருங்கிடையணைந்து
சும்மையிட்டிருவிழிகளில்நீரசொரிந்து
விம்மியேசிவனார்சரிதங்களைவிரித்துக்
கொம்மைவிட்டவர்பாடியுமானந்தங்கொண்டார்.

வசனம்.

நந்தனார் தனக்கிந்த பாக்கியங்கிடைத்ததென்றுகொண்டாடுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-உசேனி ரூபகதாளம்

பல்லவி.

கொண்டாடுகிறார்தில்லைக்கோயிலைக்கண்டுதாவித்தாவி (கொ)

அண்டரண்டந்தொழுமம்பலநாதனைக்
கண்டாரைக்கண்டுகொண்டோமென்றுநன்றாய் (கொண்)

அஞ்சலிகொண்டுகளித்துஅரகரவென்றுசெபித்து
குஞ்சிதபாதத்தைத்துதித்துக்குரவைகள்பாடிக்குதித்து (கொ)

அங்கம்பரவசமடைந்துஆனந்தக்கடலெழுந்து
பொங்கிச்சிவமென்றறிந்துபுவியதிர்ந்துபணிமிகுந்து (கொண்)

இருகண்களில்நீர்பெருகஇறைஞ்சிமனதுருக
அருமைச்சிவகதிதருகஅம்பலவாணன்வருக (கொண்)

இதுவுமது.

தரு-இ-ம்-சௌராஷ்டிகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கொண்டாடித்தாரேநந்தனார்-கோவிலைக்கண்டு
கொண்டாடித்தாரேநந்தன்

அநுபல்லவி

அண்டாமகிழ்ச்சியாலே-அரனேயென்றுமென்மேலே (கொண்)

சரணங்கள்.

பண்டுநான்செய்ததே யோகம்-அதனாலுருக்
கொண்டிவந்தேன்மானிட தேகம்-ஆகவேஇந்தப்
புண்டரீகப்பதவை போகம்-கண்டேனென்போல
மண்ணிலெவர்க்குளதிப் போகம்-என்றுதித்துக்

கொண்டாடுமிவர்புகழைக்
கூறவருமேயுற் சாகம் (கொண)

வஞ்சமனத்தையொரு மித்து-நின்னைத்தொழாத
பஞ்சபாதகப்பே ரொடுத்து-உலுத்தர்களைக்
கெஞ்சியவர்களை யடுத்து-உழலாமலே
கஞ்சமலர்ப்பாதங்கொ டுத்து-ஆண்டருளென்று
வஞ்சிசிவகாமிதொழும்
மணவாளனைத் துதித்துக் (கொண்)

ஒருநாற்புறமதிட் சொலிக்க-ஊரெல்லைசுற்றி
வருவார்திரும்புவார் களிக்க-சிரசின்மேலே
இருகைகுவித்துவாழ் வளிக்க-ஆகையாலிந்தப்
திருநாளைப்போகுவார் மிருக்க-ஆகையாலிந்தப்
பெருவாழ்வடைவாரிவர
பேதயில்லையே யுரைக்கக் (கொண்)

வசனம்.

இப்படி வீதியைச்சுற்றிசந்நிதியில்வந்துதடி விழுந்தாற்போலுடல் படியப்பணிந்து புழுதிடப்புரண்டு ஆனந்த முடைந்து திருத்தசபைதெ ரிந்து தெரிசனம்பண்ணுவாய்.

கீர்த்தனம்-இ-ம-லாவணி-ஆதிதாளம்.

சபாதெரிசனங்கண்டான்-நந்தனுஞ்-சுபாவமுடனேநின்றான்
சபாதெரிசனங்கண்டான்கனிதபிரபாவமாசியசபாபதிஇருக்கும்
சதாகாலமும்வேதங்கள்மொழிந்திடுஞ் சிவாகாரமாய்செருக்குவளர்ந்தி
தில்லைமூவாயிரமுனிவர்கள்கூடுமெல்லும்பகலுமவரவர்நாடும். [டும்

வசனம்.

தெற்குவீதியினின்று சபாபதியைநோக்கித் துதிபண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செங்கலா-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெயஜெகதீசா-அதி-சுத்தராஞ்சிதபாதா-ஓ-ஜெயஜெகதீசா

தில்லையைக்கண்டேன்தேறித்தெளிந்தேன்
எல்லையிலாநின்றேனினிப்பிறவேன்காண்
எனக்கினிபாரீர்-கருமபுபோ-மினிச்சுகுபார்வீர்
ஆசாபாசசந்ததயோறவெட்டிமோனகத்தின்முழுக்காட்டி
வைக்கயிதுபாருக்நுனிமிடையாதுநிந்தசுகமபாருக்குளிணையேது
சரணாகதமென்றிங்கேயங்கேனசாமிபராக்கு
உடையடக்தன்ஜெனனாதிகளானமிகவொழிந்தேன்
மேவெருதெய்வயுகளைவருந்தேன் (ஜெய)

தென்றிசைக்கோன்வக்ஷைழத்திதிம்வேளையில்
பெணபிளளைகளாநனைறாட்டம்
ஓடத்திலேறியபெருங்கூட்டம
காறுமகமனுங்கிளைட்டாட்டம்-ஒருமையிக்கைதாரும்
காறுனக்கருளபுரிந்தாளுவெனென்று
களைவிலாவினுமவாருநகட்டியெழுப்பிக்கவலைகளைத்தீரும்
அடிமையென்றுமனறுமகிழ்ந்துபாரும
தில்லைவெளியில்வாடாவெறுசேருமய் (ஜெய)

அரகரசங்கரனேபொன்னம்பலத்தாண்டவனே
பரமதயாபரமூர்த்தியென்றபணிந்தேன்மனங்கனிந்தேன்
சாதியில்சின்னவனானால்முன்வீதியிலவந்தேனோகாதோ
பாதகஞ்செய்யினுஞ்சிதம்பரமெனறு
பகர்ந்தால்பழவினைபோகாதோ
தீதில்லாதபெருந்தவத்தார்வந்தால்
தெரிசனஞ்செய்தேன்போதாதோ
ஆதிபராபரமாகியிவனைக்கொண்டாடுவேன்
பாடுவேன்தேடுவேன்நாடுவேன் (ஜெய)

அபசாரமாகியசமுசாரம்சாதாவிஷபகரம்திகோரம்
உபாயமறிந்துகரையேறப்படாதுஜெகதீசுரமாயா
விலாசகற்பிதமிந்தசெகம் அனேகசஞ்சிதவாசனைகள்
சிவலோகமென்கிறபாவனையால்நிவாரணம்பெரியோர்கள் [ணிவார்
பணணியதொழிலின் பயனறிவார்பாலகிருஷ்ணன்தொழும்கழல
எண்ணியபடியேதவமுறுவார்எனதுனதென்னுமுறைமையிலவார்
சமாதிபண்ணியகம்மாதிக்கிருந்தியறுபடாதே பேதைகைவிடாதே
சபாபதிவெகுகிருபாநிதியுன் [யும்நீர்
பிரதாபமறியேன்கூபாவப்பறையன் (ஜெய)

விருத்தம்.

வாட்டுவோருடல்வேர்படசுழுலிடைவருத்தி
மூட்டுவோர்மூலக்கனல்மதிமண்டலமுகட்டில்
மாட்டிறைச்சிவையருந்தியபுலையன்றன்மனத்து
ளாட்டுக்கால்சற்றேதந்திடுமம்பலத்தரசே.

கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்காபி-ஆதிதாளம்.

பல்லவி.

தாதாதாவென்றாடியபாதம்-தத்தித்தெய்தத்தித்தெய்யென்றாடியபாதம்()
ஆதரவாகபதஞ்சலிமாமுனிக்கானந்தநாடகமாடுந்திருவடி (தா)
ஆகமவேதபுராணங்களோதியயோகிகளாலேதேடும்திருவடி (தா)
சிந்தைமகிழ்ந்துகுவிந்திடவேயதிசுந்தரரஞ்சிதகுஞ்சிதபாதம் (தா)
பாரளந்திடுகோபாலகிருஷ்ணன் துதிபாடிப் பரவிப்பணியும்பாதரசம்()

வசனம்.

நந்தனார் பிறவிப்பிணிக்கஞ்சித் துதிபண்ணுவார்

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஏகதாளம்.

அம்பலவாணாவுன்சரணமடைந்தேனேனை
ஆதரித்தாளுவதுன்பாரமல்லவோசொல்லவோ.
எடுத்திடுஞ்செனனங்கணக்கெழுதத்தொலையாதென்பாவி
இன்னமும்பிறந்திடவேணுமோநடேசனேயீசனே.
ஆசையெனும்பெருங்காட்டிலேயாற்றுப்புழுவுடன்
அகலவிடாதேயுமையீனெனென்னையனேமெய்யனே.
பாரளந்தகோபாலகிருஷ்ணன்பணியுமலர்ப்பாதம்
பறவியென்னுள்ளுறவேகருணைபாருமேவாருமே.

வசனம்.

அம்பலத்திலாடும் நடனத்தை வருணித்துச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

ஆடியவாதா-இருவர்கள்-நாடும்விநோதா (ஆடிய)

அநுபல்லவி.

ஆடியபாதாவயனுமாலுந்தினம்
தேடியுங்காணுமற்றிரைமறைவாக
திந்தித் தித்தி தித்திக்கியென் (ஆடிய)

சரணங்கள்.

வீரவெண்டையஞ்சிலம்பசைந்திட மேவுஞ்சடையம்புலியசைந்திட்
டாருந்தொண்டர்கள்மனங்குவிந்திடச்சாலோகாதிபதவியுந்
தந்தோந் தந்தோந் தந்தோமென்று (ஆடிய)
வேதமுனிவர்கள்பாடவுஞ்சனகாதியோகிகள்
வெகுநாதமெங்கினுமூடவுந்திருநந்திமத்தளம்போடவுந்
தருந் தருந் தருந்தருமென (ஆடிய)
பாலகிருஷ்ணனதுதிகள்செய்திடப்பண்ணவர்கள்பூமாரிபெய்திட
சீலமுள்ளசிவகாமிமகிழ்ந்திடத்திருச்சிற்றம்பலத்தாசனுந்
தாந் தாந் தாந் தாந் தாந் தாந் தாந் தாமென்று (ஆடிய)

வசனம்.

நந்தனார் அடிமைத்திறங்காட்டிச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம-ஆதிதாளம்.

அநிந்தநியாமலேசெய்ததபராதமையா-என்னை
ஆண்டவனேதில்லைத்தாண்டவராயா அடிமையுன்சரணம்
பருகியவண்டமிரண்டங்கள்கடந்திமித்தாவுன்சரணம்
பதஞ்சலிக்காகநடம்புரியுந்திருவம்பலக்கூத்தாவுன்சரணம்
நவுமாதியுமந்தமுமென்றுமிலாதமிராமயனேசரணம்
பொங்குமாநந்தக்கடலேவெளியேயறிவின்னறிவேயுன்சரணம்
என்றும்சித்தநிரஞ்சனஙிட்களநிற்குணரூபாவுன்சரணம்
கருதிநின்மகிமைகண்டோதரியாதுளனியேனுன்சரணம்
எள்ளுக்குளெண்ணெய்போலெங்குமகண்டமதாகுமீசாவுன்சரணம்
யாருமெட்டிகண்டறியாதவன்கனகசபேசாவுன்சரணம்

வசனம்.

இப்படி யனேகவிதமாய்க்கொண்டாடி உட்புகுந்து தாண்டவம் பாராத குறைகொண்டு சுவாமியை நானுள்ளே வரலாமோவென்றுகேட்கிறார்.

கீர்த்தனம்-இ-ம-மாஞ்சை-ரூபகதாளம்.

பல்லவி.

வருகலாமோவையாஉந்தனருகில்நின்றுகொண்டாடவும்பாடவுநான்
பரமகிருபாநிதியல்லவோஇந்தப்பறையனுபசாரஞ்சொல்லவோ
உந்தன்பரமாநந்தத்தாண்டவம்பார்க்கவேநானங்கே (வருகலா)

பூமியில்புலையனாகப்பிறந் தேனே-நான்
புண்ணியஞ்செய்யாமலிருந் தேனே
சாமியுன்சந்நிதிவந் தேனே-பவ
சாகரத்தையுமிழந் தேனே
கரைகடந்தேனேசரணமடைந் தேனே-தில்லை
வரதாப்பிரதாபமும்பாபமுந் தீரவே(வருகலா)

வசனம்.

இப்படித் திருநாளைப்போவாரென்னுங் கீர்த்திபெற்றநந்தனார் தில்லையில்வந்து கொண்டாடும் பத்திமார்க்கத்தை ஆதிசேடனாலும் வருணித்துச்சொல்லப்படாத ஞானபத்திவைராக்கிய சாஸ்திரங்கள் குடியிருக்கும்ஊரின்பேர் சொல்லக்கேட்டறியாத பேதையாகியகோபாலகிருஷ்ணனென்னும் பெயர்கொண்ட என்னாலெ சொல்லத்தகுமா எதோ நானுளறிக்கூறியதால் பெரியோர்கள் பிழைபொருக்குங்கடமையென்றுசொல்லிவணங்குகின்றார்.

சிந்து.

இதுதானோதில்லைப்பதி-என்று-எக்களித்தாராடிக் கெக்களித்தார்-ஐயாவுன்சந்நிதியைக்-காண-வாசைகொண்டுவந்தே னேசமுடன்-தெருவில்பொடித்தூளை- அள்ளித்-தேகமுழுதினுந்தாகமுடன்-தரித்தார்திருநீறாய்-நாலு-சாஸ்திரவேதங்கள்பார்த்துணரும்-பெரியோரிருக்குமிடம்.

வசனம.

நந்தனார் அந்தத்தில்லைத்தலமிப்படியிருக்குதென்றுசொல்லுகிறார்

கீர்த்தனம்-இ-ம்-செந்தகுக்கா-தெண்டகம்ஆதிதாளம்.

ஆகமங்கள்வேதியர்கள்சிவனடியார்கள் கூட்டம்-நம
தேகமாகியெப்போதுவிளைகின்றயோகிமுனிக ளாட்டம் பூ
லோகமிதுகைலாசமென்றுமிதைப்போற்றுவார்க ளாட்டம்-ஆதி
வேகமாகவெங்கேயாகினுமவெளியேபோகவேணு மையோ
இங்கிருக்கலாகாதையேஇங்கிருக்கலாகா தையே
பாவிப்பறையனிங்கேவரலாமோசுவாமிதெரிசனந்தர லாமோ
பாதகமலங்களைத்தொடப் போமோ
பாவமென்னப்பிரிந்துதொலை போமோ

இங்கேஆகாதாகா .தையே
வேள்விசெய்யும்புகையேஉலகமெழும்பிப்போது தையே
புண்ணியவான்கள்புரியுந்தவம்
அரகரசிவனென்றுஆடிப்பாடிக்கொண்டு
பரிவுடன்றனைப்பிரதட்சணம்வருமிடமஆகாதாகா தையே
மணியாடுதுவெகுசனங்கூடுது-வீதிவலமாகுதுதிருப்பதம்பாடுது
உள்ளோகடமாடுதுபணிவிடைபோகுதுபரவசமாகுதுமெத்தப்
பயமாகுதுஇங்கேஆகாதாகா தையே
தீண்டாதேஇங்கேவேண்டாதே சும்மாஇறைபாதேஇங்கேதரியாதே
என்னைப்பாராதேபடியேறாதேஉள்ளேபோகாதேவரலாகாதே
யென்பார்ஆகாதாகா தையே

---

சிந்து.

பெரியோரிருக்குமிடம்-இந்தப்-பேயனிருப்பதுஞாயமல்ல
நானேபறைச்சாதி-தில்லை-நாதன்தெரிசனமாதரவாய்
பண்ணப்படுபாவி-இந்தப்-பாரிலிருப்பதுசீரலவே
என்றேகுளத்தோரம-புக்கி-ஏங்கிநின்றார்துயர்நீங்கிநின்றார்
ஓபாப்பெருங்கவலை-கொண்டு-உள்ளங்குழைந்திடவெள்ளமெனக்
கண்ணீர்களைபுரள-இரு-கைதொழுதாரவர்மெய்தொழுதார்
கீழேபுரண்டழுதார்.

## திருநாளைப்போவாபுராணம்.

### விருத்தம்.

செல்கின்றபோழ்தந்தத்திருவெல்லைப்பணிந்தெழுந்து
பலகுஞ்செந்தீவளர்த்தபயில்வேள்வியெழுபுகையு
மலதுபெருங்கிடையொதுங்கிமடங்கணெருங்கினவுங்கண்
டல்குந்தங்குலநினைந்தேயஞ்சியணைந்திவர்நின்றார்.

### வசனம்.

திருநாளைப்போவார்சிதம்பரத்துக்குப்போனபொழுதுஅதன்எல்லையைக்கண்டுநமஸ்கரித்து எழுந்து விருத்தியாகச்சிவந்தஅக்கினியைவளர்த்து ஆகுதிசெய்கின்ற யாகத்தால் உண்டாகியபுகையும்மிகுந்தபிராமணப்பிள்ளைகளின்கூட்டம் வேதமோதுகின்ற அடிக்கடி செருங்கியிருக்கும் மடங்களையுங்கண்டு குறைவாகிய தம்முடையகுலத்தைநினைந்து உளளேபோவதற்குப்பயந்து போகாமல் நின்றுவிட்டார்.

இதுவுமது-விருத்தம்,

நின்றவரங்கெய்தரியபெருமையினைப்பார்முன்
சென்றிவையுங்கடந்தூர்சூழெயிற்றிருவாயிலைப்புக்கார்
குன்றனையமாளிகைகடோறுங்குலவும்வேதிகைக
ளொன்றியமூவாயிரமங்குளவென்பாராகுதிகள்.

வசனம்,

எல்லையில் நின்றுகொண்டிருந்த திருநாளைப்போவார் தாம் உள்ளயடையக்கூடாத அக்கோயிலின்பெருமையை நினைப்பாராகி முதலின் அந்த எல்லையையுங்கடந்து ஊரைச்சுற்றியிருக்குமதிலின திருவாசலையடைந்தார் அங்கே திண்ணைகள்பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம் வீதிகள்தோறும் ஓமங்கள் செய்யப்படுகின்றனவென்று சொல்லிக்கொள்ளுவார் சுவாமியைப்பூசிக்கின்றதில்லை மூவாயிரவர்களுடைய வீதிகள் மாளிகைகள் மூவாயிரமென்றார் வேதவிதிப்படியாகுதி செயயும் பிராமணர்களுடைய வீதியில் தாம்போகக்கூடாதபடியால் அதைநினைந்து தங்குலத்தையிகழ்ந்து இருக்கலாகாதென்று அவ்விடம்விட்டு ஒருகுளத்தருகில்வந்து சுவாமியைப்பாராதசென்மம் ஏன் படைத்தாயெனறு தாழப்புரண்டழுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சரசரங்கி- ரூபகதாளம்,

பல்லவி.

இந்தச்சடலம்வந்தவா றேதென்றறிகிலேன் - நானேதென்றறிகிலேன்

அநுபல்லவி.

சந்ததமூந்தில்லையம்பலத்தானை
சிந்தித்துமாயச்சிடுக்கறுக்காமல் (இந்தச்)

சரணங்கள்.

அங்கமலங்களைப்போக்கியேசிவ
கங்கையிலாடிக்களங்கமறாமல் (இந்தச்)
ஆடும்நடனங்கண்டானந்தமாகி
பாடிப்படித்துபணிந்துகொள்ளாமல் (இந்தச்)
அஞ்சக்கரத்தையெடுத்துருவேற்றி
வஞ்சப்பிறவிமயக்கறுக்காமல் (இந்தச்)
பாலகிருஷ்ணனறெழுமபாதத்தைக்கும்பிட்டு
சீலமுள்ளமுத்திசித்திபெறாமல் (இந்தச)

கீர்த்தனம்-இ-ம்-தந்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

கனகசபாபதிதரிசனம்ஒருநாள் கண்டால்கலிதீரும்.

அநுபல்லவி

ஜனகமகாமுனிகைதொழுதேத்திய - தினகரகோடிதேசோன்மயமாகிய

சரணங்கள்,

மனதிலொலிங்கியகல்மிஷம் போக்கும்
மாயப்பிணியதனைமறுவடி வாக்கும்
சனனமரணசமுசாரத்தை நீக்கும
திருவடிநிழலிலேகூடிய யார்க்கும (கனக)

சுருதிமுடிகளிலுஞ்சொல்லிக்கொண் டாடும்
துய்யவெளியையொளியாகவே கூடும்
தருமநெறியுந்தவமுந்தள நாடும்
ததிங்கிணத்தோமென்றுதாண்டவ மாடும் (கனக)

பற்பலயோசனைசெய்வதுந் தொல்லை
பரகதியடையவுபாயமு மில்லை
அற்புதமாகவேதானொரு சொல்லை
அணையுங்கோபாலகிருஷ்ணன்பணியுந் தில்லை (கனக)

கீர்த்தனம்-இ-ம்-கரகரப்பிரியை-சாப்புதாளம்

பல்லவி.

கட்டைக்கடைத்தேறவேணுமே-கனகசபாபதிநடனங்
கண்டுகளிக்கவந்தஇந்தநந்தனார் (கட்டை)

கட்டைக்கடைத்தேறட்டுமோசென்மம்
கெட்டதல்லவோஇஷ்டமறியேன் (கட்டை)

முத்தியளிக்கும்பத்தியிலென்ன
சிற்றம்பலவன்சித்தமறியேன் (கட்டை)

வசனம்

தேகம்படைத்தால் சிவபத்திபணணவேணுமென்று நந்தனார்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ரூபகதாளம்.

தேகம்வந்தவாறுசொல்லவோ-சிதம்பரேசனடியைத்
தினமுந்தொழுதிருப்பதல்லவோ
இந்தவிஷயசுகத்தை நாடுமோ-பாவி
மனக்குரங்கிருப்பிடங்காணும லோடுமோ
தில்லைத்தலந்தைக்கணடு ழாச்சுதே·உள்ளே
சென்றுநடனதெரிசனம்பண்ணுமல் போசசுதே

பறையனென்றசென்மம் போகுமோ-பாழ்
வினையாலின்னம்பாரில்வந்துபிறக்க லாகுமோ
அடிமையென்றுவந்தே னுய்யுமோ-ஒன்றையும்
நானறியேனம்பலத்தெய்வமென்ன செய்யுமோ
பார்த்ததெல்லாமழிந்து போணுமோ-கோ
பாலகிருஷ்ணன்பணியும்பரமசிவன்கருணை வேணுமோ

வசனம்.

சிதம்பரதெரிசனங் கண்டபேருக்கு சென்மமில்லையென்பார்.

கீர்த்தனம்-இ-ம்-ரூபகதாளம்.

பல்லவி,

தெரிசனங்கண்டோர்க்குமறுசென்ம மில்லை
வரிசையுடனம்பலவன்வாழுகின்ற தில்லை (தெரி)

சரணங்கள்.

இரவுபகலிடைவிடாதேகரச பத்தி
இன்பமுறுமானந்தம்பொங்கிவரும் நத்தி
பரவிவருமனருகிலணிமாதி சித்தி
பணிந்துவந்துசிற்றம்பலத்தைவலஞ் சுத்தி (தெரி)

சொர்ப்பனமென்றிவ்வுலகம்தோன்றிவரும் வேதம்
சொன்னதநீயென்றபடியாகும போதம்
அற்புதமிதங்கமொடுதாளவகை கீதம்
அனவரதந்திருநடனமாடிவரும் பாதம் (தெரி)

அல்லும்பகலோயாதுவடியார்கள் கோஷ்டி
அரகராவென்றமர்தபானமதைக் கூட்டி
தில்லைவாழந்தணர்கள்கைப்பிடித்துக் காட்டி
சிக்கெனவேதிரைதிறந்துபரவெளியைக் காட்டி (தெரி)

நஞ்சுண்டகண்டனுக்குக்கொன்றைமலர் சாற்றி
நல்லதிருச்சாந்தணியுமம்பிகையைப் போற்றி
குஞ்சிதபதந்தனதுமனதிலுற வெற்றிக்
கோபாலகிருஷ்ணன்தொழும்நடராச மூர்த்தி (தெரி)

வசனம்.

தனக்கு தெரிசனங்கொடுக்கஅம்பலவாணர்எப்போதுவருவாரோ
ன்று விசாரப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

எப்போவருவாரோ-எந்தன்கலிதீர-எப்போவருவாரோ

எப்போவருவாரோ எந்தன்கலிதீரச்
செப்பிபதில்லைச் சிதம்பரதேவர் (எப்போ)

கற்பருவம்வந்து நாதனைத்தேடும்
கற்பனைகள்முற்ற காட்சிதந்தாள (எப்போ)

அற்பசுகவாழ்விலானந்தங்கொண்டேன்
பொற்பதத்தைநக்கரணைன்பொன்னம்பலவாணன் (எப்போ

பாலகிருஷ்ணன்போற்றிப்பணிந்திடுமீசன்
மேலேகாதல்கொண்டேன்வெளிப்படக்காணேன் (எப்போ)

கீர்த்தனம்-இ-ம்-துக்கடா-ஆதிதாளம்.

வருவாரோ அருள்புரிவாரோ-எந்தன
மனதுசலிக்குதுநானென்னசெய்வேன்
அரகரசங்கரவம்பலவாணன்
ஆதரிக்காதிருப்பாரோஒருக்கால் (வருவாரோ)

வசனம்.

நான்சின்னசாதியானதால் வருவாரோ வாராரோவென்று சஞ்சலப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வாராமலிருப்பாரோ ஒருக்கால்-வருவாரோவறியேன்

பாராமலிருப்பேனோபதஞ்சலிமுனிக்கு
பாதங்கொடுத்தநேசநானென்று (வாராம)

கனவினில்வந்து சமுனிமுழுதும்நட்டு
மனதுமகிழ்ந்துயெனனைவாவென்றுசொன்னவர் (வாராம)

களங்கமறவேயவர்காலுக்குக்கும்பிட்டு
குளத்தங்கரையில்நின்றுகூப்பிடும்வேளையில் (வாராம)

அல்லலறுத்துப்பரமானந்தமேதருந்
தில்லைத்தலத்தைக்கண்டுதெரிசனம்பண்ணியும் (வாராம)

வசனம்.

இதுவரையில்வராதபடியினால்இனிமேல் தில்லைத்தலத்தைவிடாமல் சுத்திவந்து தேகத்தைத் தள்ளுவோமென்று நிச்சயம்பண்ணுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்வரக்காணிலேன் என்னசெய்குவேனவர் (இன்னம்)

இன்னம்வரக்காணிலேன் தில்லை பொன்னம்பலவாணன் பண்ணையும்
கட்டென்னையுமிங்கேவாவென்றுசொன்னவர்மறந்தாரோ (இன்னம்)

சொல்லும்பொருளுமிந்தசோதியேமகிழ்ந்துவாழும்
தில்லையைவிடாமற்சுற்றித்தேகத்தைமாற்றிக்கொள்வதுஅல்லது (இன்)

பாலகிருஷ்ணன்போற்றும்பாதசிலம்புகுலுங்கக்கோலமூடனடனங்
கண்டேன் குறைகள்தீர்ந்ததென்றுசொல்லவுந்தான் (இன்னம்)

---

வசனம்.

இப்படிசொல்லிக்கொண்டு கண்ணீர்சொரிந்து புரண்டழுவார்.

சிந்து.

கீழேபுரண்டழுவார்-ஒன்றுங்-கேள்விமுறையில்லையோநாதா
வென்றேதலை குனிந்தார்-எந்தன்-வேதனையைக்கண்டுஆதரிக்குந்
தெய்வங்கிடையாதோ-பாவி-சித்தந்தெளியவிரத்திதந்து
வாவென்றழையாதோ-விண்ணில்-வானவர்கள்போற்றமூனமிலா
கனகசபைநடனங்-கண்டு-காயங்களித்திடநாயடியேன்
வருந்தித்துதியேனோ-எந்தன்வாளுளுருகுதவினையே
அட்டாஇதென்னஜென்மம்.

வசனம்.

இப்படிபுரண்டழுது தான்படுகிற துன்பதைக்கண்டு ஆதரிக்கும் படியான தெய்வம் எங்குங்கிடையாதோவென்றும் இருந்தால்வந்து என்னை யாதரிக்காதாவென்றஎன்மனது குளிர ஒருவார்த்தைசொல்லாதா வென்றும் மேலாகியதேவர்கள் போற்றும்படியானவனே என்னுடைய தோத்திரத்துக்கிரங்கி வரக்கூடாதாவென்றும் உனது நடனசபைக்கு என்னையழைத்துப்போய்க்காட்டி என்னுடைய இழிவானகுலத்தைமாற்றக்கூடாதோவென்றும் இப்படிப் பற்பலவாறாகப்பணிந்து துன்ப சாகரத்திலாழ்ந்தார்.

விருத்தம்.

சாதிபேதமுங்குணங்குறியாவையுந்தள்ளி
ஆதியாகியிக்கூவினேன்றிசைதணிலணைந்தும்
மாதவம்புரிதொண்டர்கள்பணிதிரண்மறைக்கக்
கோதிலாதொருகொண்டிமிப்பாவிக்குக்குறையோ.

வசனம்.

இப்படி சரணாகதமென்று உன்னைநம்பிவந்து துன்பப்பட்லாமா சிவனே சிவனேயென்று பெருங்குரலிட்டு தனக்குச்செனனம்போதும் போதுமென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-

பல்லவி.

போதும்போதுமையா எடுத்தசென்மம்- போதும்போதுமையா.

அநுபல்லவி.

மாதவமாரனைவர்கள்புகழுந்தில்லை
வனத்திலனுதினமும் வளருமம்பலவாணா (போது)

சரணங்கள்.

கோத்துநெளியப்புழு ஊத்தைநரம்புகளும்
காத்தமலங்களூறு மூத்திரக்கும்பி (போது)

சந்ததமுமக்கடியேன் யெந்திரம்போலே
வந்தெழும்வகையிலும் நொந்துமிருக்தேன் (போது)

கொழுத்தவாணிகன்போலே யுருத்துமிரும்புமென்னை
வயிறறிலிருந்துபடும் வருத்தமென்சொல்வேன் (போது)

மாதர்கள்மீதினில் மயல்கொண்டேங்கினும்
வேதனைகொண்ட வெறும்பயலானேன் (போது)

அண்ணன்கோபால கிருஷ்ணன்பணியுந்திரு
வம்பலமேவும்பொன்னம்பலவாணா (போது)

---

வசனம்.

சென்மமேகஷ்டம் அதிலும் புலையனாகப்பிறப்பது மிகவும்கஷ்டம் என்று நந்தனார்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தஜென்மம்வேண்டா-மினி-எந்தஜென்மம்வந்தாலும்வரட்டும் (இந்)

நந்தினைவீனில்மந்திரங்கள்சொல்லி
வந்தனைகள்செய்துசிந்தைமகிழாத (இந்த)

வேதமறிந்தவர்பாதம்பணிந்தவர்
போதமடைந்திடாத்தீசடைந்தேன்பாவி (இந்த)

பாவிப்பறையாநீதூரவிலகென்று
ஆவிதவித்திடப்பாரிலுழைத்திடும் (இந்த)

கீர்த்தனம்-இ-ம்-ஆகிரி-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார் சிதம்பரத்-தெல்லைவலஞ்சுற்றினார்

அநுபல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார்தேவருமறியாத
எல்லைவாசற்கடந்திருளறவேணடி (தில்லை)

சரணங்கள்.

சாதிக்குறையைத்தானேசங்கதமுங்கினைந்து
வேதனைக்கொண்டுள்ளம்வெதும்பியேவாடி
பாதிப்பிறையணியும்பரமசிவனைக்கண்டு
போதமடைந்துபரிபூரணமாக (தில்லை)

மோகவலைக்குட்சிக்கிமுழுமூடனாகவே
போகயேசிலையென்றுபுத்திகெட்டேனே
பாகனைவேண்டிடல்பரவசமாகியே
ஏகரசத்திற்றன்னையிருத்திசுகிக்க (தில்லை)

ஓராறுதாண்டியேயுண்மணிக்கோட்டைகள்
சீராறுகாணாதசிதம்பரரகசியம்
ஈராறுகால்கொண்டு இருத்திப்புலன்றனையும்
பேராறுபெருகியபெருவெளிகாண (தில்லை)

வசனம்.

இப்படித் தில்லைத்தலத்தைவிடாமல் சுற்றிவந்தால் தன்னிட டமாய்வருவாரென்னும் மனதைப்பார்த்துச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

வருவார்வருவார்மனமே நீமயங்காதிருசொன்னேன் சொன்னேன்
வேணதுதருவார்கருணைபுரிவார்திருவம்பலவன்
பரகரியுந்தருவார்சாதிபறையனென்றுபாரார்நீயதை
உறுதிகொள்ளவேணும்மெய்யன்புடன்
அரகரவென்றொருதரஞ்சொன்னாலும்போதும் (வருவார்)

வசனம்.

தன்னை இரட்சிக்குஞ்சமையம்இதுதானென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தனசரி-ஆதிதாளம்.

பல்லவி.

இதுநல்லசமையமையா-ரட்சிக்க-இதுநல்லசமையமையா
இதுநல்லசமையமையாவென்னைரட்சித்தாளும்
ஈமகேசநடேசசபேசா (இதுநல்ல)

பாலகிருஷ்ணன்போற்றும்பதங்களைக்காட்டி
சீலமுள்ளமுத்திசேருவதற்கே (இதுநல்ல)

வசனம்.

இவ்வளவுசொல்லியும் இரங்காமல்போகவேண்டியதென்னவென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி.

இரக்கம்வராமற்போனதென்னகாரணம்சுவாமி

அநுபல்லவி.

கருணைக்கடலென்றுமெநதன்காதில்கேட்டுநம்பிவந்தேன் (இரக்க)

சரணங்கள்.

ஆலமருந்தியண்டருயிரையாதரித்தவுனதுகீர்த்தி
பாலகிருஷ்ணன்பாடித்தினமும்பணிநதிம்நடராசமூர்த்தி
பழியெத்தனைநான்செய்கினும்பாவித்திடுஞ்சிதம்பரமென்று
மொழிகற்றவர்வழிபெற்றவர்கனகசபாபதியிப்படி (இரக்க)

விருத்தம்.

அண்டமானதியாவையுமவேள்விகளனைத்தும்
குன்றிலாத்தவம்புண்ணியமாமலைகுவித்தும்

வின்றிடாமலேயீசன்றனக்களித்தவிவேகம்
மன்றுளாடியபாததிலேமனமவருமே.

---

வ ச ன ம்.

மகாபுண்ணியசாலிகளுக்கு முத்திவருமேயன்றி நாக்குவாராதென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தனூசரி-ஆதிதாளம்.

சாதியில்தாழ்ந்திடிப்புலேயனுக்கும்பர கதியோ-வேத
சாஸ்திரஞ்ஞ்சினுமோதறியாதது விதியோ
நண்டுகதைகளைவதைசெய்தருந்திய தேகம்-மன்றுள்
நடனதெரிசனங்காணவென்றாலதி மோகம்
எந்தவழியைக்கண்டேறுவது ஞாயம்-செக
தீசனுக்கன்றேதெறியுமந்தவு பாயம
சிதமபரம்போவேனென்றுரையாத பாவி-இந்த
ஜென்மமெடுத்துவீணாகத்தவிக்குதென் ஞவி

---

வ ச ன ம்.

இப்படிநான் ஈனசாதியாயிருந்தபோதிலும்உம்முடையசரணாரவிந்தத்தில்வைத்த புத்தியைமறந்தவனல்லவென்றுசொல்லுகிறார்.

துக்கடா- இ-ம்-மணிரொங்கு-ரூபகதாளம்.

பல்லவி.

எப்படிகெட்டாலுமுந்தன்பொற்பதமறவேன்காணும் (எப்படி)

அற்புதமாகியதில்லேயம்பலவாணரேநான்
சொற்பநத்திலுமையன்றிமெய்ப்பொருளாகவும்வேண்டேன் (எப்படி)

தப்பிதமெத்தனைசெய்கினும்
கைப்பிடித்தாண்டுகொளவும் (எப்படி)

---

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இவ்வண்ணமிரவுபகல்வலஞ்செய்தங்கெய்தரிய
வவ்வண்ணமகிளெந்தழிந்தவடித்தொண்டரயர்வெய்தி
மவ்வணணத்திருமிடற்றார்மன்றுளநடங்கும்பிடுவ
தெவ்வணணமெனநினைந்தேவேசாறிநெடுந்துயிலார்,

வசனம்.

இநதப்பிரகாரம இராப்பகலாகவலம்வந்துக்கொண்டேஉள்ளேபோகக்கூடாததன்மையைநினைத்து வருத்தப்பட்ட உயர்வுபொருந்திய அடியவர்வேசாறிகறியநிறமுளளகழுத்தினையுடையசுவாமி கனகசபையில் ஆடுகின்றகூததைஎப்படிதரிசிக்கலாமென்று விதனததோடெநித்திரை செய்வார இப்படி நித்திரைசெய்து மறுபடியும் எழுந்துசொலலுவார.

கிர்த்தனம்-இ-ம்-கன்னடபியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

விருதாச்சென்மமாச்சே வந்தும்-விருதாச்சென்மமாச்சே
சதாகாலமுமையன்சந்நிதானத்திலிருந்துநிதானம்பெறுமல்(விரு)

முத்தியளித்திடுமோதநிதியைக்கண்டு
பத்தியயப்பணணிபதமடையாமல் (விரு)

பொற்கழலசையப்பொதுவிலிருநது
தக்கவாடுநதன்னைப்பாராமல் (விரு)

தில்லைக்கதிபதிதெரிசனங்கொடுத்து
எல்லையில்லாவென்றிரங்கியழைத்தும் (விரு)

வசனம்.

தனதுபதவிக்கு யோக்கியமல்லவென்று தள்ளுவாரோ கொள்ளுவாரோ அப்படிதள்ளினாலும் தில்லையிலேதானே என்தேகத்தைவிடுவதேயன்றி திரும்பிப்போகமாட்டேனென்று சொல்லிப்புலம்புகிறார்.

கீர்த்தனம்- இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

தள்ளுவாரோ-எந்தனைக்-கொள்ளுவாரோ

தள்ளிவிட்டாலநான்போகேன்தனித்திருக்குஞ்சமயமல்ல
அள்ளிவிட்டேனனைபயேனடிபலவூணனைறுக்கால் (தள்)

எனதுனம்தன்றபிமானமிச்சையறும்நிஷ்டைபணணி
மனமிறந்தெதுவெளியில்மருகாதபாவியென்று (தள்)

நாறுமிநதபொயயுடலைநானெண்ணிநானஅமந்து
தூறுபட்டதுனபமெல்லாந்துலைநதுதென்றுஇங்கேவந்தும (தள்)

பாலகிருஷ்ணன்தேடிவரும்பாதமலர்நாள்காணேன
வேலுவிழியாளமோகவகொணடெயிர்ததிபற்றமூடனென்று (தள்)

### சிந்து.

அட்டா இதென்ன சென்மம்-என்று-அத்தனாறுமெல்லைசுற்றிவந்தார்
இரவுபகலோயார்-இசை-ஈசன்கண்டுவிசுவாசமுடன்
பாலகிருஷ்ணன்பணியும்-திருப் பாதமுள்ளத்திலேநாதனிவன்
கனவிலுருவாகி

---

### திருநாளைப்போவார்புராணம்.

### விருத்தம்

இன்னந்தருமிருபுறவியிதுதடையென்றேதாயில்வா
ரன்னிலையேயம்பலத்துளாடுவார்நிருத்தமுனி
மன்னுதிருத்தொண்டரவர்வருந்தியெல்லாந்தீர்ப்பதற்கு
முன்னணைந்துகனவின்கண்முறுவலொடுமருள்செய்வார்.

### வசனம்.

இப்படித் திருநாளைப்போவாரென்றும் நந்தனார் இரவுபகலோயாமல் தில்லைத்தலத்தைச் சுற்றிவருவதால் தேகவருத்தமடைந்து வருத்தத்தினால்மயங்கிச் சாய்ந்து நித்திரையடைந்தார் அந்தநித்திரையிலே நடராஜமூர்த்திவந்து காட்சிதந்துசொல்லுவார் எனக்குமிகவும்பிரியமுள்ளநந்தனாரே உமமிடத்தில் நம்முடையபத்தர்களாகிய வேதியர்களை வரச்சொல்லுவோம் அவர்கள்முன் நீர் அக்கினிப்பிரவேசமாகியெழுந்துமறைபடித்து வேதியர்களுடனே சபாபிரவேசம்பண்ணுமென்றுரை பகர்ந்து ஐயன் அந்தரத்தியானமானார் நந்தனார் கனவில் காட்சியானதைக்கண்டுகளித்து விழித்து தெளிந்து அளவில்லாத சந்தோஷங்கொண்டு நன்றியறிந்து சுவாமியைத் தோத்திரம்புரிந்துசொல்லுவார்.

### கீர்த்தனம்-இ-ம்-கண்டகம்-ஆதிதாளம்.

### பல்லவி.

சந்நிதிவரலாமோ-சாமி-தெரிசனந்தரலாமோ (சந்நிதி)

இல்லறவாழ்வாம பணிமூடி
இருந்தேனன்றோ மிகவாடி
அல்லும்பகலுங் கொண்டாடி
அறியேனனக சபைநாடி (சந்நிதி

வீதியிலேசற்றே வந்திருந்தேன்
வேடிக்கைபார்த்துக்கொண் டிருந்தேன்
சாதியிற்றாழ்ந்தவனென் றறிந்தேன்
தனிதநிருப்போமென்றிங்கே வந்தேன (ச

காலால்வீசிக்கனல் மூட்டி
கலைமதிமண்டலமே லோட்டி
பாலாறுபெருகவேயெனைக் கூட்டி
பார்த்ததுமில்லைநான் தோட்டி (சந்நிதி)

வசனம்.

நந்தனார்தான் கண்ட சொற்பனத்தைக்கொண்டாடுவார்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சொற்பனங்கண்டுகொண்டேன்-அதிசயமாச்
சொற்பனங்கண்டுகொண்டேன்

அநுபல்லவி.

சொற்பனங்கண்டுகொண்டேன்எல்லாங்கற்பனையென்றறிந்தேன்வேத
தற்பதவாக்கியமேவு நவாகியற்புதநடனம்புரியஇன்று (சொ)

சரணங்கள்.

அம்பிகைமணவாளன்மான்மழுவணிந்திடுஞ்செந்தோளன் செம்
பொன்னம்பலந்தனிலாடமத்தளம்போடமறைகள்பாடகொண்டாட()
மண்டலத்தோராசைதீர்ந்துமண்டபமணியோசை நேர்ந்து
மனதுகளித்துருகமறலிகருகவரந்தருகவருக (சொ)
மங்கையர்மோகமில்லாதாரையும்வருந்தியழைக்கும்பொல்லா தாகிய
மாயப்பிணியைவெல்லமருந்துசொல்லவழியிற்செல்லநல்ல (சொ)
பண்ணவர்முரசடிக்கபதஞ்சலிவிபாக்கிரமர்பதந்துதிக்கமாயன் கோ
பாலகிருஷ்ணன்களிக்கஉடுக்கைபெடுக்கஉலகந்துறக்கசிறக்க (சொ)

வசனம்.

நந்தனார் தான்கண்டகனவு நிசமோபொய்யோவென்று சந்தேகப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சூரியகாந்தம்-சாப்புதாளம்.

பல்லவி.

கனவோநினைவோ கண்டதுவிதேது
மனதிலுறுதிகொள்ளவழியொன்றுங்காணேன் (கனவோ)
நித்திரைதனிலொரு சித்தனுருவாய்வந்து
முத்திதருவேனென்று நத்திப்பேசினதுண்டு (கனவோ)
ஆருமிகழ்ந்துதள்ளும் நாயும்புலையனென்னை
வாருமபரமபதஞ்சேருமென்றழைத்தவர் (கனவோ)
கிட்டநெருங்கிவந்து தட்டியெழுப்பியொரு
வெட்டவெளியைக்காட்டி கட்டளையிட்டது (கனவோ)

வசனம்.

தான் கனவில்கண்டதுபோல சாமிவருவாரோ வாராரோவென்று சஞ்சலப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-சாமராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வருவாரோவரந்தருவாரோ-எந்தன்
மனதுசஞ்சலிக்குதையோ-எப்போ (வருவா)

திருவாரூநதென்புலியூர்திருச்சிற்றம்பலவாணன்
குருநாதனுகவநதுஎநதன் குறைதீரக்கக்கனவுகண்டேன்
இருவினைபபணிகளைக்கருவறுததிடுகிறேன்
பயப்படாதேயென்றுசொல்ல (வருவா)

மறையாலும்வழுத்தறியாமகிமைபெறுநடராஜன்
நறைபூறுஞ்சேவடியைநாடிநமபினவனல்லவோ
அநுதினஞ்சிவசிதமபரமெனற
வடிமையயன்றருளபிரிநதிடயிங்கே (வருவா)

பணிமார்புஞ்செஞ்சடையுமபாரக்கவெகுமயலானேன்
பணியுங்கோபாலகிருஷ்ணனிடமபரமதயாநிதியல்லவோ
பவக்கடலடிக்கடிபெருகுதுநிலைக்குமோ
மலைக்குதுகரையேற்ற (வருவா)

வசனம்.

நந்தனார்இப்படி அனேகவிதமாய்வருவாரோவாராரோ என்றுபல விதமாக் கொண்டாடுகிறார்

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இப்பிறவிபோய்நீங்கவெரியினிடைநீமூழ்கி
முப்புரிநூன்மாரபருடன்முனணைவாயென்மொழிந்த
வப்பரிசேர்தில்லைவாழந்தணர்க்குமெரியமைக்க
மெய்ப்பொருளானாருளியம்பலத்தேமேவினார்.

வசனம்.

நந்தனார் கனவிலேவந்து சொல்லியநடராஜமூர்த்தி தில்லைமூவாயிரம்பேர்கள கனவிலேசொலலுவார பத்தர்களேனக்குமிகவும் பிரியரு

ள்ளவருகிய திருநாளைப்போவாரென்னும் அழகாகியநாமத்தைக்கொண்
டேன் என்னைக் காணவேணுமென்று தன்னை காணிக்கைகொண்டுசோதியிற்
றழுந்தவனென்று மிகவுங்குழைந்துகொண்டு இங்கேவரலாகாதென்று
பயந்துகொண்டு என்னைத்தவிர மற்றதெல்லாம அனித்தியமென்று ப
த்தியணிக்கொண்டு முத்தியடைய வேணுமென்று தில்லையைச்சுற்
றிக்கொண்டு தெற்குகுளத்தங்கரையில்நின்றுஆடிப்பாடி ஆனந்தங்கொ
ண்டிருக்கிறார் அவரை என்னைப்போல் நினைத்து நீங்களெல்லோரும்
போய்அழைத்து வாருங்களென்றுசொல்லிசுவாமி மறைந்தார்இப்படிக்
கண்டகனவைமூவாயிரம்பேர்களும்பேரம்பலவாசல்வந்துஒருவர்க்கொ
ருவர்பேசிக்கொள்ளுவார்.

தரு-இ-ம்-சங்கராபரணம்-அட்தாளம்

கண்ணிகள்.

அதிசயமொன்றுகேளப்பாதீட்சதரே
யார்த்தராத்திரிப்போதி லென்ன-என்றன்
பரவசமாகத்துதிமருவுமம்பல
வாணன்கனவில்வந்தா ருன்னே
வாஸ்தவமெனக்குமிந்தவண்ணமாகக்கனவில்
வந்துரைத்தாரறிந்தேன் நாடி-வுத
யாஸ்தமயமாகுமுன்னவாருட்படிக்கு
வழைப்பதுத்தமவென்று ரோடி
அப்போதாங்குவந்தவப்பணுதீட்சதர்
ஆமாமிதுவுநிச் சயந்தான்-எங்கோன்
செப்பியசொற்படிச்செந்தீவளர்த்திடச்
செய்யவேண்டுமவ சியந்தான்
அவசியமென்கிறீர்காரியந்தெரியாமல்
ஆருக்கடுக்குமோர் புலையன்-சிறந்த
தவசிரேஷ்டர்சூழுந்தலத்தின்வருவதற்குத்
தலைபத்தோஅவன்வந்தா லலைவன்
பத்தியுள்ளவனேபரமனுக்குயிர்த்தோழன்
பதஞ்சலிபுலிப்பாதர் சாட்சி-சிவன்
சித்தத்தின்படிசெய்துசெனனக்கரைகட்டப்போம்
தெளிவீர்நீங்களிந்தச் சூட்சி
என்றாராங்குசிவசங்கரதீட்சதர்
இனமுந்தாமச மேதோ-நீச்சன்
ஒன்றுந்திருச்சந்நிதிக்குவருவ
தொருக்காலுங்கட்டுத் தகாதோ
சொல்லுமென்றாரவராமென்றுருங்கட்குச்
சித்தத்திலுள்ளசந் தேகம்-தெளிய

அல்லும்பகலுமோயாமலேசாஸ்திர
மாராய்பவற்குமனோற் சாகம்

தரும்படிபேசிச்சந்தேகந்தெளிவது
தங்கதென்றுரைத்த மொழியே-நம்பி

பெருங்கூட்டமாகவேகூடிச்சென்றாரவர்
பேதமறக்கொரு வழியே

வசனம்,

தில்லைமூவாயிரவர்கள் சாஸ்திரமார்க்களிடத்திற்சந்தேகந்தெளிதல்

விருத்தம்.

மறைக்கிழவரிவ்விதஞ்சென்றார்களாங்கே
மனுவிக்கியானிகளாசீர்வாதஞ்செய்து
வந்தகாரியமேதோவுரைப்பீரென்ன
மன்றுவளரவர்தங்கள்கனவிற்றோன்றி
முறைந்தையிப்புலைச்சாதிவந்துதித்தோன்
கோதிலானந்தனென்போனவனல்லன்பன்
கூறுமிவ்வூரெல்லைவலம்வருவான்நாளை
கொணர்ந்தவனைத்தீமூழ்கச்செயதேஅப்பால்
முறைமையொடுசந்நிதியில்நம்முன்னுக
விடுங்களென்றுவருளிச்செய்தவர்மறைந்தார்
ஆதுணர்ந்தோர்க்கிதுதெரியச்சொல்லவந்தோம்
மொழியுமாதுத்தரம்யாதென்றார்நீதி
அறிந்தவன்றோராமந்தப்படிக்கேசெய்வ
தழகாகுமென்றனர்பின்மகிழ்ச்சியாலே
அந்தத்தில்லைமாநகரத்தெல்லைசுற்றி
யாடுவார்நந்தனைத்தேடுவாரே,

திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

தம்பெருமான்பணிகேட்டதவமறையோரெல்லாரு
மம்பலவர்திருவாயின்முன்பட்சமுடனீண்டி
யெம்பெருமானருள்செய்தபணிசெய்வோமென்றேத்தி
தம்பரிவுபெருகவருந்திருத்தொண்டர்பாற்சார்ந்தார்.

வசனம்.

தமதுபிரானாகிய சபாநாதரிட்ட கட்டளையைக்கேட்டதவம்பொ
ருந்தியபிராமணர்களெல்லாரும்அம்பலவாணரதுகோயிற்றிருவாசலி

ன்முன்புகூடி பயத்தோடுநம்முடைய ஆண்டவரருள்செய்தபடியத்தைச்செய்வோமென்றுவணங்கிஅன்புமேற்பட்டுஇருக்கும்திருநாளைப்போவாரைத்தில்லைமூவாயிரவர்கள்தேடவருகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை- ஆதிதாளம்.

பல்லவி. (மே

தொண்டரைக்காண்கிலமே-தில்லையில்வந்த தொண்டரைக் காண்கில

அண்டசராசரமெங்கும்படியளந்து
மன்றுளாடியமன்னவர்க்கடிமை (தொண்ட)

சொல்லும்பொருளுமற்றுச்சோதிமயங்கொண்
டல்லும்பகலுமற்றம்பலவாணன் (தொண்ட)

அஷ்டதிசையும்பரிபூரணமாகவே
மட்டில்லாதவளர்ந்தோங்கியநாதன் (தொண்ட)

வாசியடங்கிநடுவேனவழிகண்டால்
தேசிகவடிவுடன்தெரிசனந்தருவார் (தொண்ட)

பாலகிருஷணன்பணிந்தேத்தியபாதன்
கோலச்சிலம்பணியுங்குண்டலநாதன் (தொண்ட)

கீர்த்தனம்-இ-ம்-இந்துஸ்தான்-ரூபகதாளம்.

பல்லவி,

திருநாளைப்போவார்தெரிசனங்காணத்
தில்லைமூவாயிரமுனிவர்கள்வருகிறார் (திருநாளை)

பத்திவெள்ளமதுகரைபுரண்டோடும்
பரமானந்தக்கடல்முழுக்காட்டும் (திருநாளை)

அரகரசங்கரசிவனென்றுசொல்லும்
அநித்தியசடதுக்கமாயத்தைவெல்லும் (திருநாளை)

அடியவரேமெத்தப்பெரியவரென்று
அம்பலவாணரருள்விடைகொண்டு (திருநாளை)

இதுவுமதுசிந்து.

பதம்-இ-ம்-சௌராஷ்டிகம்- ஆதிதாளம்,

பல்லவி,

தேடித்தேடித்திரிந்தார் பாரும் நந்தனர்தம்மைத்
தில்லைமூவாயிரவா பாரும்

அநுபல்லவி,

நாடுஞ்சதுர்வேதப்பிர காசனை
நங்கைசிவகாமிப்பிரா ணேசனை
ஆடும்பதனடன சபேசனை
ஆவலாகத்தொழுதேவரும் நேசனைத் (தேடி)

சரணங்கள்.

தண்டாமரைமலர்த் தடமும்-மாதர்களாடிக்
கொண்டானடித்திடு மிடமும்-அன்னமளிக்க
உண்டானந்தங்கூறு படமும்-சோரர்மறவச்
சண்டாளர்வாழுங்கா டிடமும்-அன்றிச் சூத்திரச்
சாதிமுதலாணபல வாடை-ஆம்பலலர்ந்து
ஓதிமுலாவிவரு மேடை-மனுவிக்கியான
நீதியுணர்ந்தோர்கள் மாடை-இன்னமும்பல
மாதிரிகளாகுந்திண்ணை மேடை-உன்னதமாகக்

கொங்குமிகுத்தருவெங்குமணத்திடுஞ் சோலை-கருப்பஞ்சோலை
தங்குமுயர்ந்துகதித்திடும்வாழையின் சோலை-தாழையின்சோலை
தெங்குமிலும்பையுமொன்றுபொருந்திய சோலை-மாவினச்சோலை
துங்கமதானபலாக்கமுகோங்கிய சோலை-மற்றுள்ளசோலை
எங்குஞ்சுற்றிப்பார்த்துமறையோர்கள் தங்களதங்களங்க மேங்க

நதியிதழும்,

பொங்கரவணிந்தசிவசங்கரன்கிருபையிதென்றே யோங்க

கூக்குறலிட்டுச்

சங்கையறச்சென்னியிற்கரங்களைக்குவித்தெங்களைத் தாங்க

மனமுவந்து

இங்கேயெங்கள்பக்கினிலிருந்துமேழைகள்வருத்தம் நீங்க

கிருபை செய்தற்கு

உன்னதேகடனென்றுஉகந்துக்கொண் டாடி
உரியவேதமந்திராதிகள் பாடி
முன்னஞ்சொன்னநந்தனார்வா நாடி
மூணுங்கோடைக்காற்றெனவிரைந் தோடி

தேடித்தேடித்

வசனம்,

இந்தப்பிரகாரம்தில்லைமூவாயிரவர்களுந்தேடி அலுத்துப்போய் திருவீதியிலேயாவருங்கூடி சுவாமியைத் துதிசெய்கிறதென்று நிச்சயஞ் செய்து தோத்திரஞ்செய்கின்றார்.

தரு-இ௰ம்-கல்யாணி-அடதாளம்.

பல்லவி.

உன்னதுமகிமையை யொருவரறிவார்களோ
உலகிலுள்ளோரையனே

அநுபல்லவி,

பன்னகசயனனும்பதுமாசனவேதனும்
பார்க்கவர்க்குமெட்டாத யோகனே
பகரரியமலைமகளோர் பாகனே(உன்ன)

சரணங்கள்.

கனவினிலேவந்தெங்களுக்குச்சொன்ன வந்த
காரணமறிந்ததிகாலையிலேயெ ழுந்த
இனத்தார்நாங்கள்யாருமிசைந்தொருமித் திந்த
எல்லைமுழுதுந்தேடியிளைத்தோமெங்களுக் கந்த
இணையில்லாதநந்தனரு மகப்பட
இல்லையென்னசெய்வோம் ஸ்திரப்பட(உன்னது)

அடையலர்திரிபுரமனலாகவே முடித்த
வன்பாகமான்மழுவுங்கையிலே பிடித்த
விடைப்பாகனேகாளி வெட்கும்படி நடித்த
மெய்யாதுயர்தவிர்த்தாளேயாவென்றே படித்த
வாறுநீயறிந் தருளசெய் ஐயனே
வனசனிகர்பத சரணத துய்யனே(உன்னது)

அன்னைசிவகாமி யனுதினம்வளர் தில்லை
யம்பொன்னகர்வருவோர் காங்கொருதுய ரில்லை
உன்னையன்றியுலகத் துட்பொருளு மில்லை
யுத்தமனேயெங்கட் குரியதுணையு மில்லை
ஓதுநந்தனர் தம்மைவரச் செய்யும்
ஊழ்வினைதவிர்த்தவர்க்குவருட் செய்யும்(உன்னது)

வசனம்.

இவ்விதமாகச் சுவாமியைத்துதித்துத் தில்லைமூவாயிரவாகளனை வரும் நந்தனைத்தேடியலுத்துவருமார்க்கத்தில்ஒதுப்புறமாகநின்று க்கொண்டிருந்த நந்தனர் வேதியர்களைக்கண்டுதூரவிலகிநின்றுதலைவ ணங்கிச்சொல்லுவார்.

விருத்தம்.

திட்டமுடனடிபணிந்துமனமொடுங்கித தவம்புரியுந்தில்லைமன்று
ளட்டமிடுநடராஜன்கனவின்கண் சொன்னமொழிநம்பிக்கொண்டு

இட்டமுடன்றிருநாளைப்போவாரிடம் வேதியர்களேதும்போது
கிட்டிநெருங்காதேயுமென்றேவிலகி யோர்வார்த்தைகேளீரென்றார்,

கீர்த்தனம்-இ-ம்-செங்கலா- ரூபகதாளம்,

பல்லவி.

கிட்டநெருங்கிவருகாதேயுஞ் சாமிகாதில்
கெட்டபேர்க்குப்பாவம்வருமெனது சென்மபூமி (கிட்ட)

சிட்டர்புகழுந்தில்லைதன்னில் செழித்துவாழும்வேதியர்கள்
இஷ்டமிதுவல்லவேயென்று சொல்லவேணுமோபுலையன் (கிட்ட)

உலகினில்கடைச்சாதியெந்தனுக்குவமையாருமில்லையே
பலவிததுஷ்கருமஞ்செய்துபாரில்வந்த புலையன் (கிட்ட)

வேலைசெய்துடம்புவளர்க்கவேணுமிந்தநாயடியேன்
தோலுமெலும்புமிரும்புமுதுகில்சுமந்துவலையும்புலையனையே (கிட்ட)

செத்தமாடிழுப்பதெனதுசேவகப்பரம்படித்துமெல்லை
சுத்திவந்துதமுக்கடித்துச்சுடலைகாக்கும்புலையனையே (கிட்ட)

வசனம்,

இப்படி வணங்கிச்சொல்லிய திருநாளைப் போவானைப் பார்த்து வேதியர்கள் சொல்லுவார்கள்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்,

பல்லவி,

சாதியிலுயர்ந்தாலென்ன-இந்தப்-பேரும்பெருமையில்லையே
சாதிபெருமைகொண்டதாலே சங்கரனருகில்வந்து
ஆதரவுடன்வரங்களீய்ந்து அழைப்பாரோபார்ப்பாரோ சேர்ப்பாரோ
அளிபெருக்கவேயீசன்கழலையறிவிலுன்னி யடிபணிந்து
தெளிந்திடாதபேரைமுத்திதேடுமோநாடுமோகூடுமோ (சாதி)

வசனம்,

இப்படிச்சொல்லியபின் தாங்கள்வந்தகாரியம் பேசுவார்.

திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

ஐயரேயம்பலவரருளாலிப்பொழுதணைந்தோம்
வெய்யவழலமைத்துமக்குத் தரவேண்டியெனவிளம்ப
நையுமனத்திருத்தொண்டர் நானுய்ந்தேனெனத்தொழுதார்
தெய்வமறைமுனிவர்களுந் தீயமைத்தமடிமொழிந்தார்.

வசனம்.

ஐயரே நடேசருடைய கட்டளையால் இப்போது வெவ்வியதாகிய அக்கினியை மூட்டிஉமக்கு அதில்முழுகும்படி கொடுக்கவந்தோம்

ன்றுசொல்ல இளகியமனதையுடைய திருநாளைப்போவார் அடியேன் கடைத்தேறினேனென்றுஅவர்களைத் தொழுதார்தெய்வீகமாகியவேதத்தையுணர்ந்த பிராமணர்களும் நீவளர்த்திடுமென்று சொல்லநந்தனார்கேட்டு சந்தோஷமடைந்து நானின்றைக்குத்தான் முத்தனானேனென்று வேதியர்களைப் பார்த்துச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

கண்டேன்கலிதீர்ந்தேன்பவக்கடல்கரையேறிவந்தேன்வந்தேன் (கண்)

சோதிமறைமுடியுஞ்சொல்லிரந்திடுமீசன்
பாதம்பணிவிடைசெய் பாக்கியவானும்மைக் (கண்)

எல்லையைக்காணுமுன்னே யிருள்விலகுமுங்கள்
சொல்லைக்கேட்குமுன்னே துன்பங்கள்தீர்ந்திடக் (கண்)

கள்ளங்கருகச்செயுங் கண்ணுதலையுங்கள
உள்ளங்குடியாய்க்கொண் டாருங்கள்தெரிசனம் (கண்)

வசனம்.

நந்தனார் நான்சின்னசாதியாயிருந்தபோதிலும் தெய்வமிரங்கிற்றென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம-தனாசரி-ஆதிதாளம்.

எனக்குமிரங்கிற்றேநான்மெத்த ஏழைசாதியல்லோ
தனக்குள்தானாயிருந்தசிலப்பிரபஞ்சமுந்
தன்னுளடக்கியபொன்னம்பலவன்கிருபை (எனக்கு)

அல்லும்பகலுமருந்தவஞ்செய்கிலு
மறியாரொருவருமம்பலத்தெய்வம் (எனக்கு)

நான்மறைமுடிவும்நானறியேனென்
றோதியவுண்மையுலகமறிய (எனக்கு)

வசனம்.

நந்தனார் என்னதவம் செய்தேனோ இவ்வுலகின்கண் யாருக்கும் கிடைக்காதபாக்கியம் கிடைத்ததென்றுசொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம-ஆகிரி-ரூபகதாளம்.

அம்பலவாணனைத்தென்பலி யூரனைநம்பிப்பணிந்தேனோ
அர்ச்சனிசெய்துகும்பிட்டிருந் தேனோ

தில்லைப்பதியில்வந்துஎல்லைகடந்தேனென்று
அல்லலறுத்தேனோசஞ்சிதவினையெல்லாம்வெறுத் தேனோ

தாண்டவமாடின ஆண்டவன்சேவடி
வேண்டித்துதித்தேனோமுக்குணங்களைத்தாண்டிக்கதித் தேனோ

உந்தனுனதென்றெந்தவேளையுமாயுஞ்
சிந்தைநழுவிற்ருேசேர்ந்தவனென்றுதந்தைதழு விற்ருே

தெள்ளுதமிழ்ப்பாடியுள்ளமுழுகியுள்ளில்
கள்ளங்கருகிற்ருேகருத்திலெட்டாவெள்ளம்பெரு கிற்ருே

ஆசைவலையைப்போட்டுமோசப்படுத்துஞ்சீவ
பாசங்குலைந்தாரோ அளவிடாதக்லேசந்தொலைத் தாரோ

பெண்ணுரிடுமாலுக்கொண்ணுதெனச்சடைத்
தண்ணுத்தனைத்தாரோ கருணைபொங்குங்கண்ணுலனைத் தாரோ

அடுத்துவந்தவனென்று பிடித்தபேய்களையோட்டி
தடுத்தாளக்கொண்டாரோபரமபதங்கொடுத்தாளக்கண் டாரோ

திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

மறையவர்கண்மொழிந்ததற்பின்றென்றிசையின்மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சுந்திருவாயின்முன்னுகப்பிஞ்ஞகர்தன்
நிறையருளான்மறையவர்களிணருப்பமைத்தகுழியெய்தி
யிறையவர்தாள்மனங்கொண்டே யெரிசூழவலங்கொண்டார்,

வசனம்.


அப்படிப் பிராமணர்கள் சொல்லினபின்பு தென் திசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனுனது தவழ்ந்து போகும்படி உயர்ந்திருக்குநதிருக்கோ புரவாசலுக்கு முன்னே சுவாமியின் நிறைந்தகிருபையோடுகூடியகட்டளையால் வளர்ந்திருக்கின்ற நெருப்பின் குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனதில் தியானித்து அக்கினியைச்சுற்றி வலமாகவந்தார்.


இதுவுமது-விருத்தம்.

கைதொழுதுநடமாடுங்கழலுன்னியழல்புக்கார்
எய்தியவப்பொழுதின்கணெரியின்கணிம்மாயப்
பொய்தகையுமுருவொழித்துப் புண்ணியராய்முனிவடிவாய்
மெய்திகழ்முந்நூல்விளங்க வேணிமுடிகொண்டெழுந்தார்,

வசனம்.

கையினுற் கும்பிட்டு நடனஞ்செய்கின்ற நடேசரது திருப்பாதங்களைமனதில் உறுதியாகநினைத்து அக்கினியில் புகுந்தார்அப்படிச்செய்தபோது அந்தநெருப்பில் இந்தவுலக சம்பந்தமாகிய நிலையில்லாத உடலத்தை யொழித்துப் புண்ணியஞ்செய்கின்ற பெருமைபொருந்திய பிராமணமுனியின் வடிவாய்த் தேகத்தில் பூநூல்விளங்கச் சடைமுடியோடும்எழுந்தார்





கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

யாகோற்பவமானர்-நந்தனர்-அரனருளால்
யாகோற்பவமானர்

அநுபல்லவி.

யோகமாதவரும் போகவாழ்வினரும்
வேகமாகவினை வாகவந்துதொழ (யாகோ)

சரணங்கள்.

சிவனுரைத்த வாக்கியம்-சித்தத்திலெண்ணி
சிறந்தேமிக சிலாக்கியம்
தவருவனேக பாக்கியம்-பொருந்தவேடம்
தன்னைக்கொண்டதே யோக்கியம்
தபனனேவியர் கவனமேவிருவரு
மெவருங்காந்தருவ ரெவருங்கண்டுதொழ (யாகோ)

கையைச்சிரமேற் பதித்து-சிவனேயென்று
கனகசபையைத் துதித்து
செய்யகுண்டத்திற் குதித்து-கதிரவன்போற்
செனித்தராத்திரிலே நடந்து
சித்தியாகிபத முற்றும்பாம்புபுலி
பத்தியாய்த்தொழும் பதத்தைக்கண்டுதொழ (யாகோ)

காதிற்குண்டல மிலங்க-முப்புரிநூலுங்
கதித்தமார்பிடை மலங்க
ஓதுஞ்சடைகள் துலங்க-அவனைவிட்டு
ஓடியேவினை கலங்க
ஏதமற்றசதுர் வேதமோதிவரும்
நீதவேதியர்கள் பேதமின்றிதொழ (யாகோ)

---

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

செந்தீமேலெழும்போதுசெய்யமலர்மேல்வந்தெழுந்த
அந்தணன்போற்றோன்றினாரந்தரதுந்துபிநாதம
வந்தெழுந்ததிருவீசுப்பில்வானவர்கண்மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந்தாரத்தின்பனிமலர்மாரிகள்பொழிந்தார்.

வசனம்.

சிவந்தநெருப்பில் நின்றும் எழுந்தபொழுது செந்தாமரைப் புஷ்ப
த்தின்மேல் உதயமாயெழுந்தருளிய பிர்மாவைப்போலேபிரகாசித்தார்

பெருமைபொருந்திய ஆகாசத்தில் அந்தரதுந்துபியின் சேர்விட்டமானது உண்டாயிற்று தேவர்கள சந்தோஷமாய் ஆரவாரித்து அழகாயிருக்கின்ற கற்பகவிருட்சத்தின குளிர்ச்சிபொருந்திய மலர்களைவருஷமாகச்சொரிந்தார்கள்.

இதுவுமது-விருத்தம்.

திருவுடையதில்லைவாழ்ந்தணர்கள்கைதொழுதார்
பரவரியதொண்டர்களும்பணிந்துமனங்களிபயின்றார்
அருமறைசூழ்திருமன்றுளாடுகின்றகழல்வணங்க
வருகின்றார்திருநாளைப்போவாராமறைமுனிவர்

வசனம்.

ஞானசம்பத்தையுடைய தில்லையில்வாழும் பிராமணர்கள்கைகூப்பினார்களபரவுதற்கரிய மற்றைச்சிவபததர்களுந்தொழுது மனதில்களிப்படைந்தார்கள் வேதங்களசூழுங்குகின்றகனகசபையில் ஆடுகின்றபாதத்தை வணங்கும்பொருட்டுத திருநாளைப்போவாராகியஒருவேதமுனிவர் வருகையிலானந்தத்தாண்டவத்தை வருணித்துச்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

தாதெய்தெய்தெய்யென்றாடுவார்-அவர்
தத்தித்தெய்தத்தித்தெய்யென்றாடுவார்.

ஆதிபராபரமாகியசித்து
வானந்தங்கொண்டொருகாலையெடுத்துத் (தாதெய்)

அண்டசராசரமெங்குமநடுங்க
ஆதிசேடனார்முடிகணெருங்க (தாதெய்)

சீலம்பொருந்தியமுனிவர்கொண்டாட
திங்களைச்சூடியசெஞ்சடையாட (தாதெய்)

பார்புகழுந்தில்லைச்சிதம்பரநாதன்
பாலகிருஷ்ணன்பணிந்தேற்றியபாதன் (தாதெய்)

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

குஞ்சிதபாதத்தைத்தாரும்-மனச்சஞ்சலபாவத்தைத்தீரும்.

அநுபல்லவி.

செஞ்சிலம்பசைய கனகசபைதனில்
ஜெணுததககஜெணுதத்திமி திமிதத்தோமென்றாடிய(குஞ்சி)

சரணங்கள்.

நெஞ்சிற்கவலையை யாற்றும்-இந்த
வஞ்சப்பிறவியை மாற்றும்-நாளும்
கஞ்சிசிவகாம வல்லிமகிழ்ந்திடும்
தஜஜெஜம்தக ஜெமதரிகிட-தககிடதோ மென்றாடிய(குஞ்சித)

சரணமென்றிங்கோனான் வந்தேன்-ஜனன
மரணதிலைல்மிக நொந்தேன்-அந்தக்
கரணக்கல்மிஷங்கள் போக்கியேகாத்திடும்
இந்திரர்வானவர்மாமுனி வந்துநிதந்துதிசெயதிடும்(குஞ்சித)

பாலகிருஷ்ணன்தொழும் பாதா-முத்தி
நால்வாக்குதவிய நாதா-எந்தன்
மேலேகிருபைசெய்து வெற்றியணிந்திடும்
அத்தனேகாத்தனேசுத்தனேயித்தனேநிர்த்தனஞ்செய்திடும்()

கீர்த்தனம்-இ-ம-யமுனாகல்யாணி அட-தாளம்.

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார்-அம்பலந்தனிலே-பொன்னம்பலந்தனிலே

அநுபல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார் அயனுமாலும்பாடினா
அந்தரங்கமாகசிந்தித்துபோக்கருள
தந்தோநதந்தோமென்றுதொந்தோந்தொந்தோமென்று(ஆன)

சரணங்கள்,

பதஞ்சலியா முனியைநோக்கிப்
பார்த்தபேர்கள் குறையைப்போக்கி
இதமகிதமென் றறிவைநீக்கி
ஏகமாகக் காலைத்தூக்கி(ஆனந்)

மத்தளதாள மதிரமுழங்க
வளரும்பிரமத கணங்களிலங்க
தத்திமிதக்கிட தோமென்றிலங்க
சபையுந்துலங்கச் சதங்கைகுலுங்க(ஆனந்)

பாலகிருஷ்ணன் பணியும்பாதன்
பார்த்தபேர்கள் வரப்பிரசாதன
ஞாலம்புகழுஞ் சிலபோதன்
சுந்தராதுதன் அம்பிகைநாதன்(ஆனந்)

வசனம்.

இப்படியாடிய தாண்டவதரிசனங்கொடுக்க இன்றைக்குத்தான்சித்தமிரங்கிற்றோவென்று சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

சித்தமிரங்கிற்றோ-யானமுன்-செய்ததவமுந்திறந்தோ
அத்தாபரிசுத்தாவுனுடல்காணவந்தேன
என்னையாண்டுக்கொள-இதுவேசமயமுன்-னுடல்காணவந்தேன்
சாதிமுறைமைபோக்கும-என்னைச-சதுர்மறையவராக்கும
போதாதில்லைநாதா-வுன்னுடல்காணவந்தேன
என்னையாண்டுகொள - இதுவேசமயமுன்னுடல்காணவந்தேன்

பாலகிருஷ்ணன்போற்றும்-பாதா-பதஞ்சலியாரேற்றுந்
சீலாதிரிசூலாவுன்றுடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள் இதுவேசமயமுன்றுடல்காணவந்தேன்.

சிந்து.

கனவிலுருவாகி-வந்து- காட்சிகொடுத்துக் கடாட்சித்தபின்-எரியினிடைமூழ்கி-வெகு- இன்பம்பெருகியவன்பருடன், வேதமுனிவடிவாய்த்-தில்லை- வேதியர்கைதொழுதாதரவாய், அங்கம்புளகிதமாய்ச்-செம்பொன்.

வசனம்.

திருநாளைப்போவாராகிய முனிவர் அக்கினியில் முளித்தெழுந்து கனகசபையில்வந்து மனமுருகி ஆனந்தம்பெருகி எம்மாண்டவராகிய நடேசமூர்த்தியைத் தோத்திரஞ்செய்கின்றது.

தேவாரம்.

பாளையுடைக்கமுகோங்கிப் பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறி வாழ்வயற்றில்லைதன்னு
ளாளையுடைக்கழற்சிற் றம்பலத்தாடல்கண்டால் [னே
பீளையுடைக்கண்களாற் பின்னைப் பேய்தொண்டர்காண்பதென்

பொருவிடையொன்றுடைப் புண்ணியமூர்த்திபுலியதள
னுருவுடையன்மலை மங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர் வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்ட கண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

தொடுத்தமலரொடு தூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுது
மடுத்துவணங்கு மயனொடுமாலுக்குங்காணபரியான்
பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவ
னுடுத்ததுகில்கண்ட கண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

வைச்சப்பொருணமக் காகுமென்றெண்ணிநமச்சிவ
வச்சமொழிந்தே னணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலி பேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற் பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

செய்ஞ்ஞின்றநீல மலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மஞ்ஞின்றவொண்கண் மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெஞ்ஞின்றெரியும் விளக்கொத்தநீலமணிமிடற்றான் [னே
செஞ்ஞின்றவாடல்கண்டாற் பின்னைக்கண்கொண்டுகாண்பதென்

ஊனத்தைநீக்கி யுலகறியவென்னையாட்கொண்டவன்
தேனொத்தெனக்கினி யான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்ய வன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு
மேனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே

தெரிக்கக்கணையாற் றிரிபுரமூன் றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவ னிமையவர்கோமானிணையடிக
டரித்தமனத்தவர் வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்ட கண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே,

தருக்கமிகுந்தரக்கன் றோள்வலியுன்னிக்கடவரையை
வளைக்கைகளாலெடுத் தார்ப்பமலைமகள்கோன்சிரித்து
வரக்கணையணிமுடி பத்துமணிதில்லையம்பலவ
னெருக்கிமிதித்த விரல்கண்டகண்கொண்டுகாண்பதென்னே.

வேற்றாகிவிண்ணாகி நின்றாய்போற்றி மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி, யூற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி யோவாதசத்தத்தொலியேபோற்றி, யாற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றி யாறங்கநால்வேதமானாய்போற்றி, காற்றாகியெங்குங் கலந்தாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

சுற்றுமமரர் சுரர்பதிநின் றிருப்பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப்பரவையுணஞ்சையுண்டாய்
செற்றங்கனங்களைத் தீவிழித்தான் றில்லையம்பலவன்
நெற்றியிற்கண்கண்ட கண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே

சித்தத்தெழுந்த செழுங்கமலத்தன்ன சேவடிகள
வைத்தமனத்தவர் வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவனை
முத்துமவயிரமு மாணிக்ககந்தன் னுள்ளடங்கிய தூஉ
மத்தமலர்கண்ட கண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி பிறவியறுக்கும்பிரானேபோற்றி, வைச்சாடலென்றுமுகந்தாய்போற்றி மருவியென்சிந்தை புகுந்தாய்போற்றி, பொச்சார்புரமூன்று மெரித்தாய்போற்றி போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கச்சாகநாகமசைத்தாய்போற்றி கையிலைமலையானேபோற்றிபோற்றி.

மருவார்புரமூன்று மெரித்தாய்போற்றி மருவியென்சிந்தை புகுந்தாய்போற்றி, யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றி யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி, திருவாகிநின்றதிறமேபோற்றி தேசமபரவப்படுவாய்போற்றி, கருவாகியோடும்முகிலேபோற்றிகைலைமலையானேபோற்றிபோற்றி.

வானத்தார்போற்று மருந்தேபோற்றி வந்தென்றன்சிந்தை புகுந்தாய்போற்றி, யூனத்தைநீக்குமுடலேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி, தேனத்தைவார்த்த தெளிவேபோற்றி தேவர்க்குந்தேவனாய்நின்றாய்போற்றி, கானத்திலாட லுகந்தாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

ஊராகிநின்றவுலகேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி பேராகியெங்குமபரந்தாயபோற்றி பேராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி, நீராவியானசிழலேபோற்றி நேர்வாரொருவரையுமில்லாய்போற்றி காராகிநின்றமுகிலேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி

சிவனுருவாயச்சென்று திரண்டாய்போற்றி தேவரறியாத்தேவே போற்றி, புலனுயிர்க்குமபூங்கழிபுணர்ந்தாய்போற்றிபோகாதென்சிந்தை புகுந்தாய்போற்றி, பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய்போற்றி, பற்றியுலகைவிடாதாய்போற்றி, கல்லுயிராயநின்றகனலேபோற்றிகைலைமலையானேபோற்றிபோற்றி.

பணலினிசையாகி நின்றாய்போற்றி பாவிப்பார்பாவமறுப்பாய் போற்றி, யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி யென்சிந்தைநீங்காவிறைவர்போற்றி, விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி மேலவாக்குமேலாகிநின்றாய்போற்றி, கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

இம்மையாயிராயிருந்தாய்போற்றியென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி யுமைபாகமாகக்கலந்தாய்போற்றி யூழியேழானவொருவாபோற்றி யமையாருநெஞ்சமமர்ந்தாயபோற்றி யாதிபுராணனாய்நின்றாய்போற்றி கமையாகிநின்றகனலேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

மூவாய்ப்பிறவாயிறையாயபோற்றிமுன்னமேதோன்றிமுளைத்தாய் போற்றி, தேவாதிதேவர்தொழுந்தேவேபோற்றி சென்றேறியெங்கும் பரந்தாயபோற்றி, யாவாயடியேனுக்கெல்லாமபோற்றி யல்லல்நலியவலைந்தேன்போற்றி, காவாயகனகதிரளேபோற்றி கைலைமலையானேபோற்றிபோற்றி.

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி நீளவுலகமுடையாய்போற்றி, யடிமுடியுமில்லாய்போற்றி யங்கொன்றறியாமைநின்றாய்போற்றி, கொடியவன் கூற்றமுதைத்தாய்போற்றி கோயிலாயென்சிந்தைகொண்டாய்போற்றி, கடியவுருவமொடு மினனேபோற்றி கைலைமலையானே போற்றிபோற்றி.

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி யோதாதேவேதமுணர்ந்தாய் போற்றி, எண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றியிறைவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி, பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி, கண்ணாயுலகுக்கு நின்றாயபோற்றிகைலைமலையானேபோற்றிபோற்றி.

சிந்து.

அம்பலமேவியசம்பிரமத்தைக்-கண்டாரறிந்திலரால்

## திருநாளைப்போவார்புராணம்.

### விருத்தம்.

தில்லைவாழந்தணருமுடன்செல்லச்சென்றெய்தக்
கொல்லைமான்மறிக்கரத்தார்கோபுரத்தைத்தொழுதிறைஞ்சி
ஒல்லைபோயுட்புக்காருலகுய்யநடமாடும்
எல்லையினைத்தலைப்பட்டாரியாவர்களுங்கண்டிலரால்.

### வசனம்

சைவபுராணமாகிய பெரியபுராணத்தில் திருநாளைப்போவார் நாயனொன்று மியற்பெயர்சேக்கிழார் சுவாமிகள்சொல்லியிருப்பதா லிடையில்நந்தமாமுனியென்று வழங்குகின்ற நாளைப்போவார்தில்லை மூவாயிரமுனிவர்களோடேகூட பொன்னம்பலம்வந்தார் அதற்கப்பாலவரைக் கண்டபேர்களில்லையென்று பெரியபுராணம் பாடியருளிய சேக்கிழார்சுவாமிகள்சொன்னது அந்தத்திருநாளைப்போவாரென்னு முனியானவர் புரட்டாசிமாதம் உரோகணிநட்சத்திரத்தில் கனகசபையில்வந்து கற்பூரசோதியைப்போல்தோன்றிய சிவசாரூப்பியத்தை யடைந்தாரென்று உபமன்னியமகாரிஷி புண்ணியபத்தர் விலாசத்திலேயும் சொல்லப்பட்டிருக்கின்றது.

### இதுவுமது-விருத்தம்.

அந்தணர்களதிசயித்தாரருமுனிவர்துதிசெய்தார்
வந்தணைந்ததிருத்தொண்டர்தம்மைவினைமாசறுத்து
அந்தரத்தாமரைபுரையுந்துணையடிகடொழுதிக்க
வந்தமிலாவானந்தப்பெருங்கூத்தரருள்புரிந்தார்.

### வசனம.

மறையோர்கள் ஆச்சரியப்பட்டார்கள் அரியமுனிவர்கள் தோத்திரஞ்செய்தார்கள் முடிவில்லாத ஆனந்தத்தாண்டவஞ்செய் தருளுகின்ற சபாநாதர் தமதுகட்டளையால் வந்தடைந்த திருநாளைப்போவார்க்குத் தீவினையாகிய களங்கத்தைநீக்கிய அழகாகிய தாமரைமலரையொத்த இரண்டுபாதங்களையுந் தொழுதிருக்கும்படி அருளசெய்தார்.

### விருத்தம்.

மாசுடம்புவிடத்தீயின்மஞ்சனஞ்செய்தருளியெழுந்
தாசின்மறைமுனியாகியம்பலவர்தாளடைந்தார்
தேசுடையழலவாழ்த்தித்திருநாளைப்போவாரும்
மாசகலமுயன்றுதிருநடங்கண்டுமகிழ்வுற்றார்.

### வசனம்.

தமக்குமுன்னிருந்த உடலமாகிய மாசுநீரும்பொருட்டு அக்கினியாகியதிருமஞ்சனமாடியெழுந்து குற்றமற்ற பிராமணமுனிவராகிநேட

சருடைய திருவடியை அடைந்தவராகிய திருநாளைப்போவாருடையப தத்தைப்புகழ்ந்து தீவினையாகியகயிறு அறும்படி தில்லைமூவாயிரவர்கள் போற்றிசெய்துக்கொண்டிருந்தார்கள

### வாழிவிருத்தம்.

பங்கயமாதர்வாழி பார்மகளுமையாள்வாழி
செங்கண்மாலயனுமவாழி தேவர்கந்தருவர்வாழி
தங்குநான்மறைகள்வாழி தாரணியரசர்வாழி
பொங்குநூல்வலர்வாழி போதமெந்நாளும்வாழி.

### மங்களம்.

ஓரடி - தரு - ௩ - ம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவாருக்கு ஜெயமங்களம் - எங்கள்
தில்லைமூவாயிரவர்க்குச் சுபமங்களம்

அநுபல்லவி.


இருடிகளிதுவரிதரிததிசயமென
விருகாமுடிமிசைமருவத்துதிசெய்கன
பரவுமும்பர்சம் பிரமங்கள்துதித்திடும்
பரமனுடும்மம் பலத்தினில்கதித்திடும் (திருநா)

சரணங்கள்.

திருவாசகமுந்திருக் கோவைபாடினவர்க்கும்
சீர்காழியிலுதித்துச் சிறந்தசம்பந்தருக்கும்
ஒருமாதிடத்திற்றாதுக் குகந்துவிடுத்தவர்க்கும்
ஒருவரொப்பிலாத்திரு நாவுக்கரசருக்கும
உரியமறைக்கு முயர்கலைகட்கும்
உரகர்பதிக்கு முவணபதிக்கும்
ஓதுசநதிரசூரியர் முனிவர்களுக்கும்
தீதிலாதபாவலர் முதலனைவர்க்கும் (திருநா)

நந்தனார்திவ்வியசரித்திரக்கீர்த்தனை

முற்றிற்று.





சிவமயம்.

# சிதம்பரக்கும்மி.

விநாயகர் துதி.

சீர்மேவுந்தில்லையம்பலத்தின் அன்பு
  சேரக்கும்மித்தமிழ்ப்பாடக்
கார்மேவுமேலைக்கோபுரவாசல்
  கற்பகப்பிள்ளையார்க்காப்பாமே. (க)

முக்குறுணிவிநாயகர்தோத்திரம்.

சர்க்கரைமோதகந்தேங்காயுங் - கொண்டு
  சந்நிதிமுன்பாகத்தான்படைத்து
முக்குறுணிப்பிள்ளையாரைவேண்டி
  முழங்கிக்கும்மியடியுங்கடி, (உ)

சுப்பிரமண்ணியர் துதி,

கோலமயிலின்முதுகேறி-வந்து
  கும்பமுனிககுவருட்செய்யும்

பாலசுப்பிரமணியன்பிராகாரத்தைப்
பாடிக்கும்மியடியுங்கடி. (௩)
கங்காதேவிக்குக்கைகூப்பி-யாருங்
கையிலெடுத்துள்ளேபானம்பண்ணி
தங்காமற்சிவகாமிசந்நிதி
சார்ந்துக்கும்மியடியுங்கடி, (௪)
கருதுஞ்சுருதிக்கெட்டாதசிவ
காமசௌந்தரிவாசலிலே
விருதுபேசியேசிறுகுழந்தைகள்
வேதம்படிக்குதுபாருங்கடி, (௫)
நாலுபுரத்திலுங்கோபுரமாமதி
நடுவிலெங்கணுமாளிகையாம்
காலோராயிரங்கொண்டொருமண்டபங்
கட்டியிருக்குதுபாருங்கடி, (௬)
தூயமறைமுதலாராய்ந்து - இங்கே
துலங்கியமூவாயிரவர்
ஞாயம்பொருந்தியதேவசபைவந்து
நாடிக்கும்மியடியுங்கடி, (௭)
சாந்துபொட்டுதளதளென-நல்ல
சந்தனவாடைகுமுகுமென
கூந்தலழகிகளெல்லாங்காலைக்
குவித்துக்கும்மியடியுங்கடி, (௮)
அஸ்தகடகம்பளபளென்ன-சொல்லும்
அரைநூன்மாலைதளதளென்ன
விஸ்தாரமாகநின்றுக்கொண்டுகையை
வீசிக்கும்மியடியுங்கடி, (௯)
கைதனில்விபூதிப்பையுங்கொண்டு-அவர்
கண்டத்தில்ருத்திராட்சமாலைபூண்டு
வைதீகபூசைசெய்கின்றதீட்சதர்
வாழக்கும்மியடியுங்கடி. (௧௦)
கோவிலுக்குநாலுபேர்களுண்டாம்-அவர்
குறித்தமுறையாய்ப்பூசைசெய்ய
பாவித்தபின்பவர்வேறொருவர்வசப்
படுத்துவாரொன்றேகும்மியடி, (௧௧)
ஆண்டுக்குள்ளாறபிஷேகமுண்டாம்-பின்னும்
அதிலேரண்டுதிருநாளாம்
வேண்டிவந்தார்கலிதீருமென்று
விரைந்துகும்மியடியுங்கடி, (௧௨)
பூமிப்புகழ்கதிடுந்தில்லைப்பதி-அது
பூலோககயிலாசமென்று
தாமரைப்பூவினில்வாழ்கின்றலட்சுமி
தாயார்சந்நிதிபாருங்கடி. (௧௩)

மூலஸ்தானத்தைக்கண்டாயே-நல்ல
முத்தியிதுவென்றுகொண்டாயே
காலெடுத்தாடியநிர்த்தசபேசனைக்
கண்டுதெரிசிப்போம்வாருங்கடி, (௧௪)

தில்லைமாகாளியோடாடிவர-அவள்
சித்தங்கலங்கித்தலைகுனிந்தாள்
வெல்லுவதெப்படியென்றொருகாலை
விண்ணிலெடுத்தார்பாருங்கடி, (௧௫)

நெற்றியில்வேர்வைமுத்துதிர்ந்து-மெத்த
நேர்த்தியதாய்ப்பரந்தோடிவர
பத்தியுடன்பொன்னம்பலவாணனைப்
பணிந்துக்கும்மியடியுங்கடி, (௧௬)

திக்கியென்றீசனடம்புரிய-மெய்த்
தேவர்கள்பூமழைதான்சொரிய
மத்தளங்கொட்டியகோபாலகிருஷ்ணனை
வாழ்த்திக்கும்மியடியுங்கடி, (௧௭)

சிதம்பரமென்றுசொல்லாமல்-விச்
சித்திரகூடமென்றுசொல்லி
நிதங்கொண்டாடுமங்கரர்கள்வந்து
நின்றிருக்கிருக்கிறார்பாருங்கடி, (௧௮)

காணிக்கைகொண்டுபோருங்கடி-இந்தக்
கனகசபையைப்பாருங்கடி
மாணிக்கவாசகர்புகுந்தவாசலை
மிதித்துக்கும்மியடியுங்கடி, (௧௯)

அன்னமுடன்பால்தேங்கனியும்-செய்யும்
அபிஷேகமுண்டெந்நாளும்
பொன்னம்பலந்தனிற்சந்திரமௌலியைப்
போற்றிக்கும்மியடியுங்கடி, (௨௰)

முத்தியளித்திடுஞ்சந்நிதிக்குச்-சொல்லும்
மேளமுந்தாளமுமேதுக்கடி
சத்தம்பெருகியகண்டாமணியோசை
சந்நிதிக்கேர்வையாம்பாருங்கடி, (௨௧)

புட்டுவடையுந்தேன்குழலும் மணைப்
புத்துருக்குநெய்சம்பாவும்
சட்டப்படித்தவருமலையன்
சந்நிதிக்கேர்வையாம்பாருங்கடி, (௨௨)

சுற்றிவந்துச்சிலையைப்பாருங்கடி-நல்ல
சோதிமயக்கம்பமொன்பதடி

தத்துவங்களதொண்ணூற்றாறுங்கூடிச்
சமைந்தசபையைப்பாருங்கடி, (உ௩)

பாவிகள்கண்ணுக்குச்செப்போடு-உற்றுப்
பார்த்தால்பத்தரைமாற்றுத்தங்கம்
கோவைபாடியமாணிக்கவாசகர்
கோவிலழகையும்பாருங்கடி, (உ௪)

அஞ்செழுத்தாலேமதிலுண்டாம்-பர
மானந்தக்கும்பமுமங்குண்டாம்
அஞ்செழுத்துப்படிக்கப்பாலேபிரம்
மானந்தத்தாண்டவம்பாருங்கடி, (உ௫)

கோடியுகந்தவஞ்செய்தாலு-மிந்தக்
கோவிலைப்பார்க்கமுடியாது
ஆடியபாதத்தைக்கண்டாருக்கினை
யாரொன்றுசொல்லுவோமபாருங்கடி, (உ௬)

நெற்றியிலேதிருநீறணிந்தும்-என்றும்
நிஷ்களமாகியசிற்சபையில
நித்திக்கவேசிவகாமத்தைப்பூசிக்குந்
தீட்சதக்கூட்டத்தைப்பாருங்கடி, (உ௭)

வெட்டவெளியிற்றிரைதிறந்து-யார்க்கும்
வேதியர்தீபமுங்காட்டிவர
சட்டமுள்ளசிவசிதம்பரமென்று
சாய்ந்துகும்மியடியுங்கடி, (உ௮)

தில்லைவெளியைக்கண்டேண்டி-என்
தேகம்பரவசங்கொண்டேண்டி
அல்லலறவாசல்கின்றேண்டி மிக்க
ஆனந்தத்தாண்டவம்பாருங்கடி, (உ௯)

ஆகாசலிங்கத்தைக்கண்டேண்டி-இங்கே
யாருமறியாமல்நின்றேண்டி
ஏகாந்தமாகவிருந்தேண்டிமன
தேகந்துலைந்ததுபாருங்கடி, (௩௰)

சித்தஞ்சிதம்பரமாச்சுதடி-முன்
செய்தவினையெல்லாம்போச்சுதடி
சுத்தப்பிர்ம்மமயமாச்சுதடியதைச்
சொல்லத்தெரியுமோபாருங்கடி, (௩௧)

சாதிபேதங்களற்றேண்டி-இந்தச்
சாஸ்திரமனத்தைவிட்டேண்டி

போதமயக்கந்தொலைத்தேண்டியின்று
புகுந்துகும்மியடியுங்கடி, (கூஉ)

காடுர்தைப்பூரணபூசத்திலே-ஏக
நாயகனற்குருவாரத்திலே
ஆடியநாடகம்பாம்புபுலிதனக்
காமென்றுகும்மியடியுங்கடி, (கூகூ)

சஞ்சிதக்கர்மங்கள்விட்டேண்டி-பவ
சாகறத்தையொழித்திட்டேண்டி
குஞ்சிதபாதத்தைத்தொட்டேண்டி-மனங்
கூர்ந்துக்கும்மியடியுங்கடி, (கூச)

சொல்லும்பொருளேயுமற்றுயோ-முன்
துன்பமனைத்துமொழித்தாயோ
அல்லும்பகலையுமற்றுயோ-தில்லை
யானந்தத்தாண்டவம்பாருங்கடி, (கூரு)

விதியெழுத்தைக்கிழித்தாச்சு-முன்
விட்டகுறைவந்துதொட்டாச்சு
மிதியமிர்தமுமுண்டாச்சுதென்று
வாழ்த்திக்கும்மியடியுங்கடி, (கூசு)

கோவிலுக்குள்ளேயனேகமுண்டு-அந்தக
குறிப்பறிந்ததைச்சொல்லுவீரோ
தேவரகசியம்பள்ளியைவந்து
தெளிந்துக்கும்மியடியுங்கடி, (கூஎ)

சண்டேஸ்வரர்தமைப்பாருங்கடி-அந்தச்
சந்நிதிக்கேகைகொட்டுங்கடி
மண்டலம்புகமுமழகர்வாசலில்
வாழிபாடுவோம்வாருங்கடி, (கூஅ)

வீட்டுக்கவலைகள்விட்டொழியார்-மெத்த
வீம்புகளபேசியேவீணலைப்பார்
பாட்டைப்படித்தாலுஞ்சிதம்பரம்வந்து
பலனதல்லவோபாருங்கடி, (கூகூ)

புத்திரபாக்கியமெத்தவுண்டாம்-பசும்
பொன்னுமணிப்பூஷணமுமுண்டாம்
பத்தியுடன்கோபாலகிருஷ்ணன்
பணியக்கும்மியடியுங்கடி. (சம)

சிதம்பரக்கும்மி-முற்றிற்று.

௨

சிவமயம்.

திருநாளைப்போவாரென்னும்

நந்தனார்திவ்வியசரித்திரக்கீர்த்தனைகள்முதலிய

# அகராதி.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அடக்கியாளு | ௪௮ | ஐயாவன்னடைக் | ௭௪ | சிதம்பரம்போ | ௨௪ |
| அஷ்டமாசித்தி | ௨௮ | ஐயேமெத்தக்க | ௮௭ | சித்தமிரங்கிற் | ௧௩௧ |
| அடித்ததுபோது | ௭௩ | ஐயோதெய்வமே | ௭௫ | சிவலோகநாதனே | ௧௭ |
| அம்பலவாணு | ௱௩ | ஒருநாளும்வாரா | ௨௰ | சின்னச்சாதியல் | ௮௬ |
| அம்பலவாண | ௱௨௯ | கட்டைக்கடைத் | ௧௦௮ | சுவாமிதெரிசன | ௩௪ |
| அரகராவென் | ௩௧ | கண்டேன்கலி | ௧௨௬ | செய்யுமுபாயம் | ௱௫ |
| அரகரசங்கரவ | ௯௬ | கனவினிலகண் | ௭௱ | ஜெயசெகதீசா | ௧௧ |
| அறிந்தறியாமலே | ௱௪ | கனவோகினே | ௧௧௮ | சேதிசொல்லவுங் | ௪௭ |
| ஆகமங்கள்வேதி | ௱௫ | கனகசபாபதிதெ | ௧௦௭ | சேரிமுற்றுஞ்சிவ | ௫௧ |
| ஆடியபாதாஇரு | ௧௦௩ | கிட்டநெருங்கி | ௧௨௫ | சொற்பனங்க | ௧௧௮ |
| ஆடியபாதத்தை | ௪௩ | குஞ்சிதபாதத் | ௧௩௦ | ஞாயநதானேநீர் | ௩௩ |
| ஆடுஞ்சிதம்பர | ௯௫ | குத்தமெத்தனே | ௮௨ | தள்ளுவரோள | ௧௧௬ |
| ஆன்னைக்கம் | ௩௨ | கெண்டாமணி | ௯௩ | தாதாதாநீஆடிய | ௧௦௩ |
| ஆதனூரிலொரு | ௯௭ | கொண்டாடிக்கி | ௧௦௦ | தாதெய்தெய் | ௧௩௦ |
| ஆருக்குப்பொன் | ௮௬ | கொள்ளிடக்கரை | ௯௧ | திருநாளைப் | ௧௨௨ |
| ஆனந்தக்கூத் | ௧௩௩ | கோபுரதெரிசன | ௯௨ | திருநாளைப்போ | ௧௩ |
| இதுநல்லசமய | ௧௧௪ | ௦சங்கரனைத்துதி | ௪௨ | தில்லைவலஞ் | ௧௧௩ |
| இதுவேதில்லைச் | ௯௫ | சந்நிதிவரலா | ௧௧௭ | தில்லைத்திலலை | ௯௪ |
| இதுதானேதில் | ௯௪ | சபாதரிசனங்கண் | ௱௧ | தில்லைச்சிதம்பர | ௬௧ |
| இந்தச்சடலம்வங | ௧௦௬ | சற்றேவிலகியிரு | ௨௦ | தில்லைவெளியி | ௪௪ |
| இந்தஜன்மங் | ௧௧௨ | சாதியில்தாழ்ந் | ௧௧௫ | தில்லைத்தலமெ | ௪௫ |
| இரக்கம்வராம | ௧௧௩ | சாதியிலுயர்ந்த | ௧௨௫ | தில்லையம்பலத்த | ௬௯ |
| இலவுகாத்தகிள் | ௭௩ | சிங்காரமான | ௧௮ | தில்லைச்சிதம்பர | ௫௬ |
| இவர்சிங்காரமா | ௯௮ | ௦சிதம்பரமேசி | ௫௫ | தில்லைத்தலத்தை | ௯௪ |
| இன்னம்வரக்கா | ௧௧௧ | சிதம்பரம்வந்து | ௯௬ | தெரிசனஞ்செய் | ௨௧ |
| உத்தாரந்தாரு | ௫௰ | சிதம்பரதரிசன | ௮௯ | தெரிசனம்கல் | ௧௦௯ |
| எந்தநேரமுநந்த | [illegible] | சிதம்பரம்போய் | ௮௮ | தெரிசிக்கவேணு | ௫௭ |
| எப்படிக்கெட் | ௯௫ | சிதம்பரம்போகா | ௬௧ | தேகம்வந்தவாறு | ௱௮ |
| எப்போவருவா | ௧௦௰ | சிதம்பரதரிசன | ௫௮ | தொண்டரைக் | ௧௨௨ |
| எல்லோருமவாரு | ௨௫ | சிதம்பரம்போ | ௫௩ | நட்டநடுவினே | ௫௯ |
| எனக்குமிரங்கி | ௧௨௩ | சிதம்பரதரிசன | ௨௫ | நந்தன்சரித்திரம் | ௧௨ |

பெயர். பக்கம்.

நந்தன்சிதம்பரம் கூய
நந்தனனந்தபரித அக
நந்தனரும்வந்தா சஅ
நந்தாவொருசே ருஉ
நந்தாவுனக்கிந்த ருஅ
நந்தாவுனக்கிந்த எஅ
நந்தாவுன்கனவி அரு
நமக்கினிநம்ப சஉ
நந்தாநீகுருவுப அஎ
நாமென்னசெய ருஎ
நாளைப்போகாம உச
நீசனைப்பிறந்தா யக
பத்திசெய்குவீ ருஅ
பத்திகள்செய்தா சய
பத்திபணணிக் ருரு
பறையாநீசிதம்ப ருக
பாடுவாய்மன ருரு
பார்த்துபிழையு சக
பித்தந்தெளியம கூய
பித்தனைப்போ கூய
புன்றுகியவிந்த சரு
பெரியகிழவன்வ ருகூ
பெரியோர்சினம் எரு
போதும்போது ௱உ
மற்றதெல்லாம் உக
மாங்குயில்கூவிய கூஉ
மாடுதின்னும்பு கூஅ
மார்கழிமாதத்தி கூஎ
மார்கழிமாதத்தி கூரு
மீசைநரைத்துப் ௬ரு
வருகலாமோவை ௱ச
வாருவாரோஅரு ௱ய
வருவார்வருவார் ௱கச
வருவாரோவரந் ௱கசு
வழிமறைத்திருக் யசு
வாராமலிருப்பா ௱ய
வாரிருக்குதிதோ யசு
வானோர்புகழ்தில் கூஎ
விருதாச்சென்ம ௱கசு
வேதம்படித்தது கூகூ



பெயர். பக்கம்.

வேதியரெல்லைப் அரு

கடுக்கா.

ஆரகாசிவ சய
குதித்தார் ௬க
வீரன் ருஎ

பெரிய கடுக்கா.

திருநாளைப்போ ருசு

தெண்டகம்.

தத்தித்புலிப்போ எய

சுலோகம்.

மெள்ளப்பேசி சுரு

தேவாரங்கள் ௱ருஉ

தரு-அகராதி,

அட்டாநந்தனே கூகூ
அதிசயமொன் ௱உய
அய்யாசொல்லு அரு
அரகாதிரிபுராந்த யகூ
ஆனந்தக்கூத்தா கூஉ
இனிஉன்குற்றத் எய
உன்னைதுமங் ௱உச
ஏதுக்கென்மீது கூஉ
கனநாதாசரணம் கூ
கொண்டாணடித்தா ௱
சிந்தனைசெய்து சரு
தடாகமொன்று ௬உ
திருட்டுத்தனமா எக
நந்தனாரேவுன்ற அக
பத்தியாக்ஆண கூரு
பொன்னம்பலவா கூச
யாகோற்பவமா ௱உகூ

நொண்டிச்சிந்து.

ஐயேவொருசேதி கூகூ
பழனமருங்கணையு கூ

சிந்து

ஆட்டாஇதென் ௱யஎ
அவர்க்காரு கரு



பெயர். பக்கம்.

இதுதானே ௱ரு
இவர்வெகு கரு
கனவிலுருவாகி ௱ருஉ
கீழேபுரவண்டழு ககக
கெண்டாமணி கூரு
கிலம்பேவடிக் கூரு
செய்யும்பணிவி யசு
நாளைப்போவே ருஉ
பழமருங்கனை கூ
பாப்பாரசாதி ருரு
பெரியோரிருக்கு ௱சு
பேணிச்சாருந் உரு

கண்ணி-அகராதி,

கனையெடாமல் எஎ
செந்தாமரைமலர் கரு
வாருங்கள உகூ

பத-அகராதி.

தேடித்தேடித் ௱உஉ

—o—

திபதை-அகராதி

ஆசைநேசராகும் கூக

—o—

தோடய- அகராதி,

திருவளர்தருமாத எ

—o—

மங்களம்.

திருநாளைப்போமா ருகூ
ஆதிமத்தியாந்தனு அ

சிதம்பரக்கும்மி.

சீர்மேவுந்தில்லை ௱ருஎ

—o—

ஆனைதக்களிப்பு.

காணுதகண்ணே கூஅ
காணமலிருக்க உரு
நந்தாநீசிவபத்த அச

—o—

| பெயர். | பக்கம் | பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| இருசொலலங்காரம் | ௯ | பாக்கியமீதென் | ௨௯ | துக்கடா, | |
| நந்தனார்-சிவனே | ௨௮ | ஏசல். | | ஹரஹர | ௫௬ |
| நந்தனார்-சிவதல | ௫௪ | புலையர்-பாப்பார் | ௨௯ | சட்டமாக | ௨௧ |
| நந்தனார்-தில்லைய | ௨௬ | புலையர்-ஆண்டிப் | ௩௰ | நந்திதூர | ௨௰ |
| நந்தனார்-தில்லை | ௬௫ | —o— | | மாளாப்பிறவி | ௨௨ |
| —o— | | கலித்துறை | | சவாயி | |
| அகவல். | | அண்டமான | ௱௧௪ | கலம்வந்து | ௧௮ |
| புலையர்-எல்லைப் | ௩௮ | மாவளர்தில்லை | ௭௯ | சிவலோக | ௧௯ |


கீர்த்தனைகள் அகராதி - முற்றிற்று.

## விருத்தங்களின் அகராதி.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். | பெயர். | பக்கம், |
|---|---|---|---|---|---|
| அடிமுடியோன் | ௭௫ | கறைபடுங்கண்ட | ௮௨ | தில்லையைக் | ௯௫ |
| அடியவர்கள் | ௮௯ | காலனுடல் | ௨௪ | தில்லைவாழுந்த | ௱௩௫ |
| அந்தணர்க | ௱௩௫ | காலமேவந்தா | ௪௮ | நாளைப்போவே | ௯௩ |
| அம்மையாந்தில்லை | ௧ | கைதொழுது | ௱௨௨ | நாற்பதுவேலி | ௬௧ |
| அய்யரோவாரு! | ௭௮ | கொள்ளையெனும் | ௪௧ | நின்றவரங் | ௧௰௭ |
| அல்லெனுங்குழ | ௬௭ | சங்கரன்றனை | ௮ | பகர்ந்துலகு | ௧௩ |
| அவப்பொழுது | ௮௭ | சாதியின்முறை | ௩௪ | படிபுகழ்தில்லை | ௫௰ |
| அறிவுமிகுந் | ௭௪ | சாதிகுலம் | ௪௯ | பண்ணையாவையு | ௨௰ |
| இத்தன்மைசர் | ௨௩ | சாதிபேதமுங் | ௧௧௨ | பித்தமது | ௬௰ |
| இத்தனைநாட் | ௩௯ | சாத்திரக்குப்பை | ௮௯ | புத்திசொல்லிக் | ௱௭ |
| இப்பரிசாயிருக் | ௯௯ | சிலையணிந்திடும் | ௬௮ | பொய்ச்சடலம் | ௬௪ |
| இப்பரிசாயிருக் | ௧௧௧ | செந்தீமே | ௧௨௯ | மறைக்கிழவ | ௧௨௧ |
| இப்பிறவிபோய் | ௧௧௯ | சீரோறுமிசை | ௨௰ | மறையவாகனை | ௧௨௭ |
| இரவுபகல் | ௪௯ | செல்கின்றபோழ் | ௱௬ | மனங்கண்ட | ௫௯ |
| [illegible]வண்ணமிர் | ௧௧௫ | சேரிவந்தவர் | ௭௪ | மாசுடம்பு | ௧௩௫ |
| இ[illegible]னந்தரு | ௬௧௭ | தம்பெருமான் | ௧௨௧ | வக்கணைக்காரா | ௨௯ |
| உயிரில்விடுபடை | ௧௫ | தவம்பெறு | ௩௨ | வணக்கமாய்ச் | ௬௩ |
| ஐயரோயம்பலவ | ௧௨௫ | தாரில்லாத | ௭௫ | வாட்டுவாருடல்ம | ௧௰௩ |
| ஒதியடிவீரர் | ௫௨ | திட்டமுடனடி | ௧௨௪ | வானமேவிய | ௮௮ |
| ஓங்காரமென்று | ௪௪ | திருமறையோர் | ௮ | மானிருந்த | ௭௨ |
| கடுவருந்தியும் | ௭௬ | திருப்புன்கூர்ச் | ௧௭ | வேதமோடறஞ் | ௮௭ |
| கதிரொருமுழ | ௫௯ | திருவுடையதில் | ௧௩௰ | வேதியரிப்படி | ௭௪ |
| கழனியைத்தேய் | ௪௪ | தில்லையில்போக | ௪௪ | வேதியரே | ௫௧ |


## திருநாளைப்போவாரென்னும்

நந்தனார்சரித்திரக்கீர்த்தனை - முற்றிற்று.